Second Book of
Lessons
Tamil Series
1857

Ci
XIV
291

N12<528669574 021
LS
ubTÜBINGEN

Wilh. Kapp
Buchbinderei& Papierh.
Tübingen Münzg.3

S

SECOND BOOK

OF

LESSONS

FOR THE USE OF SCHOOLS.

TAMIL SERIES.

PUBLISHED BY ORDER OF

THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION.

இரண்டாம் பாடப் புஸ்தகம்.

இ॰அ

துரைத்தனத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் கற்கிற மாணுக்கருக்காகச் செய்யப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE PUBLIC INSTRUCTION PRESS.

1857.

UNIV. BIBL. TÜBINGEN

bi XIV 291

பொருள் அடக்கம்.

பாடம்.	விஷயம்.	பக்கம்.
	௧. பிரிவு.	
	ராணி தர்மகுணவித்தை, புவன சாஸ்திரம், தாபரசங்கமவித்தை முதலியன.	

௩. பிரிவு.

நன்னெறிக்குரிய கதைகள்.

௪. பிரிவு.

கட்டுக்கதைகள்.

௫. பிரிவு.

பல பொருள்.

இரண்டாம் பாடப்

புஸ்தகம்.

முதல் மாதம்.

க - வது. புதுப் பாடப் புஸ்தகம்.

நெடுங்கணக்கு—அரிச்சுவடி.

பதம்..........மொழி.

நமக்கு ஒரு புதுப் பாடப் புஸ்தகம் கிடைத்திருக்கின்றது; அது மிகவும் சந்தோஷமான காரியம்; இதற்குப் பெயர் இரண்டாம் பாடப் புஸ்தகம். நாம் முன் படித்து முடித்தது முதற் பாடப் புஸ்தகம். இந்த இரண்டாம் பாடப் புஸ்தகம் முதற் பாடப் புஸ்தகத்தைப்பார்க்கிலும் அதிக பெரிது. இதிலே சிறந்த பல கதைகளும், அறிவு விர்த்திக்கு உபயோகமான அனேக பாடங்களும் இருக்கின்றன: ஆனாலும்

நாம் இந்தப் புதுப் பாடப் புஸ்தகத்தில் அடங்கிய பாடங்களை வாசிக்கத் தொடங்குமுன், பழைய புஸ்தகத்தில் வாசித்திருக்கிற சில பாடங்களைக்குறித்து நினைத்துப்பார்ப்போமாக.

நெடுங்கணக்குப் படித்து ஆனதின்மேல், அந்தந்தச் சொற்களின் எழுத்துக்களைக் கூட்டுவதற்குப் பழகினோம். ஈ, கை, மை முதலிய சில தனி எழுத்துக்களே பதங்களுமாயின. அவை மிகவும் எளிதான பாடங்கள். சிறிது காலத்தின்பின் வாக்கியங்களை வாசிக்கத் தொடங்கி, நூதனமாக அதிக அறிவைப் பெற்றோம். சரீரத்தின் உறுப்புகள், மிருகங்களின் சத்தங்கள், தொழில்கள், உபயோகம் முதலிய விஷயங்களைப்பற்றிய பாடங்கள் நல்ல பாடங்கள்.

பின்பு நாம் படித்த பாடங்கள் அத்தனை எளிதானவைகள் அல்ல. அவைகள் சிறு அட்சரங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகளைக்குறித்துப் பல முக்கியமான காரியங்களை அந்தப் பாடங்கள்மூலமாய் அறிந்தோம்.

தோட்டத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கின்ற பாடம் அதிக சிறந்தது. ஆத்மா, மோட்சம், நரகம் இவைகளைக்குறித்த பாடங்களை நினைக்கும்பொழுது, மிகுந்த அச்சம் உண்டாகின்றது. நாம் தீமை ஒன்றையும் செய்யவொண்ணாது. செய்தால், மோட்சத்திற் சேர்வது கூடாமற்போம்.

பின்பு வீடு, கடை, டாணு முதலியவைகளைப்பற்றிச் சில பாடங்களை வாசித்தோம். அதின்பின் காலம், பருவம், கிழமை, வாரம் என்பவைகளைக்குறித்துப் பல உபயோகமான காரியங்களை அறிந்தோம். உலோகங்களையும் நாணயங்களையும்பற்றிய பாடங்கள் விவரமாய் எழுதப்பட்டிருந்தன. மேகங்கள், ஊற்றுகள், ஆறுகள்முதலியவைகளைப்பற்றிய பாடங்கள் எவ்வளவு சந்தோஷகரமாயிருந்தன.

அறிவின் மேன்மையைக்குறித்து ஒரு பாடம் எழுதப்பட்டிருந்தது. அது மூன்றும் பகுதியின் முதற் பாடமென்று நினைக்கிறேன். காற்றைக்குறித்து எழுதப்பட்ட பாட

த்தில் எத்தனையோ நூதன காரியங்கள் சொல்லப்பட்டிருந்தன.

ஆகிலும், கடவுளைக்குறித்துச் சொல்லிய பாடம் ஒன்றே எல்லாவற்றிலும் முக்கியமானதாம். அவர் எத்தனை மகத்துவமுடையவர். அவரோ யாவையும் படைத்தவர்; எங்குமுள்ளவர்; எல்லாவற்றையும் அறிந்தவர்: அவர் நீதியும், நன்மையும், ஞானமுமுள்ளவர். முத்தையன் என்னும் சிறுவன் கடவுளுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளுக்கு அமைந்துநடந்தான்; ஆனதினால், அவன் ஒரு நல்ல பிள்ளை.

உ-வது. தலை.

சிரசு .. தலை. நிமிர்தல் .. உயர்தல்.

கடவுள் நம்மைச் சிஷ்டித்தாரென்பதாக முதற் பாடப் புஸ்தகத்தில் வாசித்திருக்கிறோம். மனிதராகிய நாம் வாசம்பண்ணுவதற்காக வீடுகளைக் கட்டுவதுபோல, கடவுள் நமது ஆத்மா வாசம்பண்ணுவதற்காகச் சரீரமாகிய வீட்டைச் சிஷ்டித்தார்.

நமக்கு ஒரு சரீரம் உண்டு; அதில் ஆத்மா வாசமாயிருக்கின்றது. சிரசு, உடல், கை, கால் முதலிய உறுப்புகள் இவைகளே நமது சரீரத்தின் முக்கியமான பங்குகளாம். சிரசே எண்சாண் உடம்பிற்கும் பிரதானம். அது நிமிரவும், குனியவும், வலப்புறம் இடப்புறம் திரும்பவும் தக்கதாயிருக்கின்றது: ஆதலால், கோபுரத்தின்மேல் ஏறிநிற்கின்ற ஒருவன் நான்கு திக்கிலும், மேலும், கீழும் பார்க்கக்கூடியது போல, நாமும் அந்தத் தலையின் உதவியால் அவ்வாறு பார்க்கக்கூடும். கபாலமும், முகமும் சிரசின் பகுதிகளாம். கபாலத்தின் மேற்புறத்தில் உரோமமும், அதின் உட்புறத்தில் மூளையும் இருக்கின்றன. பல எலும்புகளால் உருவாக்கப்பட்ட கபாலமானது, மிருதுவான மூளைக்குச் சேதம் வராமற் காக்கின்ற பலமான ஒரு கூடுக்குச் சமானமாயிருக்கின்றது.

முகத்தில் கண், மூக்கு, வாய், முகவாய்க்கட்டை என்னும் உறுப்புகளும், அதற்கு வலம் இடம் ஆகிய இரு பக்கங்களிலும் காதுகளும் உண்டு.

௩ - வது. நல்ல பிள்ளைகளின் இலட்சணம்.

தந்தசுத்தி . . பல்விளக்கல்.

நல்ல பிள்ளைகள் அதிகாலையில் எழுந்து, கடவுளைத் தொழுது, தந்தசுத்தி செய்து, கைகால் கழுவி, ஸ்நானம்பண்ணுவார்கள்; பின்பு வீட்டிலுள்ளதைச் சாப்பட்டு, சுத்தமான வஸ்திரம் உடுத்தி, பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காய்ப் போவார்கள் ; அங்கே இடைவிடாமல் சாக்கிரதையாய்ப் பாடங்களைப் படித்து, எழுதவேண்டிய சட்டங்களை எழுதி, பார்க்கவேண்டிய கணக்குகளைப் பார்த்து, உபாத்தியாயர் சொல்லுகிறதைக் கருத்தாய்க் கேட்டு, மனதில் வைப்பார்கள். மேலும், நல்ல பிள்ளைகள் தங்கள் புஸ்தகங்களை மிகவும் பத்திரமாய்க் காப்பாற்றி, பள்ளிக்கூடத்திற் சந்தடிசெய்யாமல், பாடம் ஒப்பிக்கும்போது நிறுத்தி வாசித்து, ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாய் உச்சரிப்பார்கள்; பழைய பாடங்களை அடிக்கடி வாசித்து, தெரியாதவைகளைக் கேட்டு அறிந்து, கல்வியிலே தேறுவார்கள். அன்றி

யும், பள்ளிக்கூடத்தின் சட்ட திட்டத்தின்ப
டியே படித்து முடிந்தபின்பு, மற்றப் பிள்ளை
களோடே விளையாடி, தாய் தகப்பன்மாருக்
குக் கீழ்ப்பணிந்து, அவர்கள் சொற்கேட்டு,
அவர்களுக்குப் பிரியமாய் நடந்துகொள்வா
ர்கள்.

ச - வது. கண்.

உறுப்பு..அங்கம். விஷயம்..அறியப்படு பொருள்.
அந்தகர்..குருடர்.

நமது கண்கள் ஒரு வீட்டின் பலகணிவா
யில்களுக்குச் சமானமாயிருக்கின்றன. நம
க்கு நான்கு புறத்திலும் இருக்கின்ற வஸ்து
களைக் கண்கள்மூலமாய்ப் பார்க்கிறோம். கண்
ணானது மிகவும் சிறிய ஒரு உறுப்பாயிருந்
தும், அதிக பெரிய வஸ்துகளையும் காண்கி
ன்றது. ஒரு படத்தில் உருவங்கள் எழுதப்
பட்டிருப்பதுபோல, கண்ணில் விஷயங்கள்
பதிந்தவைகளாகத் தோன்றும். அந்தந்த வி
ஷயங்கள் உருவத்திலும், வர்ணத்திலும், அள

விலும் எவ்வளவும் தவறுமற் கண்ணிற் பதிந்தவைகளாக மனதுக்குத் தோன்றும்.

கண்கள் முகத்திலுள்ள இரண்டு சிறு குழிகளில் இருக்கின்றன; அவைகளுக்குக் காவலாக நான்கு புறத்திலும் எலும்பு இருக்கின்றது; கண்களுக்குமேலே வில்வளைவான இரண்டு புருவங்கள் உண்டு: இமைகள் கதவுக்கு ஒப்பாயிருக்கின்றன. அவை தூசும், கூச்சம் உண்டாக்கத்தக்க கன ஒளியும் கண்ணுக்குட் செல்லாதபடி விலக்குகின்றன. இராக்காலத்தில் நாம் தூங்கும்பொழுது, அவை கண்ணை மூடுகின்றன. கண்மயிர் கண்ணுக்குச் சேதம் உண்டாக்கத்தக்க தூசுமுதலியவைகள் அதற்குட் செல்லாதபடி காக்கின்றது. ஒளியானது மிகவும் முக்கியமான ஒரு பேறு. இதை நினைத்து, நாம் எப்பொழுதும் கடவுளுக்குத் துதிசொல்லப் பாத்தியப்பட்டவர்களாயிருக்கிறோம். கண் தெரியாதவர்களுக்கு அந்தகரென்று பெயர். அவர்களுடைய நிலைமை அதிகம் பரதபிக்கப்படத்தக்கதாயிருக்கின்றது. நாம் எப்பொழுதும் அந்தகரிடத்திற் பட்சமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ரு - வது. சோம்பேறிப் பையன்.

ஒரு பட்டணத்திலே சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தகப்பன் அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினான். அந்தப் பையன் படிப்பில் அதிக விருப்பமில்லாமல், தன் விளையாட்டிலேயே விருப்பமுள்ளவனாய், பள்ளிக்கூடத்திற்குப் போகப் பிரியமில்லாதவனாயிருந்தான்.

ஒரு வண்டு புஷ்பங்கள்தோறும் பறந்து திரிகிறதை அவன் பார்த்து, "அழகான வண்டே, நீ என்னுடன் விளையாட வருவையா?" என்றான். அதற்கு வண்டானது, "அப்பா, நான் சோம்பலாயிருக்கக்கூடாது; நான் தேன் சேர்க்கவேண்டும்" என்று சொல்லிப் போய்விட்டது.

பின்பு அவன் ஒரு நாயைக் கண்டு, "நாயே, நீ என்னுடன் விளையாட வருவையா?" என்றான். அதற்கு நாயானது "அப்பா, நான் சோம்பலாயிருக்கக்கூடாது, என் எசமான் வீட்டுக்குக் காவல்காக்கும்படி போகிறேன்" என்று

சொல்லிப் போய்விட்டது. அப்புறம் கூடு கட்டுகிற ஒரு குருவியைக் கண்டு, "குருவியே, நீ என்னுடன் விளையாடவா" என்றான். அதற்குக் குருவியானது, "நான் சோம்பலாயிருக்கக்கூடாது; எனக்கு வேலை இருக்கிறது" என்று சொல்லிப் போய்விட்டது.

அப்போது அந்தச் சிறு பையன், "இது என்ன, ஒன்றாவது சோம்பலாயிருக்கவில்லையே; இப்படியிருக்க, நானும் சோம்பலாயிருக்கக்கூடாது" என்று நினைத்து, அதுமுதற் சீக்கிரமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போய், தன் பாடங்களைச் சாக்கிரதையாய்ப் படித்துக்கொண்டுவந்தான். அப்பொழுது அவனுடைய உபாத்தியாயர் அவனை நல்ல பிள்ளையென்று சொன்னார்.

---

௬ - வது. மூக்கும் வாயும்.

மோத்தல்..மணத்தல். கறித்தல்..கடித்தல்.
சதைத்தல் .. நசுக்குதல்.

மூக்கு வாசனைகளை மோந்து அறிவதற்குரிய கருவியாம். மூக்கானது வாய்க்குச் சமீபத்

திற் சற்று மேலே இருக்கின்றது. அது நாம் துர்க்கந்தமான போசனத்தை உட்கொள்ளா தபடி நமக்கு உணர்த்தும். அதின் மேற்பங்கில் எலும்பு இருக்கின்றது; அதின் கீழ்ப்பங்கு எலும்பு இல்லாமல் அதிக மிருதுவாயிருக்கின்றது. அதற்கு இரு புறத்திலும் இருக்கின்ற துவாரங்கள் நாசித்துவாரங்கள் எனப்படும்.

நாம் பேசுவதும் உண்பதும் வாயினலே. உதடுகள் பல்லுக்குக் காவலாயிருப்பதுமன்றி, வாய்க்குட் சென்ற போசனத்தை விழாதபடி செய்வதற்கும், பேசுவதற்கும் உதவியாயிருக்கின்றன. நமக்கு முப்பத்திரண்டு பற்கள் உண்டு. அந்தப் பற்கள் உள்வாயின் ஓரத்தில் மேலும் கீழும் ஒழுங்காய் முளைத்திருக்கின்றன; கடினமாகிய போசனத்தைக் கறிப்பதற்கு முனவாய்ப் பற்கள் கூர்மையாகவும், அதைச் சதைப்பதற்கு அடிவாய்ப் பற்கள் அகலமாகவும் இருக்கின்றன. நாம் உண்கிற போசனத்தின் உருசியை நாவினல் அறிகிறோம்.

முன்பு நாம் முதற் பாடப் புஸ்தகத்தில் வாசித்திருக்கிறபடி, மிருகங்கள் வெவ்வேறு சத்தங்கள் பண்ணும்: ஆயினும், அவைகளு க்குப் பேசத்தெரியாது. மனிதன் மாத்திர மே தன் உள்ளத்தின் நினைவுகளைப் பேச்சி னாலே தெரிவிக்கத்தக்கவன். பேசக்கூடாத மனிதருக்கு ஊமைகள் என்று பெயராம்.

எ - வது. மெய்மை.

சபாபதி என்பவன் ஒரு நாள் வீட்டுக்குள் ளே பந்து ஆடிக்கொண்டிருந்தான்; அந்தப் பந்து மாடத்தில் இருந்த விளக்கின்மேற் பட்டு, அந்த விளக்கு உடைந்துபோய்விட் டது. சபாபதி மிகவும் பயந்து, தன் தாயா ரிடத்திற் போய், "அம்மா, பந்தடித்துக் கொண்டிருந்தேன், அந்தப் பந்து பட்டு, வி ளக்கு உடைந்துபோய்விட்டது" என்று சொ ன்னான். அதற்கு அவன் தாயார், தன் மக ன் மெய்யைச் சொன்னதற்காக அதிக சந் தோஷப்பட்டு, "அது போனாற் போகட்டும், நீ நிசத்தைச் சொன்னாயே, அதுதான் சரி" என்

று சொல்லி, சபாபதிக்கு ஒரு அதிரசம் கொடுத்தாள். ஆதலால், நாம் என்ன தப்பிதம் செய்தாலும், சத்தியத்தைச் சொல்வோமானல், மன்னிக்கப்படுகிறதுமல்லாமல், பிரயோசனமும் அடைவோம்.

அ - வது. காது.

உருவத்தைக் காண்பதற்குக் கண்ணும், ஓசையைக் கேட்பதற்குக் காதும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. உருவங்களையும் வர்ணங்களையும் கண் அறியும்; ஓசையைக் காது அறியும். காதானது மிகவும் விந்தையான விதமாய் உருவாக்கப்பட்டிருக்கின்றது. காதின் புறம்பான பகுதி ஓசையின் அணுத்திரளை ஒன்ருகச் சேர்த்து, உள்ளிருக்கின்ற சிறு துவாரத்திற் செலுத்துகின்றது. இவ்வாறு நாம் ஓசைகளைத் தெளிவாய் அறிகிறோம். செவியுணர்வு இல்லாதவர்களுக்குச் செவிடர் என்று பெயராம். சிலர் செவிடரும் ஊமைகளுமாயிருக்கிருர்கள்: ஆயினும், அவர்களில் அனேகர் பல விதக் கைச்சமிக்கைகளினலே தங்

கள் நினைவுகளைப் பிறருக்குத் தெரிவிப்பது மன்றி, பிறர் பேசுவதையும் அறிந்துகொள்ளுகிறார்கள். குருடர் வாசிக்கப்பழகுவதற்காகப் புஸ்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அந்தப் புஸ்தகங்களின் அக்ஷரங்கள் காகிதத்திற்குட் பதிந்திராமல், அச்சுக்கட்டையின் எழுத்துகளைப்போல மேல் எழும்பியிருக்கும். குருடர் அவைகளைத் தங்கள் விரனுனியால் தடவி வாசிப்பார்கள். மேலும் அவர்கள் வெவ்வேறு வர்ணங்களையும் அவ்வாறு பரிசத்தால் அறிந்துகொள்வார்கள்.

மனிதன் (சரீரத்தில் வாசமாயிருக்கின்ற ஆத்மா) கண்ணாற் பார்க்கிறான், காதாற் கேட்கிறான், நாசியால் மோக்கிறான், நாவாற் சுவைக்கிறான், சரீரத்தாற் பரிசிக்கிறான். இந்த ஐம்பொறிகளுக்கு ரூபம், சத்தம், கந்தம், ரசம், பரிசம் ஆகிய ஐம்புலன்கள் உண்டு.

கூ - வது. பொய்.

பொய்சொல்வது மிகவும் இழிவுள்ள காரியம். பொய்சொல்லத் துணிகிறவன் அநியா

யம், களவுமுதலிய தோஷங்கள் செய்வதற்கு அஞ்சமாட்டான். மேலும் அப்படிப்பட்டவன் நிசத்தைச் சொல்லுகிறபொழுதும் ஒப்புக்கொள்ளப்படமாட்டான். அற்பப் பிரயோசனத்துக்காக உள்ளதை மறைக்கிறவனும், இல்லாததைச்சொல்லுகிறவனும் தங்கள் சொந்த நன்மையைக் கெடுக்கிறார்கள். சத்தியத்தைப் பேசுகிறவனுக்குத் தன் காரியத்தில் நஷ்டம் வந்தாலும், அவன் உள்ளத்திற் சந்தோஷம் உண்டாகும். மற்றவர்களும் அவனை நம்பி மரியாதைசெய்வார்கள்: ஆகையால், பிள்ளைகளே, மற்றவர்களாலே யோக்கியர்களென்று மதிக்கப்படவும், உலகத்திலே உங்களுக்குக் காரியம் சித்திக்கவும்வேண்டுமானால், சத்தியமே செயமென்று எப்பொழுதும் நினைவுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள். இடைப்பையன் ஒருவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டுவருங்காலத்தில் விளையாட்டாக "ஓகோ புலிவருகிறது, புலிவருகிறது," என்று கூவுவான். உடனே ஊரார் எல்லாரும் வெளியே ஓடிவரும்போது, இவன் அவர்களைப் பார்த்துச் சிரிப்பான். இப்படி இரண்டொரு தரம்

செய்தபின்பு, ஒரு நாள் மெய்யாய்ப் புலி வந்தது. இவன் அப்படியே கூவியும், ஊரார் அவன் பரிகாசம்பண்ணுகிறுனென்று நினைத்து, ஒருவரும் ஒத்தாசைபண்ண வராததினுலே, புலி அவனையும் ஆடுகளிற் சிலவற்றையும் கொன்றுபோட்டது.

பொய்யர் நிசத்தைச் சொல்லுகிறபொழுதும் மற்றவர்கள் நம்பமாட்டார்கள்: ஆதலால், நாம் விளையாட்டுக்காகிலும் பொய்சொல்லக்கூடாது.

---

௧௦ - வது. உடல்.

இரத்தாசயம். . இருதயம்.

உடல் என்பது சரீரத்தின் பகுதிகளில் அதிக பெரிது; தோள், மார்பு, வயிறு, முதுகு இவைகள் அதைச் சேர்ந்த பகுதிகளாம்.

உடலின் மேற்பகுதிக்கு மார்பு என்று பெயர். மார்பின் வலமும் இடமுமாகிய இரு பக்கங்கள் விலா எனப்படும். நாம் உள்வாங்குகிற சுவாசம் மார்புக்குட் செல்லுகின்றது.

நமது மார்பின் இடது பக்கத்தின் அடிப்புற
த்திற் கைவைத்துப்பார்த்தோமானல், இரத்
தாசயத்தில் இரத்தம் துடிப்பது தெரியவரும்.
இரத்தாசயமே உயிருக்கு ஆதாரமாயிருக்கி
ன்றது. அதிலிருந்து சரீரத்தில் எங்கும் இர
த்தம் ஓடுகின்றது. நாம் உண்கிற போசனம்
போய்ச்சேருகின்ற இரைப்பை மார்பின் கீழ்
இருக்கின்றது. நடு முதுகில் நெடுக இருக்கி
ன்ற எலும்புக்கு முதுகெலும்பு என்று பெ
யர். சரீரத்தைத் தாங்குவதற்காக முதுகெலு
ம்பு அதிக பலமுள்ளதாய் உண்டுபண்ணப்ப
ட்டிருக்கின்றது அது எளிதாய் வளையத்தக்க
தாக உச துண்டெலும்புகள் ஒன்ருகத் தொடு
க்கப்பட்டிருக்கின்றன. விலாவெலும்புகள் மு
துகெலும்புடனும், அவைகளிற் சில மார்பெ
லும்புடனும் தொடுக்கப்பட்டிருக்கின்றன. உ
டலின் அடிப் பகுதி வயிறெனப்படும்.

கக--வது. கல்வி.

சாக்கிரதை . . விழிப்பு. பயிலுதல் . . பழகுதல்.

கல்வியிலே தேறவேண்டுமானல், இடைவி
டாமற் படிக்கவேண்டும். ஒரு நாள் சாக்கிர

தையாயும், மற்றொரு நாள் சோம்பலாயும் இ ராமல், எப்பொழுதும் உன் திராணிக்கு ஏற்ற படி கல்வியிற் பயிலவேண்டும். சோர்வு அ டையாமல், நாடோறும் கிரமமாய்க் கொஞ் சமானாலும் நன்றாய்ப் படிக்கிறவன் எப்படி யும் அறிவுள்ளவனாவான். தான் அதிகக் கெட் டிக்காரனென்று நினைத்து, ஒவ்வொரு வேளை யில் மாத்திரம் படிக்கிறவன் அதிகமாய்த் தே றமாட்டான். அதற்குத் திருஷ்டாந்தம்—ஒரு ஆமையும் முயலும் இன்ன இடத்திற்கு நம்மி ல் யார் சீக்கிரமாய்ப் போய்த் திரும்புகிறது பார்ப்போமென்று பந்தயம்போட்டுக்கொண் டன. ஓடின முயலானது துவக்கத்தில் அதிக வேகமாய் ஓடி, ஆமை வெகு தூரத்திலே பின் வருவதைக் கண்டு, இப்போது கொஞ்சம் நித் திரைபண்ணி இளைப்பாறலாமென்றும், ஆமை கிட்ட வந்தவுடனே எழுந்து ஓடலாமென்றும் எண்ணி, வழிப்பக்கத்தில் ஒரு செடி மறைவிற் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணிற்று. ஆ மை ஓரே நடையாய் மெல்ல மெல்லப் போய், குறித்த இடத்தைச் சேர்ந்து, திரும்பி, முயல் நித்திரைதெளிந்து ஓடி வருவதற்குள்ளாகப்

புறப்பட்ட இடத்தில் வந்து பந்தயத்தைக் கெலித்தது.

கஉ--வது. அவயவங்கள்.

அவயவம். . உறுப்பு. அகங்கை. . உள்ளங்கை. கணுக்கால். . பரடு.

சரீரத்தின் மேற்பகுதியிலுள்ள அவயவங்கள் புயம், கை, கைவிரல் இவைகளே. நமக்கு இரண்டு புயங்களும், இரண்டு கைகளும், பத்துக் கைவிரல்களும் உண்டு. கையின் உட்பகுதிக்கு அகங்கையென்று பெயர். மூடின கைக்குக் கரமுட்டியென்று பெயர்.

கையானது சரீரத்திற்கு ஏவல்செய்கின்ற உண்மையான பணிவிடைகாரனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அது தான் செய்கிற வேலைகளுக்குத் தகுதியான விதமாய் உருவாக்கப்பட்டிருக்கின்றது. கையிலும் விரல்களிலும் பல பொருத்துவாய்கள் இருப்பதினால், அவைகள் எளிதாய் வளையும்.

சரீரத்தின் கீழ்ப் பகுதியிலுள்ள அவயவங்கள் தொடை, கால், பாதம், கால்விரல் இவை

களே. தொடைக்கும் காலுக்கும் இடையில் இருக்கின்ற பொருத்துவாய் முழந்தாள் என ப்படும். காலுக்கும் அடிக்காலுக்கும் இடை யிலுள்ள பொருத்துவாய் கணுக்கால் எனப் படும். சரீரத்தின் மேலும் கீழுமான அவய வங்கள் ஒவ்வொன்றிற்கும் ஏறக்குறைய முப் பது எலும்புகள் உண்டு.

கங--வது. நரியும் திராட்சப் பழமும்.

வெகுமானம்...வெகுமதி.

ஒரு நாள் ஒரு நரி இரைக்காகத் திரியும் போது, நல்ல திராட்சப்பழக்கொத்து ஒன்று எதிர்ப்பட்டது. அதைப் பறிக்கும்படியாக அந்த நரி வேண்டியமட்டும் குதித்தும் எட் டவில்லை. அப்போது அது "சீ புளிக்குமே" என்றுசொல்லிப் போய்விட்டது.

ஓநாயும் நாரையும்.

ஒரு ஓநாய் ஒரு ஆட்டுக் குட்டியைக் கொ ன்று மிகவும் துரிதமாய்த் தின்றதினாலே, ஒரு எலும்பு தொண்டையிற் குத்திக்கொண்டது.

அதை எந்த வகையிலும் தானுய் எடுக்கக் கூடாமல் ஒரு நாரையைக் கண்டு, "உன் கழுத்தை நீட்டி என் தொண்டையில் அகப்பட்டிருக்கிற எலும்பைப் பிடுங்கிப்போடும்படி தயவுசெய்தாற் பெரிய வெகுமானத்தைக் கொடுக்கிறேன்" என்றது. அந்தப்படியே நாரை எலும்பைப் பிடுங்கி வெகுமானத்தைக் கேட்டதற்கு நாயானது, "அப்பாலே போ, உன் தலையை அப்போதே கடித்துப் போடாமல் விட்டதே பெரிய வெகுமானம்" என்று சொல்லிற்று.

கச--வது. கையும் காலும்.

திஷ்டாந்தம்..அத்தாட்சி. குழிதல்..குழியாதல்

நமது கையிலும் காலிலும் திஷ்டாந்தப்பட்டிருக்கிற கடவுளுடைய அளவற்ற ஞானத்தையும் நன்மையையுங்குறித்து நீ எப்பொழுதேனும் நினைத்தாயா? சரீரத்தின் இந்த இரண்டு உறுப்புகளையுங்குறித்துச் சற்றுவேளை யோசித்துப்பார்ப்போம். முன்கையின் நுனியில் விரற்கை இருக்கின்றது. அதின் உப

யோகத்திற்குத் தகுதியான இடம் அதுவே. அதின் உருவத்தைப் பார்த்தால் ஆச்சரியத்துக்கு இடமாயிருக்கின்றது. நாம் நமது கைகளைக் குழிந்திருக்கும்படி பிடிக்கக்கூடும். மனது ஒன்றை நினைக்க, அதை விரல்கள் யாவும் ஒன்றாய்க் கூடியாவது, தனித்தாவது, ஒன்றின் பின் ஒன்றாயாவது செய்யும். பிடித்தற்கு உரிய வஸ்துக்களைப் பிடிப்பதற்குப் பெருவிரல் உபயோகப்படுகின்றது. விரல்கள் எத்தனை மெல்லியவைகளும் எளிதில் மடங்கத்தக்கவைகளுமாய் இருக்கின்றன.

பாதமானது சரீரத்தின் அடிப்புறத்திற் கணுக்காலுடன் பொருந்தி மடங்கியிருக்கின்றது. அது தடித்து முரணாயிருக்கின்றது. உள்ளங்கால் விற்போல் வளைந்திருக்கும். பாதத்தின் படம் பரந்து தட்டையாயிருக்கும். காலொன்றுக்கு விரல்கள் ஐந்து. அவைகள் குறுகிப் பருத்திருக்கும்.

பிடித்து, அல்லது தொட்டுச் செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் கையினாற் செய்யப்படும். சரீரமானது நிற்றல், நிமிர்தல், அசைதல் ஆகிய இந்த மூன்று நிலைமைகளில்

இருக்கும். இந்த நிலைமைகளிற் சரீரத்திற்குப் பாதமே ஆதாரமாம்.

சரீரத்தின் உறுப்புகள் எல்லாவற்றுள்ளும் கை கால் இரண்டும் மிகவும் அதிசயமானவைகளாம். அவைகளின் உருவம், ஸ்தானம், உபயோகம் என்பவைகளைக்குறித்து எத்தனை அதிகமாய்த் தியானிக்கிறேமோ, அவைகளை உருவாக்கின கடவுளுடைய ஞானமும், நன்மையும், வல்லமையும் அத்தனை அதிகமாய்த் தெரியவரும்.

கரு--வது. காக்கையும் நரியும்.

ஒரு நாள் ஒரு காகத்தின் வாயிலே நல்ல இரை அகப்பட்டது. அத்தோடே அது மரத்தின்மேற் பறந்து உட்காந்தது. ஒரு நரி இதைக் கண்டு மரத்தின்கீழே வந்து, ஓ "பட்சியே, உன் உருவம் இவ்வளவு அழகாயிருக்கிறதே, உன் சத்தம் எத்தனை இன்பமாயிருக்குமோ, அதைக் கேட்க ஆசையோடே இருக்கிறேன்" என்றது. அதனாற் காகம் கர்வங்கொண்டு கொஞ்சம் பாடும்படியாக வாயைத் திறந்தது.

உடனே இரை கீழே விழ, நரி அதை எடுத்துக் கொண்டுபோய்விட்டது.

நல்ல மறுமொழி.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளை மற்றொருவனை நோக்கி, "சிநேகிதனே, நீ கடவுள் இருக்கிற இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்" என்றான். அதற்கு அவன் "அப்பா தோழா, நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு இரண்டு பழம் தருவேன்" என்றான். இவர்களிற் பின் கேட்டவன் புத்தி பெரியது.

இரண்டாம் மாதம்.

கசு--வது. கைகள்.

முழி..பொருத்து. சுட்டுதல்..குறித்தல்.

கையானது எத்தனை ஆச்சரியமான ஒரு உறுப்பு. கையின் உட்புறத்திற்கு அகங்கையென்று பெயர். புறங்கையில் விரலின் அடிமுழிகளும், மறு முழிகளும், விரல்களும், விரல் நுனியில் நகங்களும் உண்டு. நகமானது மிருகத்தின் கொம்புத்தன்மையுள்ளது. கை

யொன்றுக்கு ஐந்து விரல் உண்டு. அவ்வை ந்து விரல்களுக்கும் பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் என்று பெயராம். விரல்களெல்லாம் ஒரே அளவா னவைகளல்ல. கையென்னும் உறுப்பு மிக வும் ஆச்சரியமான விதமாய் உருவாக்கப்பட் டிருக்கின்றது. அது பல விஷயங்களில் உப யோகப்படுகின்றது. மனுஷருடைய கையி னுல் எத்தனை அதிசயமான வேலைகள் செய் யப்படுகின்றன. அவைகளை எண்ணித்தொலை யாது. விதம் விதமான யந்திரங்கள், சீலைக ள், பதிமைகள், படங்கள், கட்டடங்கள், மற் றும் எத்தனையோ வேலைகள் மனுஷனுடைய கையினுற் செய்யப்படும்.

கஎ--வது. பூமி.

பரவை..அகலம். யாத்திரை..பிரயாணம்.
சுவைத்தல்..உருசித்தல்.

நாம் வாசமாயிருக்கின்ற இந்தப் பூமி மிக வும் பருத்துப் பந்துபோலத் திரண்ட வடிவு

ள்ளதாயிருக்கின்றது. அதிற் சில பகுதி நீரும், சில பகுதி நிலமுமாயிருக்கின்றது.

நிலத்தில் அங்கங்கே உயர்ந்த மலைகளும், பதிவான பள்ளங்களும் உண்டு. ஒரு பீடம்போல் எங்கும் ஒத்திருக்கின்ற இடங்கள் சமவெளிகள் எனப்படும்.

அந்த மலைகளும், பள்ளநிலங்களும், சமவெளிகளும் மண்ணால் மூடப்பட்டிருக்கும். அவைகளிற் பல வகையான மரங்கள், விதம் விதமான புஷ்பங்கள், புல் பூண்டுகள் இவை எல்லாம் செழித்து உண்டாவதினால், பூமி இத்தனை சிறப்புள்ளதாகத் தோன்றுகின்றது.

பூமியின் மேற்புறத்திலுள்ள நீர் ஒன்றாகச் சேர்ந்து பரந்து நிலத்தைச் சூழ்ந்திருக்கின்றது. இப்படிச் சேர்ந்த நீர்ப்பரவையானது சமுத்திரமென்றும், கடலென்றும் சொல்லப்படும். சமுத்திரத்தின் அலைகள் புரண்டுவந்து மோதுகின்ற தரையோரம் கரையெனப்படும். சமுத்திரமானது கரைகடந்து பூமியில் எங்கும் பெருகுமானால், பூமியும் அதிலுள்ள யாவும் சமுத்திரத்தில் முழுகிப்போம். அப்படி அது கரைகடந்துவருகிறதில்லை.

மனுஷர் கப்பல் ஏறி, சமுத்திர வழியாகப் பூமியைச் சுற்றி யாத்திரைசெய்திருக்கிறார்கள்.

சமுத்திரத்தின் நீர் உவராயிருக்கின்றது. அது குடிப்பதற்கு ஆகாது. அந்த நீரினால் உப்பு விளைகின்றது. உப்பு மிகவும் உபயோகமான வஸ்து. அது நாம் உண்கிற போசனபானங்களைச் சுவைக்கும்படி செய்கின்றது.

குடிப்பதற்கு ஆறுகளிலும், நீர்க்கால்களிலும், ஏரிகளிலும், குளங்களிலும் நல்ல ஜலம் உண்டு. அதை நமக்குக் கடவுள் கொடுத்திருப்பது மிகவும் பெரிதான நன்மையாம்.

ஆறு குளம் இல்லாத சிறிது இடங்களிலே தண்ணீர் பூமியின்கீழ் ஆழமாயிருக்கின்ற மண் கண்டத்திலும், கல்லிலும் ஊற்றுகளாய் ஓடுவதினால், அவ்விடங்களிற் சஞ்சரிக்கின்ற மனுஷர் தாழ்வான கிணறுகளைத் தோண்டி, சாலினாலும் தோண்டிகளினாலும் தண்ணீர் மொண்டு ஸ்நான பானம் பண்ணுவார்கள்.

கஅ--வது. சிங்கமும் சுண்டெலியும்.

ஒரு சுண்டெலி வனத்தில் உலாவித் திரிந்த பொழுது, மரத்துநிழலிலே படுத்துத் தூங்கின ஒரு சிங்கத்தின்மேல் தற்செயலாய் இடறிவிழுந்தது. உடனே சிங்கமானது அருண்டு அதிக மூர்க்கத்துடனே, "அடா, அற்பப்பயலே, நீ என்னை யாரென்று எண்ணிக் கொண்டாய்?" என்பதாகச்சொல்லி, அதைக் காலால் நசுக்கிக் கொல்லும்படி பார்த்தது. அப்பொழுது அதற்கு அஞ்சி, அறிவுமயங்கிக் கிடந்த அந்த ஏழைச் சுண்டெலி சிங்கத்தைப் பார்த்து, "அய்யா மிருகராஜனே, அற்ப பிராணியாகிய என் உயிரை வாங்குவது உங்களுக்கு ஏற்குமா?" என்றது.

சிங்கம் சுண்டெலி பட்ட துயரத்தைக் கண்டு பரிதபித்து, அதற்கு யாதொரு ஊறுபாடும் செய்யாமல் விட்டது. அப்பொழுது அந்த நன்றியுள்ள சுண்டெலியானது, "ஓய் மிருகேந்திரா, நீர் எனக்குச் செய்த இந்தப் பெரிய நன்மை நான் ஒருபொழுதும் மறக்கத்தக்கதல்ல. நான் காத்திருந்து அதற்காக உமக்குப்

பதில் உபகாரம் செய்யப் பார்ப்பேன்" என்றது.

அது கேட்டுச் சிங்கமானது நகைத்து, "ஆ ஆ, இந்தச் சொற்ப பிராணி நமக்குப் பிரதியுபகாரம் செய்யப்போகிறதாம்; இது ஒரு நல்ல வேடிக்கைதான்" என்றது. பின்பு சுண்டெலி தன் வளைக்குச் சென்றது. சிறிது நாள் சென்றதின்மேல், அது தன் வளைக்குள் இருக்கையில், மேகத்தின் முழக்கம்போல ஏதோ ஒரு சத்தம் கேட்டு, அதென்ன சத்தமென்று அறியும்படி வெளியே வந்து பார்த்தபொழுது, தன் சீவனைக் காத்த சிங்கமானது வேடர் விரித்த வலையிற் சிக்கிக்கொண்டு, வெகு அவஸ்தைப்படுகிறதைக் கண்டது. உடனே அது ஓடிப்போய், வலைக்கயிற்றைத் தன் பற்களால் வெட்டிச் சிங்கத்தை விடுவித்தது. அப்பொழுது சிங்கம், "என் பிராண சினேகிதா, உன் அருமையும் பெருமையும் இன்றுதான் அறிந்துகொண்டேன். விருப்பமுண்டானாற் பலட்சயமுள்ளவர்களும் பலவான்களுக்குத் துணைசெய்வார்கள்" என்றது.

௧௬--வது. பூமியின் நாலு கண்டங்கள்.

பூமியின் மேற்புறம் நிலமும் நீருமாக வேறுபட்டிருக்கின்றது. நிலத்தின் முக்கியமான பிரிவுகள் நாலு; அவை ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா எனப்படும். மனுஷர் ஆசியாவிலிருந்து ஆபிரிக்காவுக்காவது, ஐரோப்பாவுக்காவது கடல்யாத்திரைபண்ணுமற் கரைவழியாய்ப் போகலாம். அமெரிக்காவுக்கோ கடல்வழியாயன்றிக் கரைவழியாய்ப் போவது கூடாது. நாம் ஆசியாக்கண்டத்தில் வாசமாயிருக்கிறோம். ஆசியாக்கண்டம் மற்ற மூன்று கண்டங்களைப்பார்க்கிலும் அதிகப் பெரிதாயிருக்கின்றது. மிகவும் திரளான ஜனங்கள் ஆசியாக்கண்டத்தில் வாசமாயிருக்கிறார்கள். பூமியின் கண்டங்களில் ஐரோப்பா அதிக சிறிது. ஆகிலும் அங்கிருக்கும் குடிச்சனங்கள் அனேகர். சற்று ஏறக்குறைய அமெரிக்கா ஆசியாக் கண்டத்தைப்போல் அவ்வளவு பரப்புள்ளது. ஆகிலும் இப்பொழுது அங்கே அத்தனை திரளான குடிச்சனங்கள் இல்லை. கிட்டத்தட்ட ௩௫௦ வருஷத்திற்குமுன்பு அமெரிக்காக்

கண்டம் முதல் முதல் ஐரோப்பியராற் காணப்பட்டது. ஆதலால், அதைச் சிறிது வேளை புதுக்கண்டமென்று சொல்வதுமுண்டு.

இந்தப் பூமியிற் பலபல இராச்சியங்கள் உண்டு. வெவ்வேறு தேசத்தார் வெவ்வேறு பாஷைகளைப் பேசுவார்கள். தேச சட்டங்களுக்குக் கீழ்ப்பட்டு, கிராமங்களிலும் பட்டணங்களிலும் வாசமாயிருக்கின்ற ஜனங்கள் சீர்த்தேற்றமுள்ளவர்கள் என்னப்படுவார்கள். அவ்வாறு யாதொரு சட்டத்திற்குக் கீழ்ப்படாமல், தங்கள் இச்சைப்படி நடக்கின்ற திருந்தாத ஜனங்கள் மிலேச்சர் என்னப்படுவார்கள்.

௨௰--வது. சிற்றெறும்பு.

ஒரு கருமையான சிற்றெறும்பு ஒரு பெரிய கோதுமை மணியைக் கண்டு, அதைத் தன் புற்றுக்குக் கொண்டுபோவதற்காகத் தள்ளிப் பார்த்தபொழுது, அது மிகவும் பளுவாயிருந்தது. பின்பு அதுவழியில் எதிர்ப்பட்ட மற்றொரு எறும்பை நோக்கி, "நாம் இருவருமாக இந்தக் கோதுமைமணியைத் தள்ளிப்போய், என்

புற்றிற் சேர்ப்போம் வருவாயா?" என்றுகேட்டது. அதற்கு அந்த எறும்பு "இப்போது எனக்கு நேரமில்லை; அதிக வேலை இருக்கின்றது; உன் வேலையை நீயே பார்க்கவேண்டும்" என்றுசொல்லிப்போய், சௌக்கியமாய்க் கிடந்து தூங்கிற்று. உடனே அந்த வழியில் வேறொரு கரி எறும்பு வந்தது. அது சற்குணமுள்ளதாகையால், அந்தச் சிற்றெறும்பின் கேள்விக்கு உடன்பட்டு, தானும் அதுவுமாகக் கோதுமைமணியை உருட்டிக்கொண்டுபோய்ப் புற்றிலே சேர்த்தன. அந்தச் சிற்றெறும்புக்குத் துணை செய்யாமல் வீண் சாட்டுச் சொல்லிப்போன எறும்பைப் போல, பிள்ளைகள் சிறிது வேளை ஒருவரிடத்தில் ஒருவர் பட்சமில்லாதவர்களாய் நடக்கிறதும் உண்டு. ஆதலால் அவர்கள் இந்தக் கதையைக் கேட்டு அறிவடைந்துகொள்ளப் பார்க்கவேண்டும். சிற்றெறும்புக்கு உதவிசெய்த கரி எறும்பின் கதையினுலும் மிகுந்த அறிவு உண்டாகலாம். சொற்ப எறும்புகள் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்குமானல், சிறுவர்கள் எத்தனை அதிகமாய் அப்படி இருக்கவேண்டும்.

உக-வது. தேசங்கள்.

இந்தப் பூமியில் ஒரு தேசமல்ல, பல தேசங்கள் உண்டு. அந்தந்தத் தேசத்தில் வாசமாயிருக்கின்ற ஆண்களும் பெண்களுமாகிய சிறியோர் பெரியோர் அனைவரும் வெவ்வேறு பாஷைகளைப் பேசுவார்கள். தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு. ஒரு பொருளுக்கே அவரவர் பாஷையில் வெவ்வேறு பெயர் உண்டு. நாய் என்னும் மிருகத்திற்குத் தமிழ்ப்பாஷையில் நாய் என்றும், தெலுங்கில் குக்கா என்றும், துலுக்கில் குத்தா என்றும், எங்கிலீஷில் டாக் என்றும் வேறு வேறு பெயர் சொல்வார்கள். சகல தேசத்தார்களும் ஒரே நிறமுடையவர்களல்ல. சில தேசத்தார்கள் கபிலை நிறமுடையவர்கள்; சிலர் கறுத்தவர்கள்; சிலர் செவந்த மேனியுடையவர்கள்; சிலர் வெள்ளைநிறமுள்ளவர்கள். சில தேசத்தார்கள் இத்தேசத்தவர்களைப்பார்க்கிலும் அதிகமாய் வளர்ந்தவர்கள். குளிர்ச்சி அதிகரித்திருக்கின்ற வடதேசங்களில் வாசமாயிருக்கிறவர்கள் சற்றுக் குள்ளமானவர்கள். அந்த

ந்தப் பாஷைக்காரர் தங்கள் நடை உடை பாவனைகளில் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கிறார்கள். நாம் வாசமாயிருக்கின்ற தேசம் தென் இந்தியா. தென் இந்தியாவிற்குக் கிழக்கிலும் மேற்கிலும் கடல் இருக்கின்றது. அதற்குத் தென்கிழக்கிலே இலங்கைத்தீவு இருக்கின்றது. இலங்கைத்தீவிற்கும் இந்தியாவின் கரைக்கும் இடையில் மற்றொரு சிறுத் தீவு இருக்கின்றது. அதற்கு இராமேசுரம் என்று பெயர். இந்துதேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அங்கங்கே பல பாஷைக்காரர்கள் வாசமாயிருக்கிறார்கள்.

௨௨-வது. ஆட்டுக்குட்டியின் கதை.

க-ம். பிரிவு.

ஒரு இடையனுக்கு அனேக ஆடுகளும் குட்டிகளும் இருந்தன. அவன் அவைகளை நல்ல புல்லுள்ள இடத்தில் மேயவிட்டுத் தண்ணீர்காட்டிப் பத்திரமாகப் பராமரித்தான். அவைகளுக்கு வியாதி வந்தால், அவைகளைத்

தன் கண்ணைப்போல அருமையாக விசாரித்துக் காப்பாற்றுவான். அவைகள் மேய்ச்சலுக்காக உயர்ந்த மலையின்மேல் ஏறிப்போகும்பொழுது, ஆட்டுக்குட்டிகள் தொய்ந்துபோனால், அந்த இடையன் அவைகளைத் தூக்கித் தோள்மேற் சுமந்துகொண்டுபோய்விடுவான். அவைகள் மைதானத்தில் மேய்ந்துகொண்டு நிற்கும்போது, அவன் ஒரு கடவைமரத்தில் உட்காந்து, புல்லாங்குழல் ஊதுவான். ஆடுகளும், குட்டிகளும் குழலின் இனிமையான ஓசையைக் கேட்டுச் சந்தோஷிக்கும். அந்த ஆடுகளையும் குட்டிகளையும்போல அத்தனை பாக்கியமுள்ளவைகள் உலகத்தில் மற்றெங்குமில்லை.

இராத்திரிதோறும் அவன் அவைகளை வயல்வெளியில் ஒரு பட்டிக்குள் அடைப்பான். ஆட்டுப்பட்டியாவது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? சொல்லுகிறேன் கேளுங்கள். ஆட்டுப்பட்டியாவது ஒரு துண்டு நிலத்தை நாலு பக்கத்திலும் படல்களால் அடைக்கின்ற அடைப்பாம். கொடிகளையும் மரத்தின் சிறு கிளைகளையும் நெருக்கமாய் வைத்து ஒன்றோ

டொன்று இடை வெளியில்லாமற் பின்னப்படு வதே படலாம். தினமும் சூரியன் அஸ்தமித்து, இருளும் குளிரும் உண்டாகிறபொழுது, இடையன் ஆட்டுப் பட்டியின் வாசலைத் திறந்து, ஆடுகளையும் குட்டிகளையும் அதற்குள்ளே போகும்படி ஓட்டிவிட்டு, பின்பு படலைக்கொண்டு அடைப்பான். இராத்திரி முழுவதும் அவைகள் ஒன்றோடொன்று நெருங்கிப் பத்திரமாய்ப் படுத்துக்கொள்ளும். நாய்கள் பட்டிக்கு வெளியிற் படுத்திருந்து, யாராவது வருவது கண்டால், எழுந்து குலைக்கும். காலையில் இடையன் படலைத் திறந்து, ஆடுகளையும் குட்டிகளையும் மேய்ச்சல் தரைக்கு ஓட்டிக்கொண்டு போவான். அந்தக் குட்டிகளில் ஒன்றுதவிர, மற்றெல்லாம் தங்கள் உபகாரியாகிய இடையனைச் சார்ந்து நடந்து சந்தோஷமாயிருந்தன. ஒரு குட்டிமாத்திரம் சற்றே புத்தியீனமுள்ளதாயிருந்தது. இராத்திரிகாலந்தோறும் பட்டிக்குள் அடைக்கப்பட்டிருப்பது அதற்கு மிகவும் வெறுப்பாயிருந்தது.

உ௩-வது.

உ-ம். பிரிவு.

ஆதலால் ஒருநாள் அந்த ஆட்டுக்குட்டி, வயசிலும் புத்தியிலும் முதிர்ந்த தன் தாயி னிடத்திற்குப் போய், "அம்மா, இந்த நா யைப் பட்டிக்குவெளியில் உலாவித் திரிய வி ட்டு, நம்மை ஏன் இப்படி அடைத்து வருத் தப்படுத்துகிறார்கள்? இது எனக்குப் பெரிய சங்கடமாய் இருக்கின்றது. என்னாற் கூடுமா னால், நான் சமயம்பார்த்து வெளியே போய் விடுவேன். அங்கங்கே இஷ்டமான இடங்க ளுக்குப் போய், அடுத்த காட்டிலே நிலவுவெ ளிச்சத்தில் உலாவித்திரிவது எத்தனை இன்ப மாய் இருக்கும்." என்றது. இந்தப்படி அந் தக் குட்டி சொன்ன புத்தியீனமான பேச்சுக ளைத் தாயாடு கேட்டு, விசனப்பட்டு, "பைத்தி யக்காரப்பிள்ளை, இந்தக் கெடுபுத்தி உனக்குப் போதித்ததார்? நமது இடையன் நமக்கு எ ண்ணிறந்த நன்மைகளைச் செய்திருக்கிறார்: ஆதலால் நாம் அவர் சொல்வது ஒன்றையும்

தட்டாமல், அவர் சொற்படி நடப்பதே கட்டமை. நீ உன் இஷ்டப்படி உலாவித்திரிவாயானால் அபாயம் நேரிடும்" என்றது. அது கேட்டுக் குட்டியானது, "இல்லை; ஒருபொழுதும் எனக்கு அபாயம் வராது" என்றது. சாயங்காலத்தில் இடையன் ஆடுகளை அழைத்துப் பட்டிக்குள் அடைத்தான். அந்தக் குட்டியோ பட்டிக்குள் வராமல் ஒரு வேலிக்குள் ஒளித்துப் பதுங்கிக்கிடந்தது. பட்டிக்குட் போன ஆடுகளும் குட்டிகளும் இராத்திரி வேளையிற் படுத்து உறங்கிக்கொண்டிருந்தபொழுது, அந்தப் புத்திகெட்ட ஆட்டுக்குட்டி ஒன்று மாத்திரம் வயல்வெளியில் எங்கும் துள்ளிப் பாய்ந்து விளையாடிக்கொண்டு, மரங்கள் அடர்ந்த வனத்திற் போயிற்று. அப்பொழுது ஒரு ஓநாய் மிகுந்த மூர்க்கத்துடன் ஊளையிடுகிற சத்தத்தை அந்த ஆட்டுக்குட்டி கேட்டுக் கலங்கி, "ஐயோ, நான் பட்டிக்குள் அடைக்கப்பட்டிருப்பேனாகில், இப்படி அபாயம் நேரிடாதே. ஓடிப்போகத் துணிந்தாற் பட்டியோ தூரமாயிருக்கின்றது: இதற்கு என்ன உபாயம் செய்யலாம்" என்று ஏங்கிக்கொண்டிரு

க்கையில், அந்த ஓநாய் அதைக் கண்டு, அதின்மேற் பாய்ந்து விழுந்து, அதை விசையாய் இழுத்துக் கொண்டுபோய்த் தன் புதரிற் சேர்த்தது. அந்தப் புதரில் தோலும் எலும்புகளும் நிறைந்திருந்தன. பின்பு ஓநாயானது அங்கிருந்த தன் இரண்டு குட்டிகளை அழைத்து, "என் கண்ணின் மணிக்கு ஒப்பான குட்டிகளே, இங்கே வந்து பாருங்கள்; ஒரு கொழுப்பான சிறு ஆட்டுக்குட்டியை உங்களுக்கு இரையாகக் கொண்டுவந்தேன். அதைத் தின்று கொண்டாடுங்கள்" என்றது. உடனே ஓநாயின் குட்டிகள் அந்த ஏழை ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கடித்துச் சின்னபின்னமாய்க் கிழித்துப் பட்சித்தன.

உ௪-வது. திக்கு நாலு.

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்னும் நாலு திசைகளைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த வார்த்தைகளின் அர்த்தம் என்னவென்று சொல்வேன் கேளுங்கள்.

விடியற்காலத்தில் வெள்ளென எழுந்து, வெளிச்சம் முதல் முதல் தோன்றுகிற திசையைப் பார்த்துக்கொண்டிருப்பீர்களானால், இருள் நீங்கும்பொழுது உங்களுக்கு எதிர்முகமாய்ச் சூரியன் உதயமாகிறதைக் காண்பீர்கள். சூரியன் உதிக்கிற அந்தத் திசை கிழக்கு என்னப்படும். உங்களுக்குப் பின் புறத்தில் அதற்கு எதிரான திசை மேற்கு என்னப்படும்; அதுவே சூரியன் அஸ்தமிக்கிற திசையாம். உங்களுக்கு வலப்புறத்திலுள்ள திசை தெற்கு என்னப்படும். இடப்புறத்திலுள்ள திசை வடக்கு என்னப்படும்.

வடக்கு.

மேற்கு. — — கிழக்கு.

தெற்கு.

இவ்விதமாய்ச் சூரியன் எப்பொழுதும் கிழக்கே உதித்து, மேற்கே அஸ்தமிக்கின்றது. அது அஸ்தமித்து மறுநாட்காலையில் உதயமாகிறவரையில், எங்கும் இருள் நிறைந்திருக்கும். நாம் வாசமாயிருக்கின்ற பக்கத்திலே சூ

ரியன் அஸ்தமிக்கும்பொழுது, நமக்கு எதிரான மற்றப் பக்கத்திலே அது உதிக்கின்றது: ஆதலால் நமக்கு இராத்திரிகாலமாயிருக்கையில், பூமியில் நமக்கு எதிரான மற்றப் பக்கத்தில் வாசமாயிருக்கின்ற சனங்களுக்கோ பகற்காலமாயிருக்கின்றது.—நமக்குப் பகற்காலமாயிருக்கும்பொழுது, அவர்களுக்கு இராக்காலமாயிருக்கின்றது. நாம் தூங்கி எழுந்திருக்கும்போது, அவர்கள் தூங்கப் போவார்கள்.

உரு—வது. பருவகாலங்கள்.

ஐரோப்பா முதலான தேசங்களின் வடபாகங்களிலும், இந்தியாவின் வடபாகத்திலும் நாலு பருவகாலங்கள் உண்டு. அவைகள் வசந்தகாலம், வேனிற்காலம், இலையுதிர்காலம், மாரிகாலம் என்னப்படும். இந்தியாவின் தென்பாகத்தில் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பருவகாலங்கள் உண்டு. இதின் அடியிற் பருவகாலங்களைக்குறித்துச் சொல்லப்பட்டிருப்பவைகள் வடதேசங்களுக்கு மாத்திரம் பொருந்தும்.

மேற்சொல்லிய நான்கு பருவங்களில் வசந்த காலம் என்பது மிகவும் சந்தோஷமான காலம். காலையிற் சூரியன் உதயமாகிறபொழுது, பட்சிகள் களிப்புடன் கீதம்பாடி, தங்கள் கூண்டுகளைக் கட்டும். சிறிய ஆட்டுக்குட்டிகள் வயல்வெளியில் துள்ளித்திரிந்து கூப்பிடும். மரங்கள் எல்லாம் நன்றாகச் செழித்துத் துளிர்க்கும். பழம் தரும் மரங்கள் நிறைவாகப் பூத்திருக்கும். சிறிது நாட் சென்றதின்மேல், அந்தப் புஷ்பங்கள் வாடி உலர்ந்து சொரிந்து போக, பிஞ்சுகள் வரவரப் பருத்து முற்றி, வெப்பம் அதிகரிக்கும்பொழுது பழுக்கத்தொடங்கும்.

வேனிற்காலம் வரும்பொழுது, வயல்வெளியிலும் தோட்டங்களிலும் புஷ்பங்கள் திரளாயிருக்கும். வண்டுகள் கீதம்பாடிப் பறந்து அங்கங்குள்ள புஷ்பங்களில் இருக்கும் தேனை உண்ணும். பட்சிகள் முன்போலச் செடி மறைவுகளில் இருந்து கூவி வீணாக நேரத்தைப் போக்காமல், முட்டையிட்டு, அவையங்காத்துக் குஞ்சுபொரித்து, தங்கள் குஞ்சுகளுக்கு இரைகொடுத்து வளர்க்கும்.

பிற்பாடு இலையுதிர்காலம் தொடங்கும் பொழுது, மணி நிறைந்த பொன் நிறமான தானியக் கதிர்கள் தலைவணங்கி நிற்கும். பயிர்க்குடிகள் விளைந்த தானியத்தை அரிவாளால் அறுத்து, உயர்ந்த போர்களாய் அடுக்குவார்கள். அதின்மேல் வயலில் அங்கங்கே விடப்பட்டிருக்கின்ற கதிர்களை எளிய பிள்ளைகள் பெறுக்குவார்கள். இந்தக் காலத்தில் மரங்களின் இலைகள் பழுத்து உலர்ந்து, காற்று அடிக்கும்பொழுது, எங்கும் சிதறுண்டு கிடக்கும். மரங்கள் துளிர்க்கத்தொடங்கிய வசந்தகாலத்திற் களித்துப் பாடின சில பறவைகள், அடுத்த வேனிற்காலத்தில் அடக்கமாயிருந்து, அந்தத் துளிர்கள் முற்றிப் பழுத்துச் சருகாய் உலர்ந்திருக்கும் இக்காலத்தில் திரும்பவும் பாடிச் சந்தோஷங்கொள்ளும்.

அதின்மேல் மாரிகாலம் வரும். மாரிகாலத்தில் மரங்களிலே தழை, பூ, காய், கனி ஒன்றும் இரா: மரங்கள் முழுவதும் வெறுமையாயிருக்கும்; மழையும் கன்மழையும் பெய்யத்தொடங்கும்; குளிர்காற்று அடிக்கும்; சிறிதுவேளை நிலம் முழுவதும் உறைந்த பனியால் மூடப்

பட்டிருக்கும். அப்பொழுது சிறுவர்கள் தங்கள் காலிற் சறுக்குருளைகளை கட்டிக்கொண்டு, கண்ணாடிபோல் உறைந்திருக்கிற மடுக்களிலும் ஏரிகளிலும் சறுக்கிவிளையாடுவார்கள். அப்பொழுது பறவைகள் குருவிகளெல்லாம் அதிகமாய் வருத்தப்படும். அவைகள் ஒதுங்கியிருப்பதற்கு மரம் செடிகளில் இலை இல்லை; நிலத்தைப் பனி மூடியிருப்பதினால், நிலத்திலுள்ள பூச்சி புழுக்களைப் பொறுக்கித் தின்பதற்கு வகையில்லை. அங்கங்கே வேலிகளிலுள்ள பன்னைப்பழம், களாப்பழம் முதலிய பழங்கள் அவைகளுக்கு இரைக்கு உபயோகமாகும். சிறிது நற்குணமுள்ள பிள்ளைகள் கோதுமை முதலிய தானியங்களைத் குருவிகளுக்குப் போடுவதும் உண்டு.

உகூ—வது. கண்ணுக்குத் தோன்றாத ஆவிகள்.

விக்கினம்..தீங்கு. அஞ்சுதல்..பயப்படுதல்.

சருவ தேசத்தார்களும் கண்ணுக்குத் தோன்றாத ஆவிகள் உண்டென்று நினைக்கிறார்கள்.

அவைகளுடைய சரீரம் நமது சரீரத்திற்கு ஒப்பானதல்ல: ஆதலால் நாம் அவைகளைக் காண்பது அரிது. நாம் அவைகளை ஆவிகளெ ன்று சொல்லுகிறோம். நல்ல ஆவிகளும் தீய ஆவிகளும் உண்டென்பது மெய். அதற் குச் சந்தேகம் இல்லை. நல்ல ஆவிகள் கட வுளிடத்தில் ஏவல் செய்யும் தூதர்களாக வும், ஆதரவற்றவர்களுக்குத் துணை நிற்கும் காவற்காரராகவும் இருக்கின்றனவென்று, நற் குணத்திலும் விவேகத்திலும் சிறந்தவர்களா ன சில பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். அடாதவைகளைச் செய்வதற்குத் தங்களை விற் கும் தீயோரைத் தீமையான ஆவிகள் ஏவும். அது மெய்: ஆனாலும் கடவுளுடைய உத்தர வில்லாமல் தீய ஆவிகள் நமக்கு ஒரு விக்கின மும் செய்யத்தக்கவைகளல்ல; ஆதலால் நாம் முழு மனதோடே கடவுளை நம்பி, அவருடைய காருணியத்தையும் காவலையும் தேடவேண் டும்.

எங்கும் நிறைந்த மகத்துவமுடைய ஆவி கடவுள் ஒருவரே. நாம் அவரிற் பிழைக்கி றோம், அசைகிறோம், இருக்கிறோம். அவ

ரோ நமக்குச் சீவனையும், சுவாசத்தையும், மற்றுள்ள யாவையும் கொடுக்கிறவர். நாம் அவர் ஒருவருக்கே பயந்து நடப்போமானால், மற்றொன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை.

உஎ-வது. நல்லறிவு.

சக்தி...திராணி.

நல்லறிவே எல்லாச் சிறப்பும் தரும்.

ஒருவன் இந்த வாக்கியங்களை அரசன் சமுகத்திற் சொன்னான். அந்த அரசன் அதன் உண்மையைச் சோதிக்கும்படியாக, தன் குமாரரில் ஒருவனைச் சாத்திரமும் நீதிநூலும் கற்கும்படி மிகவும் கற்ற ஒரு உபாத்தியாயரிடத்தில் ஒப்பித்து, நாள்தோறும் புதிய பாடத்தை அவனுக்கு நன்றாய்க் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று கட்டளை பண்ணினான். அந்தப் பிரகாரமே மற்றொரு குமாரனுக்கு நாள்தோறும் விலையுயர்ந்த ஆபரணம் ஒவ்வொன்று கொடுக்கத் தொடங்கினான்.

மூதற் குமாரன் நாளுக்குநாள் கல்வியும், மெ

ய்யறிவும், ஒழுக்கமுமுள்ளவனுனன். மற்ற வனே தனக்கு உண்டாயிருந்த மிகுந்த செல் வத்தினலே மேன்மேலும் பெருமையும் அகங் காரமுமுள்ளவனுகி, கல்வியையும் நல்லொழு க்கத்தையும் அலட்சியம்பண்ணினுன். அவ ர்கள் பருவமானபோது, தூர தேசத்திற்குப் போனுர்கள். திரவியம் பெற்றவன் மிகுந்த திரவியம் எடுத்துக்கொண்டு போனுன்: படித் தவனே எந்தத் தேசத்திலும் கல்வியே துணை யென்று எண்ணி, தன் புத்தகங்களைமாத்திரம் எடுத்துக்கொண்டு போனுன். ஆபரணம் பெ ற்ற குமாரன் ஒரு பட்டணத்திற் போய்ச்சேர் ந்து, அங்கே துர் நடக்கையினலே தன் பணத் தைச் செலவழித்ததுமல்லாமல், கடன் பட் டு அதை இறுக்கச் சக்தியில்லாதவனுய்ச் சி றைச்சாலையிற் போடப்பட்டான். கற்றவன் ஒரு அரசனுடைய சபையிற் போய்ச்சேர்ந் தான். அந்த அரசன் அவனுடைய மரியாதை யையும், நல் ஒழுக்கத்தையும், கல்வியையும் அறிந்து, அவனைத் தன் அருகிலே வைத்துக் கொண்டு, அவனேடு நன்றுய்ப் பரீட்சையா னபின்பு, அவனுக்கு ஒரு வீடு கட்டிக்கொடு

த்தான். கடைசியில் அந்த அரசன் அவனி டத்தில் வைத்திருந்த தயையினுலே அவனுக் குத் தன் குமாரத்தியை விவாகஞ்செய்வித்து, அதிக சீதனம் கொடுத்து, காவற்சேவகரோ டும் வேலைகாரரோடும் அவன் சொந்தத் தேச த்திற்குப் போகும்படி அவனை அனுப்பினுன்.

அவன் தகப்பன் அவன் வருகிறதினுல் உ ண்டாகிய ஆரவாரத்தைக் கேட்டு, பகை அ ரசன் படையெடுத்துவருகிறுனேவென்று த த்தளித்துக்கொண்டிருக்கையில், ஒருவன் உம் முடைய குமாரன் வருகிறுனென்றுன். இ தைக் கேட்டமாத்திரத்தில், அவன் தன்னு டைய சபையார், சுற்றத்தார்கள் எல்லாரை யும் அவனை எதிர்கொண்டு சந்திக்கும்படி அனுப்பி, தன் அரமனைக்கு அழைப்பித்து, அங்கே அவனைக் கட்டித் தழுவி, தன் அரு கில் உட்காரவைத்தான். அவாகள் எல்லா ரும் களிகூரத் தொடங்கினுர்கள். பின்பு அ ரசன் ஆண்மை, உண்மை, கல்வி முதலிய அரசர்க்குரிய குணங்கள் தன் குமாரனுக்கு உ ண்டென்று கண்டு, ஆளுகையை அவனிடத் தில் ஒப்பித்தான். முன்பு ஆபரணம் பெற்றுப்

போன மற்றக் குமாரனே அதுவரையிற் சிறைச்சாலையில் இருந்தான். கல்விமானாகிய குமாரன் அவனுடைய செய்திகளைக் கேள்விப்பட்டுப் பரிதபித்து, அவன் கடன்களைத் தீர்த்து, அவனை அரமனைக்கு அழைப்பித்துக் கொண்டான். இவ்விதமாக அந்த அரசன் வித்தைக்கும் திரவியத்திற்குமுள்ள வித்தியாசத்தை அறிந்துகொண்டான்.

உஅ-வது. பெண்பிள்ளை கல்வி.

முற்காலத்திலே இந்துதேசத்துப் பெண்கள் எழுத வாசிக்கக் கற்றிருந்தார்கள். மேலும் சிலர் சித்திரம் எழுதவும், சிலர் வீணை வாசிக்கவும் பழகியிருந்தார்கள். இக்காலத்தில் தென் இந்தியாவிலுள்ள பாடசாலைகளில் வழங்குகிற சில நூல்கள் வித்தையிலே திறமுடையவளான ஒரு இந்துப்பெண்ணால் எழுதப்பட்டன: அவள் பெயர் ஔவை.

பின்பு நெடுங்காலமாய் இந்துக்கள் தங்கள் பெண்களுக்குக் கல்வி பயிற்றாமல் விட்டுவி

ட்டார்கள். என்ன காரணத்தினால் அப்படி விட்டார்களென்று ஒருவருக்கும் தெரியாது. மனுஷனுக்கு மிகுந்த சிறப்பையும், சந்தோஷத்தையும், பிரயோசனத்தையும் தருவதற்கு ஏதுவாயிருக்கின்ற அறிவு பெண்களுக்குக் கேடுள்ளதாகுமா? அல்லவே.

இப்பொழுது இந்துக்கள் தங்கள் பெண்பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும்படி தொடங்குகிறார்கள். பல இடங்களிலுள்ள பணக்காரர்கள் அங்கங்கே பாடசாலைகளைக் கட்டுவதற்கும், உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் மிகுந்த பணம் கொடுத்திருக்கிறார்கள். வங்காளத்திலும், பம்பாயிலும், சென்னபட்டணத்திலுமுள்ள இந்துப் பெண்கள் அனேகர் எழுத வாசிக்கப் பயில்கிறார்கள்.

வசதியான பாடசாலைகள் இல்லாதிருக்குமானால், அந்தந்தக் குடும்பத்தில் இருக்கின்ற சகோதரர்கள் தங்கள் சகோதரிகளுக்குக் கற்றுக்கொடுப்பது நலமாயிருக்கும்.

உகூ-வது. காற்று.

நாம் சுவாசம்விடுகிற காற்ரூனது கண்ணு க்குத் தொன்ருதாயினும், அது எங்கும் நி றைந்திருக்கின்றது. அது பூமியைச் சூழ்ந்து நெடுந்தூரமளவும் பரந்திருக்கின்றது. காற் றைக் கண்ணுற் கண்டறியக்கூடாது; பரிசத் தால் அறியலாம். காற்று அசைவின்றி அம ர்ந்திருக்கும்பொழுது, ஒரு விசிறிகொண்டு வி சுக்கினுல், அது அசையும். அல்லாமலும் அது வெப்பம், குளிர்ச்சி இவைகளால் அ சைவதுமுண்டு. அவ்வாறு அசையும்பொ ழுது அதற்கு வீசுங்காற்று என்று பெயர். காற்று மெல்ல அடித்தால் இளங்காற்று என் றும், பலமாய் அடித்தாற் கடுங்காற்று என் றும் சொல்லப்படும். நிலத்தினின்று வீசும் காற்று நிலக்காற்று என்றும், கடலினின்று வீசும் காற்று கடற்காற்று என்றும் சொல் லப்படும். காற்று மிகவும் பலமாய் அடிக் கும்பொழுது, அதற்குப் பெருங்காற்று என் று பெயர். இன்னும் அதிக பலமாய் அடித்

தாற் சூறைக்காற்று என்று பெயர். மண்டலமாக வீசும் காற்றுச் சுழல்காற்று எனப்படும். இளங்காற்று ஒரு மணிநேரத்தில் ஏறக்குறையப் பத்து மைல் வீதம் செல்லும். சூறைக்காற்ருே, அவ்வளவு நேரத்திற்குள்ளாக அறுபது, எண்பது, நூறு மைல்வரையிற் செல்லும்.

காற்று எத்தனை உபயோகமுள்ளது! அது நமக்கும், மற்றுள்ள மிருகசீவன்கள் அனைத்திற்கும், தாபரவர்க்கங்களுக்கும் சீவ ஆதாரமானதாயிருக்கின்றது. நல்ல காற்று இல்லாதிருந்தால், நாம் பிழைத்திருக்கமாட்டோம்; நெருப்பு எரியாது ; தாபரவர்க்கங்கள் உண்டாகா: அசுத்தமும் விஷத்தன்மையுமுள்ள ஆவியைக் காற்று அகற்றுகின்றது; வீட்டிலுள்ள ஈரத்தை உலரப்பண்ணுகின்றது; மரக்கலங்களைச் சமுத்திரத்தில் ஓடப்பண்ணுகின்றது; வெப்பமான தேசங்களில் வேண்டிய அளவு குளிர்ச்சி தருகின்றது.

குளிர்ந்த காற்று உட்செல்லாதபடி அடைக்கபபட்டிருக்கின்ற அறைக்குள்ளே நித்தி

ணாசெய்வது சௌக்கியத்திற்கு ஈனம். அப்படிச் செய்வோமானால், அதிசீக்கிரத்தில் நமக்கு வியாதி உண்டாகும்.

௩௰-வது. மிருகங்கள்.

நகர்தல்..ஊர்தல்.

மிருகங்கள் பலவகைப்படும். காட்டுமிருகங்களும் உண்டு; சாதுவான மிருகங்களும் உண்டு. சில மிருகங்கள் மனுஷருக்கு அதிக உபயோகமுள்ளவைகள். எருதும் குதிரையும் ஏர் இழுக்கின்றன, பண்டி இழுக்கின்றன, பளுவான சுமை எடுக்கின்றன. ஒருவன் கால்நடையாய் ஒரு மணிநேரத்திற் போகிற தூரமும், குதிரைமேல், அல்லது பண்டியில் ஏறி அரைமணிநேரத்திற் போகிற தூரமும் சரி. பசுமாடு பால் கொடுக்கும். ஆட்டின் இறைச்சி போசனத்திற்கு ஆகும். அதின் உரோமத்தாற் புடைவை நெய்யப்படும். நாய்கள் தங்கள் எசமான்களுடைய வீடுகளைக் காவல் செய்து, அங்கே திருடர் வராத

படி பண்ணும். நாய்கள் அதிக உண்மை யுள்ள மிருகங்கள். வீட்டிலே மிகுந்த கெடுதி செய்கிற சிறிய ஜெந்துகளாகிய எலிகளையும், சுண்டெலிகளையும் பூனைகள் கொன்று தின்னும். வியாதி உண்டாக்குவதற்கு ஏதுவான கெட்ட நாற்றமுள்ள வஸ்துகளைக் காக்கைகள் கவ்விக்கொண்டு ஓடும். எந்த மிருகங்களினாலும் அததற்குத்தக்க உபயோகம் உண்டு. தரையிலே நகருகின்ற சிற்றெறும்பையும் ஏதோ முக்கியமான நோக்கத்திற்காகவே கடவுள் சிஷ்டித்தார்.

நாம் எல்லா மிருகங்களிடத்திலும் தயவுள்ளவர்களாயிருக்கவேண்டும். நமது கண்ணுக்கு எதிர்ப்படுகிற எந்த ஜெந்துவையானாலும் வருத்தப்படுத்துவதும், அடிப்பதும், கொல்வதும் பெரிய பாவம். கூடுமானால் ஒரு சிற்றெறும்பைத் தானும் உன் காலால் மிதிக்காதே.

சிறிது காலத்திற்குள்ளாகப் பல வித மிருகங்களைக்குறித்துச் சொல்லிய சரித்திரத்தை வாசிப்போம். அதில் மிருகங்களைக்குறித்துப் பலபல விசேஷங்களை அறிந்துகொள்வோம்.

பிரதானமாய் நாயானது அதிக ஆச்சரியமான மிருகம்.

மூன்றும் மாதம்.

௩௧-வது. முழக்கமும் மின்னலும்.

மேகம் முழங்கி, ஆகாயத்தில் மின்னல் தோன்றும்பொழுது, மிகுந்த அச்சம் உண்டாகின்றது. முழக்கமாவது என்னவென்றும், மின்னலாவது என்னவென்றும் விசாரிக்குமிடத்தில், ஒன்றும் தெரியவில்லை. மின்னல் மேகத்தினின்று தோன்றுகிறது மெய்; இது நம்மெல்லாருக்கும் தெரியும். ஆகிலும் மின்னலாவது என்னவென்று மிகுந்த விவேகமுடைய வித்துவான்களும் திட்டமாய் அறியார்கள். மின்னல் தோன்றிச் சற்று நேரத்திற்குள்ளாக முழக்கம் உண்டாவது வழக்கம். இடி முழக்கம் அதிகமாயிருக்கும்போது, சிறிது வேளை மின்னலால் மிகுந்த கெடுதி உண்டாகின்றது. அது மரங்களையும், வீடுகளை

யும், மிருக சீவன்களையும், மனுஷரையும் நாசமாக்குகின்றது. முழங்கி மின்னும் பொழுது மரம், வேலி, தண்ணீர் இவைகள் மின்னலைத் தம்மிடத்தில் வலித்துக்கொள்ளும் தன்மையுள்ளவைகளாயிருப்பதினால், நாம் அவைகளின் சமீபத்திற் போகலாகாது. அப்படிப்பட்ட சமயத்தில் எவ்வகைப் பொருளாவது சமீபமாயில்லாத வெறு வெளியில் இருப்பது நல்லது. மின்னலானது அப்போதப்போது தோன்றுகிற விதத்தின்படி வெவ்வேறு பெயர் பெறும். முழங்காமல் மின்னுவதற்கு வெப்ப ஒளியென்றும், கோணலாய் மின்னுவதற்குக் கவையொளியென்றும், சடிதியிற் பரந்து மின்னுவதற்குப் பரப்பொளியென்றும் பெயராம்.

சர்வத்தையும் சிஷ்டித்த கடவுளே மின்னலையும் படைத்தவர். அவர் தமது சித்தத்தை நிறைவேற்றும்படியாக அதைப் பிரயோகிக்கிறார். "தமது சிநேகிதர் இன்னுமொன்பதை அதற்குத் தெரிவிக்கிறார். அது நெருங்கிய குரோதம் துஷ்டருக்கு நேரிடப்பண்ணும்" என்பதாய் ஒரு ஞானி எழுதியிருக்கிறார்.

௬உ-வது. ஒரு கிழவனும் கழுதையும்.

விருத்தன் .. கிழவன்.
விடலைப்பருவம் .. இளம்பிராயம்.

ஒரு விருத்தனும் விடலைப்பருவமுள்ள அவன் மகனும் ஒரு கழுதையை விற்கும்படி அடுத்த பட்டணத்தின் கடைத்தெருவிற்கு ஓட்டிக்கொண்டுபோகையில், வழிப்போக்கன் ஒருவன் கண்டு, "இந்தக் கிழவனுக்கு என்ன பைத்தியம் பிடித்தது! கழுதையைச் சும்மா ஓட்டிக்கொண்டு, தானும் சிறுவனும் கால்வலிக்க நடக்கிறார்களே" என்றான். விருத்தன் அதைக் கேட்டுத் தன் சிறுவனைக் கழுதைமேல் ஏற்றி, தான் பக்கத்திலே ஈசற்கொட்டிக்கொண்டு நடந்தான். மற்றொருவன் கண்டு "ஓ ஓ சிறுவனே, இதென்ன அதிசயம்! ஏழைக்கிழவனாகிய உன் தகப்பனை நடக்கவிட்டு, நீ கழுதைமேல் ஏறிச் சவாரிபண்ணுகிறாயா? மெத்த நன்றாய் இருக்கிறது" என்றான். அந்தக் கிழவன் இதைக் கேட்டவுடனே, தன் மகனைக் கழுதையினின்று இறக்கிவிட்டு, தான்

அதன்மேல் ஏறிக்கொண்டான். பின்பு வேறொரு வழிப்போக்கன் அவர்களைப் பார்த்து, "கெட்டி, கெட்டி, இந்தச் சிறுவன் கால் கடுக்க நடக்க, இரக்கமில்லாத சோம்பற் கிழவன் உல்லாசமாகச் சவாரிபோகிறானே" என்றான். கிழவன் இதைக் கேட்டவுடனே, தன் மகனைத் தூக்கித் தனக்குப் பின் கழுதைமேல் இருத்தினான். இப்படி இருவரும் செல்லும்பொழுது, வேறும் ஒரு வழிப்போக்கன் கிழவனைப் பார்த்து, "இது உன் கழுதையா" என்ன, அதற்குக் கிழவன் "ஆம்" என்றான். அப்பொழுது அந்த வழிப்போக்கன் "இப்படிப் பளுவான சுமையைத் தன் கழுதைமேல் எற்றிப் போகிற இரங்காத நெஞ்சன் மற்றெங்காவது உண்டா? அந்தக் கழுதை உங்கள் இருவரையும் சுமப்பதைப்பார்க்கிலும் நீங்கள் அதைச், சுமந்துகொண்டுபோவது எளிதாயிருக்குமே" என்று சொல்லிப் போனான். அப்போது கிழவன் "ஐயாவே, உமது சொற்படி ஆகட்டும்" என்று சொல்லி, தானும் தன் மகனும் கழுதையைவிட்டு இறங்கி, பின்பு அதினுடைய நாலு கால்களையும் ஒன்றாய் அடுத்துக் கட்டி,

ஒரு கொம்பில் மாட்டி, தங்கள் தோள்மேல் வைத்துச் சுமந்துகொண்டு, பட்டணத்தின் வாசலில் இருந்த பாலத்தின்வழியாய்ப் போனார்கள். அது ஒரு வேடிக்கையான காட்சியாயிருந்தபடியால், திரளான சனங்கள் கூடி, அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டுநின்றார்கள். அந்தக் கழுதை கூச்சப்பட்டு, காலை உதறி, கயிற்றை அறுத்து, வழுவி ஆற்றுக்குள்ளே விழுந்து இறந்தது. அப்பொழுது அந்த ஏழைக்கிழவன் "நான் எல்லாருக்கும் இணங்க நடக்கப் பார்த்ததினால், ஒருவருக்காவது இணங்கும்படி நடக்க என்னால் ஆகாமற்போயிற்றே; என் கழுதையையும் இழந்தேனே" என்று நினைத்து வெட்கப்பட்டு, விசனத்தோடு வீட்டுக்குத் திரும்பினான்.

௧௧-வது. சமுத்திரம்.

நாம் வாசமாயிருக்கின்ற இந்தப் பூமியின் மேற்புறம் அங்கங்கே நிலமும் நீருமாய்வேறுபட்டிருக்கிறதென்பதாக வாசித்திருக்கிறோம். அங்கங்கே சேர்ந்திருக்கின்ற நீர்ப்பரவைகள்

விசாலத்தில் ஒன்றுக்கொன்று பேதமாயிருப்பதினால், அவைகளுக்குச் சமுத்திரம், கடல், ஏரி, மடு என்று இப்படி வெவ்வேறு பெயர்கள் வழங்கும்.

தேசத்தைச் சூழ்ந்திருக்கின்ற சமுத்திரங்களும் கடல்களும் வெவ்வேறு தேசங்களின் இடையே விரிவான நீர்ப்பரவைகளாயிருக்கின்றன. சமுத்திரத்தின் அலைகள் மோதி அதைக்கின்ற நிலத்தின் ஓரம் கரையெனப்படும். சமுத்திரம் கரைகடந்து தேசத்திற் பெருகுமானால், நாம் எல்லாரும் அதில் முழுகிப் போவோம். அப்படியே சமுத்திரம் கரை தாண்டி வராதபடிக்குக் கடவுள் மறித்துவைத்திருக்கிறார்.

சமுத்திரத்தின் நீர் உவர்ப்புள்ளதாயிருக்கின்றது. அது குடிப்பதற்கு நல்லதல்ல. அதிலிருந்து உப்பு விளைகின்றது. நமக்குக் குடிப்பதற்குக் கடவுள் நல்ல தண்ணீரைக் கொடுத்திருக்கிறார்.

நாம் குடிக்கிற தண்ணீர் ஆறுகளிலும் துரவுகளிலுமிருந்து எடுக்கப்படும். மேகங்கள் பெய்கின்ற மழைத்தண்ணீர் அவைகளில் தங்

கும். கடல் நீரானது வெயிலின் வெப்பத்தால் உருமாறி, ஆவியாய் எழுந்து, ஆகாயத்திற் செல்லும். அவ்வாறு செல்லும் ஆவி ஆகாயம் குளிர்ந்திருக்கும்பொழுது, ஒன்ருகத் திரண்டு மேகமாகின்றது. அந்த மேகம் மழையை வருஷிக்கும். கடல் நீர் ஆவியாய் மாறி, ஆகாயத்திற் செல்லும்பொழுது, அதிற் கலந்திருந்த உப்பானது கடலிலே தங்கும்: ஆதலால் மழைத்தண்ணீர் உவர்ப்புள்ளதல்ல.

சற்றேறக்குறையப் பூமியின் மேற்புறத்தின் முக்காற் பங்கைக் கடல் மூடியிருக்கின்றது.

௩௪-வது. சுண்டெலிக் குஞ்சு.

ஒருவனுடைய வீட்டிலே போசன பாத்திரங்கள் வைக்கப்படுகிற ஒரு அலுமாரியில் அதிக உருசிகரமான பல உணவுகள் இருந்தன. அதற்குச் சமீபமாயிருந்த ஒரு வெடிப்பிலே ஒரு சுண்டெலிக்குஞ்சும் தாயும் வா

சமாயிருந்தன. சுண்டெலிகளுக்கு அப்படிப்ப ட்ட சௌக்கியமும் பத்திரமுமான அளை எங்கும் கிடையாது. எப்பொழுதும் ஓடியாடித் திரிகிறதே அந்தக் குஞ்சுக்கு அதிக பிரியம். ஒருநாள் அது சற்றுத்தூரம் போனபின்பு, மிகுந்த சந்தோஷத்துடன் சடிதியில் தன் அளைக்குத் திரும்பிற்று. தாய் அதைக் கண்டு, ஆச்சரியப்பட்டது. அப்பொழுது அந்தக் குஞ்சு தாயைப் பார்த்து, "தாயே, இந்த வீட்டில் வாசமாயிருக்கிற ஜனங்கள் மெத்த நல்லவர்கள். அவர்கள் நமது சாதியைப் பகைக்கிறதில்லை. இதுவரையில் அவர்களைக் குறித்து எனக்குச் சொல்லப்பட்ட கதைகள் எல்லாம் வீண். இனி நான் அவைகளை நம்பமாட்டேன். அவர்கள் நமக்கு ஒரு சௌக்கியமான வீட்டை எத்தனையோ பிரயாசத்துடன் கட்டி வைத்தார்கள். கீழே மரத்தினால் தளம்போட்டிருக்கிறார்கள். நாலு பக்கமும் கம்பிச்சுவர் வைத்திருக்கிறார்கள். வீடுமோ நாம் சௌக்கியமாகச் சஞ்சரிப்பதற்குப் போதுமான விசாலமுள்ளது. இங்கே பத்துப் பூனைகளும் அவைகளின் குட்டிகளும் ஒருமித்து நம்மைப்

பட்சிக்க வந்தாலும், நாம் பயப்படவேண்டியதில்லை. மேலும் நாம் வருத்தம் இல்லாமல் வெளியே போகவும் உள்ளே வரவும்தக்கதாக, இந்த வீட்டின் சுவரில் நல்ல வளமான துவாரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கரடுமுரடான சிறு வெடிப்புகளில் நுழைந்தால், விலா எலும்பு நொறுங்கிப்போம். இதெல்லாம் பெரிதல்ல. இத்தனை நன்றாகப் பரிமளிக்கிற கருவாட்டை இங்கே வைத்தார்களே, இதுதான் நமது பெரும் செல்வம். அது மிகவும் உருசிகரமாயிருக்கிறதினால், நான் இந்த வெடிப்பால் நுழைந்து, அதை எடுத்துக் கொண்டுவந்து உமக்குக் கொடுப்பது எனது கடமை யென்று நினைக்கிறேன்" என்றது. அப்பொழுது தாய் அதைப் பார்த்து, "என் அருமையான குஞ்சே, நான் சொல்வதை நம்பு; இந்தப் பெட்டி நம்மைப் பிடிக்கும்படி வைத்த யந்திரம். அதில் இருக்கும் கருவாடு நம்மை வஞ்சிக்கும்படி வைத்த இரை. இப்படியெல்லாம் அவர்கள் செய்திருப்பது நம்முடைய நன்மைக்கென்று நினையாதே: கூடுமானால் நமது சாதியார் எல்லாரையும் பிடித்து நாசப்படு

த்துவார்கள். முன்னும் எத்தனையோ பெயர்களைப் பிடித்துக் கொன்றுபோட்டார்கள். யந்திரத்திற் போன சுண்டெலி எப்பொழுதாவது உயிர்தப்பி மீண்டுவந்ததென்று நான் இதுவரையிற் கேள்விப்படவில்லை" என்றது.

வயசில் முதிர்ந்தவர்கள் சொல்லுகிற வார்த்தைகளைச் சிறுவர் கருத்தாய்க் கேட்டு, தங்களுக்கு அபாயம் நேரிட்டிருக்கும்பொழுது அதற்கு விலகும்படி வகைபார்க்கக்கடவர்கள்.

௯௫-வது. மழை.

ஆவி ரூபமாய் ஆகாயத்திற் செல்லுகிற கடல் நீர், பின்பு மேகத்தினின்று மழைநீராய் வருகிறதென்று, சமுத்திரத்தைப் பற்றிய பாடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அது எப்படி ஆகிறதென்று இந்தப் பாடத்திற் சற்று விவரமாகச் சொல்வோம்.

மத்தியானவேளையில் நல்ல வெயில் காயும்பொழுது, ஒரு மட்கலத்திலே தண்ணீர் வார்த்து, அதை வெயிலில் வைத்தால், சற்று

நேரத்திற்குள்ளாய் அந்தத் தண்ணீர் வற்றிப் போம். தண்ணீர் விட்டிருக்கின்ற ஒரு மட்கலத்தை அடுப்பின்மேல் வைத்து, நெருப்பிட்டு எரிக்கும்பொழுது, நெருப்பின் வெப்பத்தினால் அந்தத் தண்ணீர் ஆவியாய் மாறிப் போவது போல, வெயிலிற் காய்கிற நீரும் வெயிலின் வெப்பத்தால் ஆவி ரூபமாய் மாறி, ஆகாயத்திற் செல்லுகின்றது. ஆகிலும் அந்த ஆவி அத்தனை மெல்லிதாய் இருப்பதினால், அது நமது கண்களுக்குத் தோன்றவில்லை. அந்தப் பிரகாரமாய்க் கடல்நீரும் சூரிய வெப்பத்தினால் ஆவி ரூபமாய் எழுந்து செல்லுகின்றது. இவ்வாறு செல்லுகின்ற ஆவி மேகங்களாய்த் திரண்டு மழையாய் வருஷிக்கப்படும்.

பூமியின் மேற் பெய்கின்ற மழைத் தண்ணீரானது, கடவுளுடைய நியமத்தின்படி சேர்ந்த சேர்ந்த இடங்களில் தங்கியிருப்பதும், அங்கங்கிருந்து மற்றிடங்களுக்குப் பிரிந்து செல்வதும், அதினிமித்தம் நமக்கு அளவற்ற நன்மை உண்டாவதுமாகிய இந்த விஷயங்களைக்குறித்துச் சற்று யோசித்துப்பார்ப்போ

மானால், அவைகள் எத்தனை ஆச்சரியமாகத் தோன்றும்.

மலைகளிற் பெய்கின்ற மழைத்தண்ணீர் பூமிக்குட் சுவறி, பாதாளத்திற் பல நீர்க்கால்களாய்ச் சென்று, அங்கங்கே துரவுகளிலும் ஏரிகளிலும் ஊறுகின்றது. கல்லை ஊடுருவி ஊற்றுகளாக ஓடாதிருக்கிற தண்ணீர் சிற்றாறுகளாகவும், பேராறுகளாகவும், அருவியாகவும் பெருகி, அங்கங்கே பூமியைச் செழிப்பிக்கும். மேலும் அவைகள் படகுவிட்டு ஓடுவதற்கும் உபயோகமாகும்.

தண்ணீர் எத்தனை அருமையான ஒரு பேறு! அது நமது தாகத்தைத் தீர்க்கின்றது; நமது வஸ்திரங்களிலும் சரீரத்திலுமுள்ள அழுக்கை நீக்குகின்றது. மரம், பயிர், பூண்டு முதலியவைகளை வளர்க்கின்றது. இப்படி ஜலமானது சீவனுக்கும், சிறப்புக்கும், செழிப்புக்கும் ஆதாரமாயிருப்பதாம்.

௩௬-வது. வயல்.

வீட்டுக்குச் சமீபத்தில் நான்கு புறத்தி

லும் வேலி அடைத்து, அல்லது மதில் வைத்துப் பயிரிடப்பட்டிருக்கின்ற நிலம் தோட்டம் என்னப்படும். வேலியில்லாமற் சிறிதும் பெரிதுமான வரம்புகளாற் பிரிக்கப்பட்டிருக்கின்ற பெருவெளி நிலம் வயல் என்னப்படும். தோட்டங்களிற் காய் கறி பதார்த்தங்களும் புஷ்பங்களும் உண்டாக்கப்படும். வயல்களிலோ பலவகைத் தானியங்களும், அவுரி, புகையிலே முதலிய பயிர்களும் செய்யப்படும். நெல் தாழ்ச்சியின்றி நன்முக விளைந்திருக்கும்பொழுது, வயலானது எத்தனை சிறப்புள்ளதாகத் தோன்றும். தோட்டங்கள் துரவுகளினுலும் குளங்களினுலும் நீர் பாய்ச்சப்படும். வயல்கள், மழை இல்லாதிருக்கும்பொழுது, ஏரிகளினுலும் ஆறுகளினுலும் நீர் பாய்ச்சப்படும். அவைகளுக்குச் சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் பாயும். அப்போதப்போது விளைகிற பயிரினுல் நிலத்தின் கொழுமை குறைந்து, நிலம் இளைத்துப்போகின்றது: ஆதலால் நிலத்தைக் கொழுமையாக்கும்படியாகத் தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் திரும்பத்திரும்ப எருப்போடவேண்

டும். வயல்களிலும் தோட்டங்களிலும் விளைகிற தானியங்கள் பயிர்களாவன,—நெல், கோதுமை, வரகு, மொண்டி, எள், இறுங்கு, சோளம், கொள், விதம்விதமான பயறு, வாழை, கத்தரி, வெற்றிலை, உருளைக்கிழங்கு, வகைவகையான வள்ளிக்கிழங்கு, நிலக்கடலை, தினை, மிளகாய், கொத்தமல்லி, வெள்ளைப் பூண்டு, வெங்காயம், மஞ்சள், இஞ்சி, முதலியவைகளாம்.

௩௭-வது. கப்பல்.

௧-ம். பிரிவு.

இப்பொழுது கப்பலைக்குறித்துச் சில காரியங்களைச் சுருக்கமாய்ச் சொல்வோம். இந்தப் புஸ்தகத்தை வாசிக்கும் சிறுவரில் அனேகர் ஒருபொழுதும் கடலைப் பார்த்திருக்க மாட்டார்கள்: ஆதலால் கப்பல் எப்படிப்பட்டதென்று அவர்களுக்குத் தெரியாது. தண்ணீர் ஆழமாயுள்ள ஆறுகள் இருக்கின்ற சில தேசங்களில், ஜனங்கள் அந்த ஆறுகளைத் தாண்டிச் செல்வதற்கு ஏதுவாகப் பாலங்கள்

கட்டப்படாதிருக்கிறதும் உண்டு. அப்படி இருக்கும்பொழுது, அங்குள்ள ஜனங்கள் சிறிது சுலபமான கருவிகளை ஏற்படுத்தி, அந்தக் கருவிகளின் வழியாய் ஆற்றைத் தாண்டிப் போக்கு வரவு செய்வது வழக்கம். சில இடங்களிலுள்ளவர்கள் பல மட்குடங்களை ஒன்றோடொன்று அடுத்திருக்கும்படி தொடுத்துக் கவிழ்த்து, அவைகளின் மேல் மரக் கொம்புகளால் ஒரு தட்டைக் கட்டி, ஆற்றில் விட்டு, அதில் ஏறி ஆற்றைத் தாண்டுவார்கள். சில இடங்களில் வசிக்கும் ஜனங்கள் பல செடிகளை வெவ்வேறு கட்டுகளாய்க் கட்டி, அந்தக் கட்டுகளை ஒன்றாகத் தொடுத்து, அதின்மேல் ஏறிப் போக்குவரவுசெய்வார்கள். மற்றிடங்களிலுள்ளவர்கள் மரப்பீலிகளில் ஏறிப்போவார்கள். இத்தேசத்தின் சில பகுதிகளில் வாசமாயிருப்பவர்கள் பல மூங்கிற் கொம்புகளை வட்டமாக வளைத்துப் பெரும் கூடைபோலப் பின்னி, அதன் புறத்தைத் தோலால் மூடி, திரளான ஜனங்கள் அதில் ஏறி அங்கங்கே போய்வருவார்கள். சில மிருகங்களின் தோலிற் காற்று விட்டு அடை

த்து, அதன்மேலே தட்டுக் கட்டி, அந்தத் தட்டில் ஏறி, ஆறுகளிற் பிரயாணம்செய்பவர்களும் உண்டு.

௩அ-வது. கப்பல்.
உ-ம். பிரிவு.

நாம் பெரிய ஆற்றங்கரைகளுக்கும் கடல் ஓரத்திற்கும் போவோமானல், ஆற்றிலும் கடலிலும் கட்டுமரங்கள், வள்ளங்கள், சிறு படகுகள், தோணிகள் ஓடுவதைக் காணலாம். அவைகளிற் பாய் கட்டப்பட்டிருக்கும். அந்தப் பாயிலே காற்று உதைத்து உருக்களை ஓடும்படி செய்யும். சில சிறு ஓடங்களைத் தண்டுவலித்து ஓட்டுவார்கள். மேலும் மிகவும் சிறந்து பருத்திருக்கின்ற வேறு உருக்களையும் காணலாம். அவைகளுக்குக் கப்பல் என்று பெயர். அந்தக் கப்பல்களில் அனேக வெள்ளைப்பாய்கள் கட்டப்பட்டிருக்கும். அந்தக் கப்பல்களின் பாய்மரங்கள் உயரமான பனைமரங்களைப்பார்க்கிலும் அதிகம் உயர்ந்தவைகள். சிறிது கப்பல்கள் காற்றினலல்ல, ஆ

வியினுற் செலுத்தப்படும். அந்தக் கப்பல்களு க்கு ஆவி மரக்கலங்களென்று பெயராம். அவைகள் அதிக விரைவாய் ஓடும். அவைகளிற் சில ஒரு மணிநேரத்தில் கரு-கசு மைல்தூரம் ஓடும்.

சில பெரும் கப்பல்களில் திரளான ஜனங்கள் எவ்வளவும் சங்கடமில்லாமல் மிகுந்த சௌக்கியமாய்ப் பிரயாணம்போவார்கள். அவர்கள் வீடுகளில் என்னென்ன சுகங்கள் உண்டோ, அந்தச் சுகங்களெல்லாம் கப்பல்களிலும் உண்டு. தேசத்தில் அங்கங்கே நடக்கிற வேலைகள் எல்லாம் அந்தக் கப்பல்களிலும் நடக்கும்.

சத்துருக்களுக்கு எதிர்கொண்டு செல்லத்தக்க போர்க்கப்பல்களில் பெரும் பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கும். அவைகளிலிருந்து பீரங்கிக்குண்டுகளைப் பிர்யோகிப்பதினுல் மறு கப்பல்களும், கடற்கரை ஆற்றங்கரைகளிற் கட்டப்பட்டிருக்கின்ற பட்டணங்களும் எளிதில் நாசமாக்கப்படும்.

ந௯-வது. இந்தியா.

பூமியின் மேற்புறத்திலுள்ள நான்கு தேசப் பிரிவுகளைக்குறித்து வாசித்திருக்கிறோம். அந்த நான்கு பிரிவுகளில் ஒன்று ஆசியாவென்பது. நாம் வாசமாயிருக்கின்ற இந்துதேசம் ஆசியாவின் தென் பாகத்தில் இருக்கின்றது. இந்துதேசம் முக்கியமாக நாலுபாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளில் ஒரு பகுதி வட இந்தியாவென்பது: அது தீபேத் தேசத்திற்கும் இந்துதேசத்திற்கும் இடையிலுள்ள இமையமலையைச் சார்ந்திருக்கின்றது. அங்குள்ள குடிச்சனங்கள் பருமையும் பலமுமுள்ளவர்கள். மற்றொரு பகுதி இந்துஸ்தானம் என்பது. அதற்கு இடையிற் கங்கையென்னும் பெரிய நதி ஓடுகின்றது. வங்காளத்தில் பெரிதான பட்டணம் ஒன்று இருக்கின்றது. அதற்குக் கல்கத்தா என்று பெயர். இந்தியாவின் வேறு ஒரு பகுதி தக்ஷணம் என்பது. தக்ஷணத்திற் பம்பாய் என்னும் பெரிய நகரம் உண்டு. அவ்விடம் முற்காலத்திற் கடல் சூழ்ந்த ஒரு தீவா

யிருந்தது. இப்பொழுதோ அது தேசத்தின் கரையோடு செய்கரையினுற் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் மற்ருெரு பகுதி நாம் வாசமாயிருக்கிற தென் இந்தியாவென்பது. அதிலுள்ள முக்கியமான பட்டணம் சென்னபட்டணமாம். அது ஒருதுறை அடுத்த நகரம்.

இந்து தேசத்தில் துரைத்தனம் நடத்தும் அதிபதிகள் மகத்துவம்பொருந்திய அங்கிலோ இராக்கினியவர்களால் ஏற்படுத்தி அனுப்பப்படுவார்கள்.

இத்தேசத்துச் சனங்கள் பலபாஷைகளைப் பேசுவார்கள். உலகத்திற் சிறந்திருக்கின்ற தேசங்களில் இந்துதேசமும் ஒன்ரும்.

சங-வது. பொன்னம்மாள்.

க-ம். பிரிவு.

பொன்னம்மாள் என்கிற பெண்பிள்ளை மிகவும் சிறுபிராயமாயிருந்தபொழுது, அவளுடைய தந்தை தாயர்கள் இறந்துபோனர்

கள். பின்பு பொன்னம்மா உண்ணுமலை என்னும் ஒரு கிழவி வசத்தில் ஒப்பிக்கப்பட்டாள். உண்ணுமலையென்பவள் பொதுவாக எவர்களுக்கும் பட்சமுள்ளவளாய் இருந்தும், பிள்ளைகளைச் சற்றே கண்டிப்பாய் நடத்துவது அவள் வழக்கமாயிருந்தது. அத்தனை சிறு பருவமுடைய பிள்ளையை நாளுக்கு நாள் பத்திரமாய்ப் பார்த்து வளர்த்துக்கொண்டுவருவது உண்ணுமலைக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. எப்படியும் பொன்னம்மாள் என்பவள் யாதொரு குறை கண்டால், அதைப் பாராட்டாமல், சகித்துக்கொண்டு, உண்ணுமலையுடைய சொல்லைக் கேட்டு, தன்னால் ஆனமட்டும் அவளுக்குத் திர்ப்திகரமாய் நடந்தாள்; இதை உண்ணுமலையென்பவள் நாளாவர்த்தியிற் கண்டு, அவளைத் தன் பிள்ளைபோல எண்ணி ஆதரித்தாள். பொன்னம்மாள் மற்றச் சிறு பிள்ளைகளைப்போல, தானும் பாடசாலைக்குப் போய்ப் படித்துவருவதற்கு மிகவும் ஆசையுள்ளவளாய் இருந்தாள். பாடசாலையிற் கற்றுக்கொண்ட கல்வி விஷயங்களைக்குறித்து மற்றப் பிள்ளைகள் பேசுவதைப் பொ

ன்னம்மாள் கேட்டு, இந்த விஷயங்களைப் படிப்பதற்கு எனக்கு உதவியில்லாமற்போயிற்றே. என்செய்வேனென்று துக்கித்தாள்.

உண்ணுமலைக்கிழவி சீவனம்பண்ணுவதற்கு யாதொரு வழியற்றவளாயிருந்ததினுல், பொன்னம்மாள் சிறு பிராயமுடையவளாயினும், பகல் முழுவதும் வருந்தி வேலைசெய்யும்படி நேரிட்டது. அவள் சிறிதுவேளை பக்கத்து வீட்டில் வாசமாயிருந்த குடியானவன் ஒருவனுடைய வயலிலுள்ள கற்களைப் பெறுக்கி எறிவாள்; சிறிதுவேளை அவனுடைய ஆடுகளை மேய்ப்பாள்; சிறிதுவேளை அவனுல் இடப்பட்ட அற்றைக்கூலி வேலைகளைச் செய்வாள். அவள் எப்பொழுதும் அதிகாலையில் தனக்கு இடப்பட்ட வேலைகளைத் தொடங்குவாள். சில சோம்புத்தன்மையுள்ள பிள்ளைகள் யாதொரு வேலைசெய்யும்பொழுது, கண்ணுக்குமுன்னே ஜாக்கிரதையாகவும், புறத்திற் சோர்பாகவும் நடப்பது வழக்கம். அவர்கள் தங்கள் குற்றங்களை ஆர் கண்டாலும், காணுதிருந்தாலும் கடவுள் எப்பொழுதும் காண்பாரென்பதை நினைக்கிறதி

ல்லே. பொன்னம்மாளோ அப்படியல்ல. அவள் விளேயாட்டிற் கருத்து வைக்காமல் எப்பொழுதும் வேலேயிற் கருத்தாயிருப்பாள். வேலேமுடிந்தவுடனே தாமதமின்றி வீட்டுக்குப் போய், வீட்டை ஒழுங்குபடுத்துவதிலும், போசனத்துக்கு வேண்டிய எத்தினங்களேச் செய்வதிலும் உண்ணுமலேக்கு உதவிபண்ணுவாள். இதெல்லாம் உண்ணுமலேக்கு மிகவும் சந்தோஷமாய் இருந்தது. இப்படி இருந்த காலத்தில், பகல் முழுவதும் வருத்தத்துடன் வேலேசெய்கிற வறிய பிள்ளேகள் சாயந்தரத்தில் எழுத வாசிக்கப் பழகுவதற்காக அவ்வூரில் ஒரு பாடசாலே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பொன்னம்மாள் என்பவளும் அந்தப் பாடசாலேக்குப் போய், மிகவும் கருத்தாகப் படித்துத் தேறினள். சிறிதுவேளே அவள் உபாத்தியாயரிடத்திற் புஸ்தகம் வாங்கி, வீட்டுக்குக் கொண்டுபோய், வேலேயில்லாதிருக்கிறபொழுது வாசித்துவருவாள். இவ்வாறு கொஞ்சக் காலத்துக்குள்ளாக அவள் தடையில்லாமல் தாராளமாய் வாசிக்கத்தக்கவளானள்.

சக-வது. பொன்னம்மாள்.

உ-ம். பிரிவு.

பொன்னம்மாள் பத்துப் பருவமுடையவ ளானபொழுது, அவளுக்கு அதிக துயரமான ஒரு கெடுதி சம்பவித்தது. எப்படியெனில், அவள் ஒரு சாயங்காலம் பக்கத்து வீட்டுக்காரிக்காகச் சமீபத்தில் இருந்த ஒரு துரவில் ஒரு குடம் தண்ணீர் மொண்டுவரும்படி போகையில், ஒரு வண்டி மிகவும் விரைவாய் ஓடிவருகிற சத்தத்தைக் கேட்டாள். அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தபொழுது, வண்டியிலே தொடுக்கப்பட்டிருந்த குதிரை எதையோ கண்டு மிரண்டு, சாரதிக்கு அடங்காமல் வெறிகொண்டாற்போல மிகுந்த வேகமாய் ஓடி வருவதைக் கண்டாள். குதிரை மிகவும் சமீபத்தில் வருகிறபொழுது, எதிர் வழியில் ஒரு சிறு குழந்தை படுத்துத் தூங்கியிருப்பதைப் பொன்னம்மாள் கண்டு, பதை பதைத்து, ஐயோ இச்சிறு பாலகன் குதிரையின் காலுக்குள் நசுங்கி இறந்துபோவானே என்று எங்கி, தண்ணீர் மொள்ளக் கொ

ண்டுபோன தோண்டியை வைத்துவிட்டு, ஓ டிப் பாலகனைத் தூக்கிக்கொண்டு திரும்புகிற தற்கு முன்னே, க்ஷணப்பொழுதிற்குள்ளாக, குதிரை நெருங்கி வந்து, அவளைக் காலால் இடறிவிட, வண்டியின் சக்கரம் அவளுடைய காலுக்குமேல் ஏறி உருண்டோடிற்று—அவளுக்கு அதினல் உண்டான வருத்தம் மிகுதியாயிருந்ததினல், அவள் உரத்த சத்தமாய் அழுதாள். பக்கத்துக் குடிசைகளில் வாசமாயிருந்த ஜனங்கள் பலர் அந்தச் சத்தத்தைக் கேட்டு, ஓடிப்போய், அவளைப் பார்த்துப் பரிதபித்தார்கள். வைத்தியன் ஒருவன் வந்து பார்த்து, ஒரு கால் முறிந்துபோயிற்றென்றும் மறுகால் காயப்பட்டதென்றும் சொன்னன். நாளுக்கு நாள் அவளுக்குச் சுரம் அதிகரித்துச் சொல்வதற்கு அரிய உபத்திரவம் உண்டாயிற்று. ஆகிலும் சிறிது காலம் சென்ற பின்பு, அவள் சௌக்கியம் அடைந்தாள்: அடைந்தும், அவள் முடம் ஒருக்காலும் மாற்றப்படக் கூடாதிருந்தது. இப்படித் தனக்கு நேரிட்ட கெடுதியைக்குறித்து அவள் நினைக்கும்பொழுதெல்லாம் வெகு துன்

பப்படுவாள். தான் இனி ஒருவருக்காவது உபயோகமுள்ளவளாயிராமல் எவர்களுக்கும் ஒரு பாரமாயிருக்கும்படி சம்பவித்ததேயென்று எண்ணித் துயரப்படுவாள். ஆகிலும் தன் சரீரம் ஊனப்பட்டாலும், அந்தச் சிறு பாலகனுக்குச் சற்றுவது சேதம் வராதபடிக்கு அவனைக் காப்பாற்றும்படி தான் நிமித்தமாயிருந்தது அவளுக்கு அதிக சந்தோஷமாயிருந்தது: அவள் முன்போல வயல் வெளியில் வேலை செய்யக்கூடாதிருந்தும், தையல் வேலை செய்வதினாலும், அயல் வீட்டுக்காரருடைய குழந்தைகள் உறங்கும்படி தொட்டில் ஆட்டுவதினாலும், வியாதியாகப் படுத்திருக்கிற பெண்களுக்குக் கதை சொல்வதினாலும் தனக்கும் உண்ணுமலைக்கும் சீவனத்துக்கு வேண்டிய அளவு தேடிக்கொள்வாள்.

சஉ-வது. அங்கிலோதேசம்.

அங்கிலோதேசம் என்னும் பெயர் நாம் எல்லாரும் சொல்லி வழக்கப்பட்ட பெயர். நமது துரைத்தனத்தார்கள் அங்கிலோதேசத்தி

லிருந்து வருகிறுர்கள். ஆதலால் அவர்கள் அங்கிலேயர் என்னப்படுவார்கள். அங்கிலோ தேசம் ஐரோப்பாக் கண்டத்தில் இருக்கின்றது. ஒருவன் இங்கிருந்து குறுக்கு வழியாக அங்கிலோதேசத்திற்குப் போனுல், அவன் அந்தக் கரை சேர ஒரு மாதம் செல்லும். அங்கே மாரிகாலத்திற் குளிர் அதிகம். ஆதலால், தெங்கு, மா, வாழை முதலிய மரங்கள் அத்தேசத்தில் உண்டாகிறதில்லை. கோதுமை முதலிய தானியங்கள் அதிகமாய் விளையும். அங்கே பலவித உருசிகரமான பழங்கள் உண்டு. அத்தேசத்தில் நெல் விளையாது. அங்கே துஷ்ட மிருகங்கள் இல்லை. விஷப் பாம்புகளாவது, தேள் முதலிய செந்துகளாவது இல்லை. அங்குள்ள ஆடுமாடுகள், குதிரைகள் எல்லாம் அதிகம் சிறந்தவைகள். கோதுமைமாவினுற் சுட்ட அப்பம், உருளைக்கிழங்கு, வகைவகையான காய்கறிகள், மாமிசம், மச்சம் இவைகளே அங்கிலேயருக்கு ஆகாரங்களாம். அங்குள்ள ஐசுவரியவான்கள் சிறிது வேளை சோறு கறி உண்பார்கள்.

அங்கிலோதேசத்தின் முக்கியமான பட்ட

ணம் லண்டன் என்பது. அதைப்போல் அ
த்தனை பெரிதும் ஐஸ்பரியமுமுள்ள நகரம் ம
ற்றெங்குமில்லை.

அங்கிலோதேசம் ஒரு இராக்கினியால் அர
சாளப்படுகின்றது. அந்த இராக்கினிக்கு விக்
தோரியாவென்று பெயராம். அங்குள்ள ம
காசபை பார்லிமெண்ட் எனப்படும்.

சக-வது. மதியற்ற வேலையாட்கள்.

ஆஸ்தி சம்பத்து உடையவனாகிய ஒரு வ
ர்த்தகன் இருந்தான். அவன் தன் பல்லக்குச்
சுமக்கிற ஆட்களை அழைத்து, பசுமாட்டுக்கு
நாள்தோறும் புல்லு வெட்டிக்கொண்டுவந்து
போடுங்கள் என்றான். அதற்கு அவர்கள்,
"நாங்கள் பல்லக்கு மாத்திரம் சுமப்போம்,
வேறு வேலை செய்யமாட்டோம்" என்றார்
கள். இப்படி இருக்கும்பொழுது, ஒரு நாள் ப
சுவின் கன்று வெளியில் ஓடிப்போயிற்று. அப்
பொழுது வர்த்தகன் அந்தச் சிவிகையாட்க

ளைப் பார்த்து, "கன்றுக் குட்டியைத் தேடிப்பி டித்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, அவர்கள், "நாங்கள் பல்லக்குச் சுமக்கிறவர்க ளோ, மாடு மேய்க்கிறவர்களோ" என்றார்கள். அப்போது வர்த்தகன் அவர்களுக்குப் புத்தி வரும்படியாய்ச் செய்யவேண்டுமென்று யோ சித்து, மத்தியான வேளையிலே பல்லக்குக் கொண்டுவரச் சொல்லி, அதிலே தான் ஏறி, கன்றுக்குட்டியைத் தேடும்படி நெரிஞ்சில் முள் இருக்கிற காட்டு மார்க்கமாய்ப் போகச் சொன்னான். அவர்கள் அப்படியே போய்த் திரிந்து அவதிப்படுகையில், வர்த்தகனிடத்தில் முறையிட்டார்கள். அதற்கு அவன், "பல்ல க்குச் சுமக்கிறது உங்கள் கடமை, கன்றுக்குட் டியைத் தேடுகிறது என் கடமை" என்று சொ ல்லி, அவர்கள் பல்லக்கை நிறுத்தாமற் சுமக் கும்படி செய்தான். அன்றுமுதல் அவர்கள் நல்ல புத்தி அடைந்து, எசமான் ஏவும் எந்த க் காரியத்தையும் செய்வது கடமையென்று ஒப்புக்கொண்டார்கள்.

சச-வது. தேசபடம்.

தேசபடமாவது பூமியின் உருவத்தை, அல்லது அதிலுள்ள தேசங்களில் ஒன்றின், அல்லது பலவற்றின் உருவத்தை எழுதிக்காட்டும் படமாம். படத்தின் தலைப்புறம் வடக்கும், அடிப்புறம் தெற்கும், இடப்புறம் மேற்கும் வலப்புறம் கிழக்குமாம்.

உலகபடம் கிழக்குப்பாதியுண்டை என்றும், மேற்குப்பாதியுண்டை என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். கிழக்குப்பாதியுண்டையில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா என்கிற பெரிய தேசங்கள் இருக்கின்றன. மேற்குப்பாதியுண்டையில் அமெரிக்காதேசம் இருக்கின்றது. நாம் பூமியின் கிழக்குப்பாதியுண்டையில் வாசமாய் இருக்கிறோம். நமது தேசம் இந்தியா என்னப்படும். அது ஆசியாக்கண்டத்திலுள்ள ஒரு தேசமாம். இந்தியாவில் அனேக நாடுகளும், நகரங்களும், ஆறுகளும், மலைகளும், வனங்களும் உண்டு. இந்தியாவின் தெற்குப் பகுதியில் வெப்பம் மிகுதி. சீதளசக்கர பூமியைச் சார்ந்த இடங்க

வில் வாசமாயிருக்கிற ஜனங்களுக்குக் குளிர் அதிகம். அங்கே சிறிது காலங்களில் தண்ணீர் உறைந்து கற்போல் இறுகிப்போவது உண்டு. அங்குள்ள பையன்களும் பெண்பிள்ளைகளும் காலில் இருப்பு விற்களைக் கட்டிச் சறுக்கி விளையாடுவார்கள்.

சஈ—வது. ஒருபையனும், இரண்டு நாகணவாய்ப்புட்களும்.

க—ம். பிரிவு.

ஒரு கிராமத்தில் ஒரு சிறுவன் இருந்தான்; அவன் பெயர் வீரப்பன். ஒரு நாள் அவன் தகப்பன் அவனை அழைத்து, "வீரப்பா, இங்கே வா, இந்தக் கூடையிற் கொஞ்சம் முளைக்கீரை வைத்திருக்கிறேன். இதை எடுத்துக்கொண்டுபோய், பக்கத்துத் தெருவில் இருக்கிற அபிராமிக்குக் கொடுத்துவிட்டுவா" என்றான். வீரப்பன் கூடையைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டுபோய், அபிராமி கையிற் கொடுத்தான். அபிராமி அந்தக்

கிளையை வாங்கி, அதிக சந்தோஷப்பட்டு, "அப்பா வீரா, நீ எப்போது இங்கே வருவா யென்று வழிபார்த்துக்கொண்டிருந்தேன்; உனக்கு வெகுமதி தரும்படி ஒன்று வைத்திருக்கிறேன்" என்றாள். வீரன் மிகுந்த ஆவலுடனே, "அம்மா, அதென்ன வெகுமதி, எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். அப்பொழுது அபிராமி "என்னிடத்தில் நின்ற நாகணவாய்ப்பறவைக்குஞ்சுகளைப் பார்த்திருப்பாயல்லவா" என்ன, வீரன் வெகு சந்தோஷம் அடைந்து, "ஆம் ஆம், பார்த்திருக்கிறேன். அத்தனை அழகான நாகணவாய்ப்பறவைக்குஞ்சுகளை நான் மற்றெங்கும் கண்டதில்லை" என்றான். அபிராமி "இந்தக் குஞ்சுகள் இரைதேடித் தின்னத்தக்க பருவமானதினால், நேற்றுத் தாய்க்குருவி அவைகளை விட்டுப் பறந்து போய்விட்டது" என்றாள். வீரப்பன் அது கேட்டு, "நான் ஒரு நாகணவாய்ப்பறவைக்குஞ்சாய்ப் பிறவாமல் மனுஷனாய்ப் பிறந்ததற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்: நான் எத்தனை அதிக வயதுள்ளவனாய் வளர்ந்தபின்னும், அந்த நாகண

வாய்ப்பறவை தன் குஞ்சுகளைக் கைவிட்டது போல, என் தாய் என்னைக் கைவிடமாட்டாளே" என்றான்.

அப்பொழுது அபிராமி "ஆம், அது மெய்தான்; அது நிற்க, இந்தா; இந்தக் கூட்டிலே இரண்டு குஞ்சு விட்டிருக்கிறேன்; ஒன்று உனக்கு, மற்றொன்று உன் சிற்றப்பன் மகன் மாயாண்டிக்கு; நீ வீட்டுக்குப் போய்ச்சேருகிறவரையில், கூட்டைத் திறவாமற் பத்திரமாய்க் கொண்டுபோய், ஒன்றை நீ பிடித்துக்கொண்டு, மற்றதை மாயாண்டிக்குக் கொடுக்கும்படி உன் தகப்பனிடத்தில் அனுப்பு, வழியிலே தங்காமல் நேரே வீட்டுக்குப் போ" என்றாள்.

வீரப்பன், "அம்மா, நீர் எனக்கும் மாயாண்டிக்கும் இத்தனை பெரிய வெகுமதி கொடுத்ததற்காக உமக்கு அனேகம் வந்தனம் சொல்லுகிறேன். இந்த இரண்டு குஞ்சுகளில் நான் எடுத்துக்கொள்ளவேண்டியது எது, மாயாண்டிக்குக் கொடுக்கவேண்டியது எது என்று எப்படி அறிந்துகொள்வேன்" என்றான். அதற்கு அபிராமி "பெரிதல்ல, எதென்றாலும் சரி. இரண்டும் ஒன்றுக்கொன்று சமானமாயிருக்கின்றன" என்றாள்.

வீரப்பன் சற்றும் தாமதியாமல், தான் பெற்ற வெகுமதியை மிகுந்த சந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போகிறபொழுது, பாதிவழியில் தன் தோழனாகிய அண்ணாமலையைக் கண்டு, "அண்ணாமலை, நல்லது உன் சமர்த்தை அறிவோம், இந்தக் கூட்டுக்குள் என்ன இருக்கிறது சொல்லு" என்றான். அண்ணாமலையென்பவன், "கூட்டில் என்ன இருக்கின்றது, அங்கொன்றும் இல்லையென்று நினைக்கிறேன்" என்றான். அப்பொழுது வீரப்பன் "நான் சொல்லுகிறேன் கேட்கிறாயா? இந்தக் கூட்டில் மிகவும் அழகான இரண்டு சிறு நாகணவாய்ப்பறவைக்குஞ்சுகள் இருக்கின்றன" என்று சொல்லி, கூட்டைத் திறந்து, ஒன்றைப் பிடித்துக் காண்பித்தான். உடனே, அது அவனுடைய கையிலிருந்து வழுவி, தத்திப் பறந்துபோயிற்று. அப்பொழுது அண்ணாமலை ஓடி, அதைப் பிடித்துவந்து, கூட்டுக்குள் விட்டு அடைக்கும்படி பார்த்தான். வீரப்பன் "அப்படியல்ல, சற்றுப்பொறு அண்ணாமலை, அபிராமியம்மாள் இந்தக் கூட்டைத் திறக்கவேண்டாமென்று எனக்குத் திட்டமாய்க்

கட்டளைபண்ணியிருப்பதினால், நான் இனி அதைத் திறக்கமாட்டேன். நாகணவாய்ப்பறவைக் குஞ்சை என் கைக்குட்டைக்குள் வைத்துவிடுஎன்று சொல்லிப் பத்திரமாய் இறுக்கிக் கட்டிக்கொண்டு, ஒரு இடத்திலும் பராக்குப்பாராமல் நேரே வீட்டுக்கு ஓடினான்.

நாலாம் மாதம்.

சக-வது. ஒரு பையனும், இரண்டு நாகணவாய்ப்புட்களும்.

உ-ம். பிரிவு.

ஓடுகிறபொழுது, அவன் ஒரு கல்லில் இடறிக் குப்புற விழுந்தான். ஆகிலும் அதினால் அவனுக்கு அதிக நோவில்லாதிருந்ததினால், அவன் திரும்பவும் கூடையை எடுத்துக்கொண்டு ஓடி, வீட்டுவாசலிற் சேர்ந்தவுடனே தாயை வர அழைத்து "அம்மா, அபிராமியம்மாள் எனக்கும் மாயாண்டிக்கும் ஆளுக்கொரு நாகணவாய்ப்பறவைக்குஞ்சு வெகுமதியாகக்கொடுத்தாள். ஒன்று இந்தக் கூட்டில் இருக்கின்றது, ஒன்று என் கைக்குட்டைக்குள் இ

ருக்கின்றது" என்றுசொல்லி, கூடையிற் கட்டியிருந்த நாகணவாய்ப்பறவைக்குஞ்சை அவிழ்த்துக் காண்பித்தான். அந்தக் குஞ்சு சோர்ந்து அசையாமற் கிடந்தது. வீரப்பனுடைய தாய் அதை வாங்கிப் பார்த்தபொழுது, அது கழுத்துமுறிந்து இறந்துபோயிற்றென்று கண்டாள். உடனே வீரப்பன் விம்மிவிம்மி அழுது, "நான் வழியில் ஒரு கல்லின்மேற் கால் இடறி விழுந்தேன். அப்பொழுதே இதின் கழுத்து முறிந்திருக்கவேண்டும்; ஆகிலும் என் குஞ்சுக்கு ஒரு சேதமும் இல்லை, இது மாயாண்டி குஞ்சு" என்றான். அவன் தாய் "அப்பா மகனே, இந்தக் குஞ்சைத்தான் மாயாண்டிக்குக் கொடுக்கவேண்டுமென்று அபிராமியம்மாள் சொன்னாளா?" என்று வீரப்பனைக் கேட்க, வீரப்பன் "அப்படிச் சொல்லவில்லை, எந்தக் குஞ்சைக் கொடுத்தாலும் சரி, யாதொரு பேதமில்லையென்று சொன்னாள்" என்றான். அப்பொழுது வீரப்பனுடைய தாய் "மகனே சற்றுப்பொறு, எந்தக் குஞ்சைக் கொடுத்தாலும் சரியென்று இப்பொழுது சொல்வது நியாயமல்லவே, அபிரா

மியம்மாள் உன்னிடத்தில் இந்த இரண்டு நா கணவாய்ப்பறவைக்குஞ்சுகளையும் ஒப்பித்த பொழுது, அவைகள் சௌக்கியமாய் இருந் தனவல்லவா? அவைகளில் ஒன்று இறக்கும் படி நேரிட்டது நீ கொண்டுவந்தபொழுதல் லவா? இப்படியிருக்க, இறந்த குஞ்சை எடுத் துக்கொள்வதற்கு மாயாண்டி எப்படி உடன் படுவான்? நல்லது, மாயாண்டியென்பவன் இந் தக் குஞ்சுகளைக் கொண்டுவந்தானென்றும், அவன் கொண்டு வந்தபொழுது, இவைகளில் ஒன்று இறந்துபோயிற்றென்றும் வைத்துக் கொள்வோம். அவைகளில் எந்தக் குஞ்சை உனக்குக் கொடுப்பது நியாயமாயிருக்கும்? உ யிருள்ளகுஞ்சையா, இறந்தகுஞ்சையா? இத ற்கு உத்தரம் சொல்" என்றாள். வீரப்பன் ச ற்றுத் தாமதித்துக் கலங்கி "அம்மா, அவன் எ னக்கு உயிருள்ளகுஞ்சைத்தான் தருவது நி யாயமாயிருக்கும். ஆதலால், நானும் அவனு க்கு இந்த உயிருள்ள குஞ்சையே கொடுப்பே ன். ஆகிலும் அதைக் கொடுத்துப்போட்டு மனம் பொறுத்திருப்பது மிகவும் அருமை" என்றான்.

"மெய்தான், மகனே, ஒன்றுகேள், பிறர் உனக்கு ஏதேதுசெய்யவேண்டுமென்று விரும்புகிருயோ, அதனையே நீயும் பிறருக்குச் செய்தாய் என்கிற நினேவா, அல்லது இந்த நாகணவாய்ப்பறவைக்குஞ்சா, எது பெரிது" என்று வீரப்பனுடைய தாய் கேட்க, வீரப்பன், "அம்மா, அந்த நினேவே ஆயிரமடங்கு உத்தமமானது, அந்த நினேவு எப்பொழுதும் மனதில் நிற்கும், நாகணவாய்ப்பறவைக்குஞ்சோ சிறிதுகாலத்திற்குள்ளாகச் செத்துப்போம்" என்ருன்.

பின்பு வீரப்பன், அந்த உயிருள்ளகுஞ்சை மாயாண்டியென்பவனுக்கு மிகுந்த சந்தோஷத்துடன் அனுப்பினுன்; மாயாண்டியும் அதை ஆவலுடன் வாங்கி வளர்த்தான்.

சஎ-வது. நிலக்கரி.

நிலக்கரியானது பூமிக்குள்ளே கிண்டியெடுக்கப்படுகின்ற ஒரு இயற்கையான பொருளாம். அது மிகவும் கருமையும், கடினமும், சோதியுமுள்ளதும், எளிதில் ஒடியத்தக்கதுமான வ

ஸ்து. நிலக்கரி பல தேசங்களில் உண்டு. அது அங்கிலோதேசத்திலே திரளாய் வெட்டியெடுக்கப்படுகின்றது. அது வங்காளத்திலும் தாமோதரம் என்னும் நதிக்குச் சமீபத்தில் உண்டு. நிலக்கரி அடுப்பு எரிக்கும்படி விறகாக உபயோகிக்கப்படுகின்றது. பலவிதக் கைத்தொழில்களைச் செய்வதிலும், இரும்பு உருக்குதல் முதலான மற்ற முக்கியமான வேலைகளிலும் திரளான விறகு வேண்டியிருப்பதினால், நிரசவஸ்துகளுக்குள்ளே நிலக்கரியும் அதிக விசேஷமுடையதுதான். ஆவி மரக்கலங்களையும், இருப்புப்பாதை யந்திரங்களையும் இயக்குதற்குக் காரணப்பொருளாகிய ஆவி அதிகமாய் உண்டாவதற்காகத் தண்ணீர் காய்ச்சும்படி அடுப்பு எரிப்பதற்கு அதிக நிலக்கரி உபயோகப்படுகின்றது.

வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், இருப்புப்பாதை ஸ்தானங்களுக்கும், வீதிகளுக்கும் விளக்கு வைப்பதற்காக ஒருவித வாயு நிலக்கரியினாற் செய்யப்படும்; மேலும் தண்ணீர், தேங்காய் முதலிய வஸ்துகளினாலும் விளக்கு எரிக்கும் வாயு செய்யப்படுகின்றது.

சஅ-வது. தீயோர் இயல்பு.
க-ம். பிரிவு.

பெருந்தீ பற்றின ஒரு புதரிலே இருந்த பாம்பு தான் இறந்துபோவேனென்று பயந்து, தப்பித்துக்கொள்ள எத்தினப்பட்டது. அந்தப் புதரைச்சூழத் தீ பற்றியிருந்தபடியால், அது புறத்திற் போவதற்கு ஆகவில்லை. அத்தருணத்தில் அது வழிப்போக்கன் ஆகிய ஒரு வர்த்தகன் தனக்கு நேராக வருவதைக் கண்டு, அவனைப்பார்த்து, "ஓ, சிநேகிதனே, நீ என்பிராணனைக் காப்பாற்றவேண்டும்" என்றது. அதற்கு அவன் "நீ ஒரு விஷமுள்ள செந்து, உனக்குச் சகாயஞ்செய்தால், பின்பு நீ எனக்குத் தீங்கு செய்வாயென்று அஞ்சுகிறேன்" என்றான். அதற்கு அந்தப் பாம்பு, "பயம் இல்லை. நீ என் பிராணனைக் காப்பாற்றியிருக்க, நான் உன் பிராணனை வாங்குவேனென்று நீ நினைக்கலாகாது" என்றது. வர்த்தகன், உபகாரம் செய்வதினால் ஒருவனும் கெட்டுப்போகமாட்டான். அவனைக் கடவுள் சந்தேகம் இல்லாமற் காப்பாற்றுவாரென்று யோசித்துத்,

தன் பையின் இரு பக்கத்திலும் ஒரு கயிறு கட்டி, அதை ஒரு தடியின் நுனியிலே பூட்டி, புதருக்குள் விட்டான். அந்தப் பாம்பு பைக்குட் புகுந்தபோது, அதை எடுத்து வெளியே விட்டான். கொடுமையும் தந்திரமுமுள்ள அந்தப் பாம்பு இவ்விதமாக விடுதலையானபின்பு, சமயம் வாய்த்ததைக் கண்டு, தன் உபகாரியாகிய அந்த வர்த்தகனைக் கடிக்கப் போயிற்று. அதைக்குறித்து அவன் "நீ ஏன் இப்படி அநீதஞ்செய்ய வருகிறாய்" என்றான்? பாம்பானது "நீ எனக்கு உதவிசெய்திருந்தும், நான் உன்னைக் கொல்வதற்கு அது தடையல்ல. உபகாரிகளைக் கொல்லுதல் எங்கள் வழக்கம்; எங்கள் சுபாவம் மனிதனைக் கொல்லுதல், மனிதன் எங்களுக்கும் மற்ற எல்லா மிருகங்களுக்கும் சத்துருவாய் இருக்கின்றான். இதைக்குறித்து நீ சந்தேகிப்பாயாகில், யாரிடத்திலாவது விசாரணைசெய்துகொள்" என்றது.

அத்தருணத்திற் புலத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு ஆட்டைக் கண்டு, அவனும் பாம்பும் அதனிடத்திற்குப் போய், அதனோடு இந்த வர்த்தமானங்களைச் சொல்லுமுன்ன

தாக, அந்தப் பாம்பு "இந்த மனிதன் எனக்கு உபகாரி, இவனை நான் கொல்லலாமோ, கொல்லலாகாதோ" என்று கேட்டது. அந்த ஆடானது "இச்சணமே கொல். மனிதருடைய நடக்கையை நான் நன்றாய் அறிந்திருக்கிறேன். அதைக்குறித்து உனக்குக் கொஞ்சம் சொல்லுவேன். என் மயிரினால் நெய்யப்பட்ட கம்பளத்தைத் தரித்தும், அதின்மேல் உட்காந்தும் இருப்பார்கள். ஆயினும் இதை நினையாமல், அவர்கள் என் குட்டியைக் கொன்று தின்று, என்மனதைக் கிலேசப்படுத்துகிறார்கள். இதினிமித்தம் நான் மிகவும் வருந்துவதுமல்லாமல், என்னையும் ஒரு நாள் கொல்வார்களென்று பயப்படுகிறேன்: ஆதலால், இப்படிப்பட்ட சாதியைக் கொல்வதினால் குற்றம் ஒன்றும் இல்லை" என்று உத்தரம் சொல்லிற்று.

அந்த வர்த்தகன் இதுகேட்டு, "ஒருவருடைய சாட்சி போதாது; இரண்டு மூன்றுபேர் இப்படிச் சொல்வார்களானால், நான் மரணத்துக்கு உட்படுவேன்" என்றான்.

சகூ-வது. தீயோர் இயல்பு.
உ-ம். பிரிவு.

பின்பு அந்தப் பாம்பும், வர்த்தகனும் ஒரு கிழப்பசுவைக் கண்டு, அதனிடத்திலே இந்தச் சங்கதிகளைச் சொல்ல, அது "மனிதனுடைய நடக்கைகளை நான் சொல்லட்டுமோ? பார் வருஷந்தோறும் அவனுக்கு ஒவ்வொரு கன்று ஈன்று கொடுக்கிறேன். காட்டில் முளைத்த புல்லை மேய்ந்து நாள்தோறும் அவனுக்குப் பால் கொடுக்கிறேன். அவன் அதைக்கொண்டு தயிர், மோர், வெண்ணெய் முதலான அனேக வித உருசியான உணவைச் செய்துகொள்ளுகிறான். இப்படி அவனுக்கு அனெக வருஷங்களாய உபகாரம் செய்துகொண்டுவந்தும், இப்போது நான் கிழமானதைக் கண்டு, அடிக்கிறவனுக்கு என்னை விற்றுப்போட்டான். அவன் என்னை நாளைக்குக் கொல்வான். இப்படி மனிதன் துஷ்டனாய் இருக்கிறபடியால், இவனை இப்போதே கொல்" என்றது.

வர்த்தகன் இந்த வார்த்தைகளைக் கேட்டு, தனக்குப் பிராணசேதம் நேரிடுகிறதென்று

கண்டு பயந்து அழுதான். அப்போது அங்கே இருந்த ஒரு நரி அவனோடு "அடா, என் விசனப்படுகிறாய்?" என்று கேட்க, வர்த்தகன் ஒன்றும் பேசவில்லை. அந்தப் பாம்பு, "இவன் சரித்திரத்தைக் கேள், இந்த மனிதன் உண்மையாகவே ஒரு பெருந்தீயிலிருந்து என்னை இரட்சித்தான், அதினால் என்ன? எங்கள் உபகாரியைக் கெடுப்பது எங்களுக்கு வழக்கம் தானே. இப்போது இவனைக் கடிக்கப்போகிறேன். ஆடும், பசுவும் சொல்லிய நியாயமும் இதுதான்" என்றது. நரி "நான் இதற்கு மிகவும் ஆச்சரியப்படுகிறேன். அவன் உன்னைத் தீயிலிருந்து எப்படி இரட்சிப்பான்? அதைச் சொல்லும்படியாகப் பிரார்த்திக்கிறேன்" என்றது. பாம்பு, "இவன் தன் பையை ஒரு கொம்பின் நுனியிலே இழுத்துக் கட்டிப் புதருக்குள் விட்டான். நான் அதற்குள்ளே நுழைந்துகொண்டபின்பு, என்னை வெளியில் எடுத்துவிட்டான். அந்தப் பை தான் அவன் தோளின்மேல் இருக்கின்றது, பார்" என்றது. நரியானது "உன்னுடைய பெரிய உடல் இவ்வளவு சிறு பைக்குள் நுழை

ந்திராது. அதைப் பார்த்தாலொழிய, நான் நம்பமாட்டேன்" என்றது. அதனல் அந்தப் பாம்பு வர்த்தகனிடத்தில் அந்தப் பையை வாங்கி மறுபடியும் அதற்குள்ளே நுழைந்தது. அப்போது, நரி அந்தப் பையின் வாயை மிகவும் பத்திரமாய் இழுத்துக் கட்டும்படி வர்த்தகனுக்குக் கண்ணிஞற் சமிக்கைபண்ணிற்று. அவன் அப்படிச் செய்தவுடனே, அவனுடைய தடியிஞல் அதின் தலையை நசுக்கும்படி சொல்லிற்று. இவ்விதமாக வர்த்தகன் அந்த நரி சொல்லிய உபாயத்திஞலே பாம்பைக் கொன்று, தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டான். உபகாரியைக் கெடுக்கிறவனும், நன்றியறியாதவனும் சுகம் அடையார்களென்று இதிஞல் அறியலாம்.

ரு௰-வது. வீட்டைச் சேர்ந்த கொல்லை

இத்தேசத்திலே வீட்டைச் சேர்ந்த நிலத்தைக் கொல்லையென்று சொல்வார்கள். கொல்லைக்குள்ளாக, பெரும்பாலும் அதின் நடு

வில், வீடும் வேறு கட்டடங்களும் இருக்கும். வீடு பெரிதாயிருக்குமானால், கொல்லையும் பெரிதாயிருக்கும். அதில் மரங்களும் புஷ்பச் செடிகளும் இருக்கும். சில இடங்களில் அதிக சிறப்பும் விசித்திரமுமான கொல்லைகள் உண்டு.

இத்தேசத்தில் அனேகர் தங்கள் கொல்லைகளைச் சுத்தம்பண்ணுகிறதில்லை. அவர்கள் அங்கங்கே உட்கின இலைகளும் அசுத்தமும் குப்பல் குப்பலாயிருக்கும்படி விடுவார்கள். அதினிமித்தம் துர்க்கந்தம் உண்டாகின்றது. மேலும் வீட்டுக்குச் சமீபத்திற் சிறு குழிகளிற் சென்ற தண்ணீர், அங்கே தங்கிச் சேறுகி நாற்றமெடுக்கும்படி விடுவார்கள். அந்தச் சேற்றில் புழுமுதலிய செந்துகள் உண்டாவதுமன்றி, அந்தக் கெட்ட நாற்றத்தினால் சுரமும், வேறு பல வியாதிகளும் வருவதுமுண்டு. வீடுகளிலும் கொல்லைகளிலுமுள்ள தூசியை நாள்தோறும் சுத்தமாய்ப் பெருக்கி, சேர்ந்த குப்பையை வீட்டுக்குத் தூரமாய் இருக்கிற ஒரு குழிக்குள்ளே கொட்டவேண்டும்; அல்லது குப்பை எடுக்கும்படி வருகிற சர்க்

கார் வண்டியிற் போடவேண்டும். பெரிய பட்டணங்களிற் சேருகிற திரளான குப்பை நல்ல எருவாயிருப்பதினால், அது அதிக பணத்திற்கு விற்கப்படும்.

சுத்தமாயிருப்பது சௌக்கியத்திற்கு முக்கியம். இது அவிவேகமுள்ள ஏழைச்சனங்களுக்குத் தெரியாது: ஆதலால், பக்கத்திலுள்ள விவேகிகள் இதை அவர்களுக்கு நன்றாகத் தெரியும்படி சொல்வதுமன்றி, சாதாரண விஷயங்களைக்குறித்து அவர்களுக்குப் போதிக்கவும்வேண்டும்.

அங்கிலோதேசத்திற் பல இடங்களில் ஏழைகளான பயிரிடுங்குடிகளும், பலபல தொழிற்செய்வோர்களும் வாசமாயிருக்கின்ற வீடுகளைச் சேர்ந்த கொல்லைகள் மிகவும் சிறந்திருக்கும். அவர்கள் தங்கள் கொல்லைகளில் உபயோகமான பயிர்களையும், சிறந்த மரங்களையும், அழகிய புஷ்பச்செடிகளையும் வைத்து, மிகுந்த விவேகமும் சாமர்த்தியமுமாக அந்தக் கொல்லைகளைச் சிங்காரிப்பார்கள்.

ருக-வது. ஒருகிழவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் நடந்த கதை.

ஒரு தேசத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு அநேக பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஒருமைப்பாடின்றி, நாள்தோறும் சச்சரவு செய்துகொண்டிருப்பதைத் தகப்பனானவன் கண்டு, தன்னாற்கூடியவரையில் அவர்களுக்குத்தக்க புத்திமதிகளை அடிக்கடி சொல்லிவந்தும், அவர்கள் கேளாமற்போனார்கள். இப்படியிருக்க, அவன் தனக்குள் ஒரு யுக்திசெய்துகொண்டு, தன் பிள்ளைகள் யாவரையும் அழைத்து எதிரே நிறுத்தி, குட்டையாயிருந்த ஒரு விறகுக்கட்டைக் கொண்டுவந்து, அவர்கள்முன் வைத்து, "பிள்ளைகளே, நீங்கள் எப்படியாவது பிரயாசப்பட்டு ஒவ்வொருவனாக இந்த விறகுக்கட்டை முறியுங்கள், பார்ப்போம்" என்றான். அவர்கள் தகப்பன் சொற்படி தனித்தனியே தங்களால் ஆனமட்டும் பிரயாசப்பட்டும், முறிக்கமாட்டாமற்போனார்கள்.

உடனே கிழவன் அவ்விறகுக்கட்டை அவி ழ்க்கச்சொல்லி, ஒவ்வொருவன் கையில் ஒவ் வொன்முகக் கொடுத்து, "இப்பொழுது முறி யுங்கள்" என்று சொல்ல, அவர்கள் மகா எளி தாக முறித்துப்போட்டார்கள். அப்பொழுது தகப்பன் தன் புத்திரரைப் பார்த்து, "அப்பா பிள்ளைகளே, இவ்விறகுக்கட்டு ஒன்முயிருந்த பொழுது, உங்களால் எவ்வளவும் முறிக்கக் கூடாமற்போயிற்று. கட்டவிழ்த்துத் தனித் தனியே பிரித்தபொழுதோ, அதிக இலேசாக முறித்துப்போட்டீர்களே; இதினலேதான் நீ ங்கள் உங்களுக்குள் எள்ளளவும் பேதமின்றி ஒருமித்திருப்பதினல் உண்டாகும் பலன் இ த்தன்மையதென்று எளிதாகத் தெரிந்துகொ ள்ளலாம்: ஆதலால், இனி நீங்கள் ஒருவரோ டொருவர் சண்டைபோடாமல், பாலும் நீரும் போல் அந்நியோந்நியமாய் இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பீர்களானல், ஒருவரும் உங் களை மோசஞ்செய்து வெல்லமாட்டார்கள்" என்முன். அதுமுதல் அந்தப் பிள்ளைகள் தங்கள் தகப்பனுற் காட்டப்பட்ட திஷ்டாந்த த்தை ஒருபொழுதும் மறவாமல், ஒருமையை

அனுசரித்துக்கொண்டுவந்து சுகப்பட்டார்கள்: ஆதலால், பிள்ளைகளே, நீங்களும் எப்பொழுதும் சகோதர ஒருமையை அநுசரித்துநடக்க வேண்டும்.

ருஉ-வது. சூரியன்.

சூரியனுடைய கிரணத்தாற் பகற்காலம் உண்டாகின்றது. நாள்தோறும் கிழக்குத்திசையில் மெல்லிய கம்பிபோன்ற சூரிய கிரணம் முதல் முதல் தோன்றுகிற காலத்திற்கு விடியற்காலமென்று பெயர். சூரியன் உதிக்கிற நேரத்திற்குக் காலை, அல்லது உதயகாலம் என்று பெயர். அது ஆகாயத்தின் மத்தியில் நிற்கும் காலத்திற்கு மத்தியானம் என்று பெயர். அது மேற்குத் திசையிலே சாய்ந்து செல்லுகிற நேரத்திற்குச் சாயங்காலமென்று பெயராம். சூரியன் உதிக்கச் சற்று நேரத்திற்குமுன்னும், அது அஸ்தமித்தபின் சற்றுநேரமளவும் காணப்படுகின்ற வெளிச்சம், காலைவெளிச்சம் என்றும், மாலைவெளிச்சம் எனறும் சொல்லப்படும். சூரியன் அஸ்தமித்து மாலைவெளிச்சம் நீங்கினபின்பு, இராக்காலம் தொடங்கும்.

சூரியன் வெளிச்சமும் வெப்பமுமுடை யது; அது நமக்கு அனலைக் கொடுக்கின்றது; தாபர வர்க்கங்களை வளர்க்கின்றது. நாம் கண்பார்த்து வேலை செய்வதற்கு அதின் ஒளி உபயோகமாயிருக்கின்றது.

சூரியன் அதிக பருமையுள்ளது. அது நாம் வாசமாயிருக்கின்ற பூமியிலும் அனேக மடங்குபெரிது. அது மிகுந்த தூரத்தில் இருப்பதினல், இத்தனை சிறிதாகத் தோன்றுகின்றது. சூரியன் உதித்து அஸ்தமிக்கிறதென்று சிலர் நினைக்கிறுர்களே, அது தப்பு, அப்படியல்ல. பூமி சுற்றிக்கொண்டுவருவதினல், அதின்மேல் வாசமாயிருக்கின்ற நாமும் அதினுடன் இடைவிடாமற் செல்லுகிறேம்: ஆதலால், சூரியன் உதிக்கிறதுபோலும் அஸ்தமிக்கிறதுபோலும் தோன்றும். உண்மையை விசாரித்தாலோ, சூரியன் நிலையாயிருக்கின்றது. நாம் ஒருவண்டியில் ஏறிப்போகும்பொழுது, சாலைப்பக்கத்தில் நிற்கின்ற மரங்கள் எதிர்முகமாய்ச் செல்லுகிறதாகக் காணப்படுமல்லவா?

சூரியன் நமது வாழ்நாளை அளக்கின்ற ஒரு கருவியென்று சொல்லலாம். வரவர நமது வயசு அதிகரிக்கின்றது. நாம் இனி இங்கிருக்கும் காலமோ வரவரக் குறுகுகின்றது. நமது வாழ்நாள் மிகவும் சொற்பமென்று எண்ணி, நமது உள்ளத்திலே ஞானம் உண்டாகும்படி தேடுவதற்கு உதவியான வல்லமையைக் கடவுள் ஒருவரோ நமக்கு அருள வல்லவர். அந்த வல்லமையை நமக்குத் தரும்படியாக நாம் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்.

ருங-வது. சூரியன்—ஒருகதை.

சூரியன் சொல்லுகிறது—“என்பெயர் சூரியன்; என் பிரகாசத்திற்கு நிகர் இல்லை, நான் காலையில் எப்பொழுதும் கிழக்கே உதிக்கிறேன், விடியற் காலத்திலே நீங்கள் எழுந்திருக்கவேண்டியபொழுது, பொன்போலப் பிரகாசிக்கின்ற என் கண்களினால் பலகணிவாயில் வழியாய் உங்களைப் பார்த்து, சோம்பேறிகளே, நீங்கள் நெடுகிலும் படுத்து உறங்கும்படியாக

நான் பிரகாசிக்கிறேனு? சீக்கிரம் எழுந்து படியுங்கள், உலாவுங்கள் என்று தினமும் சொல்வது எனக்கு வழக்கம்.

"நான் எவர்களும் மெச்சதக்க ஒரு பிரயாணக்காரன். இந்தப் பரந்த ஆகாயத்தில் எங்கும் போக்குவரவாய் இருக்கிறேன். எனக்கு ஒருபொழுதும் இளைப்பு உண்டாவதுமில்லை, நான் எங்காவது தரிக்கிறதுமில்லை. என் தலைக்கு அலங்காரமாக நான் தரித்திருக்கின்ற முடி தங்கவர்ணமான கிரணங்களாம். என் ஒளி செல்லாத இடமாவது, அது படாத பொருளாவது பூமியின்மேல் எங்கும் இல்லை. மரங்கள், வீடுகள், தண்ணீர், இவை எல்லாவற்றிற்கும் ஒளிகொடுக்கிறேன். என் பிரகாசத்தைப் பெறுகின்ற எந்த வஸ்துவும் பளிச்சென்று மின்னிச் சிறந்து தோன்றுகின்றது. நான் உங்களுக்கு வெளிச்சத்தையல்லாமல், வெப்பத்தையும் தருகிறேன். காய்களைப் பழுக்கவும், தானியக்கதிர்களை விளையவும் செய்வது நானே. நான் பிரகாசிக்காவிட்டால், வயல்களிலாவது, தோட்டங்களிலாவது பயிர் செடி ஒன்றும் முளையாது. நான்

ஆகாயத்தில் எட்டாத தூரத்திலே நிற்கிறேன். என்னைத் தொடத்தக்கதாக உயர்ந்த மலையும் இல்லை, மரமும் இல்லை, மேகமும் இல்லை: நான் உங்களுக்குச் சமீபத்தில் வந்தால், நீங்கள் எரிந்து இறந்துபோவீர்கள். புல் பூண்டுகள் எல்லாம் தீந்து சாம்பராய்ப்போம்.

"நான் ஆகாயத்திற் சஞ்சரிக்கத்தொடங்கி நெடுங்காலம் ஆயிற்று. நீங்கள் பிறந்து இப்பொழுது கொஞ்சக் காலந்தான். உங்கள் தந்தை தாயர்கள் பிறக்க நெடுங்காலத்துக்குமுன் தொடங்கி நான் இருக்கிறேன். இருந்தும் இன்னும் விருத்தாப்பியனாகவில்லை. சில காலங்களிற் பிரகாசமுள்ள கிரணங்களாகிய என் முடியைக் கழற்றிவைத்து, வெள்ளி வர்ணமுடைய மெல்லிய மேகங்களால் என் தலையை மூடிக்கொள்வதும் உண்டு. அப்பொழுது நீங்கள் கண்கூசாமல் என்னைப் பார்க்கலாம்: ஆகிலும், ஆகாயத்திலே மேகங்கள் இல்லாதிருக்கும்பொழுது, மத்தியான வேளையில், நான் பூரணமாய்ப் பிரகாசிப்பதினால், நீங்கள் என்னைப் பார்க்கமாட்டீர்கள். பார்த்தால், கண்கூசிக்கெட்டுப்போம். எந்த வஸ்துவையும் கூர்

மையாய்ப் பார்க்கத்தக்க பலமான கண்களையு டைய கழுகுப்பட்சி மாத்திரம் என்னைப்பார்க் கக்கூடும். நான் காலையில் உதயமாகிறபொ ழுது, வானம்பாடி ஆகாயத்தில் இனிமையான கீதங்களைப் பாடி, எனக்கு எதிர்கொண்டு பற ந்துவரும். என் வருகையை எவர்களுக்கும் தெரிவிக்கும்படியாகச் சேவல் கூவும். ஆந்தை யும் வௌவாலுமோ, என்னைக் கண்டமாத் திரத்திற் பறந்தோடி, பழைய மதில்களிலும் மரப் பொந்துகளிலும் ஒளித்துப் பதுங்கிக் கொள்ளும். சிங்கம் தன் குகையிலும், புலி தன் புதரிலும் படுத்துப் பகல் முழுவதும் தூ ங்கும். நானோ, சகல தேசங்களிலும் பிரகா சிக்கிறேன். என்னைப்போல் அத்தனை மாட் சிமையும் சிறப்புமுள்ள சிஷ்டி உலகத்தில் எ ங்கும் இல்லை."

௫௪-வது. சந்திரன்.

நாம் வாசமாயிருக்கின்ற இந்தப் பூமியை ப்போலச் சந்திரனும் ஒரு பந்துக்குச் ச மானமாகத் திரண்ட வடிவுள்ளதாயிருக்கின்

றது. பூமிக்கு எப்படியோ, அப்படியே சந்திரனுக்கும் சூரியனிலிருந்து வெளிச்சம் வருகின்றது. சந்திரன் பூமியைச் சுற்றி ஓடுகின்றது. சந்திரன் எப்பொழுதும் சூரியனுக்கு ஒரே முகமாய் நில்லாமல், தன் மார்க்கத்தில் அங்கங்கே பலமுகமாய் நிற்பதினால், பூமியில் இருக்கின்ற நமக்கு அதின் உருவிலும் அளவிலும் பலவேறுபாடுகள் காணப்படுகின்றன. அது பூமியைச் சுற்றிவருவதற்கு ஏறக்குறைய ௨௯-நாள் செல்லும். பூமியானது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் நிற்கும்பொழுது, சந்திரனுடைய மேற்புறம் முழுவதும் வெளிச்சமுள்ளதாக நமக்குத் தோன்றும். சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் நிற்கும்பொழுதோ, அதின் வெளிச்சமான புறம் பூமிக்கு விலகிச் சூரியனுக்கு எதிர்முகமாயிருப்பதினால், அது நமக்குக் கொஞ்சமும் தோன்றாது. அது அங்கிருந்து விலகித் தன் மார்க்கத்திற் செல்லும்பொழுது, அதின் வெளிச்சமான புறம் நாளுக்கு நாள் அதிகரித்துத் தோன்றும்.

பூமியானது சந்திரனைப்பார்க்கிலும் ஐம்பது மடங்கு அதிக பருமையானது: சூரியனைப் பார்க்கிலும் சந்திரன் நமக்கு அதிக சமீபத்தில் இருக்கின்றது.

சந்திரன் திரளான நட்சத்திரங்களின் நடுவில் இருக்கிறபொழுது மிகவும் அலங்காரமாகத் தோன்றும். அது "இரவுக்கு அதிபதி" என்னப்படும்.

௫௫-வது. குதிரை.

குதிரை அதிக மேலான மிருகம். அது மனுஷருக்கு மிகவும் உபயோகமானது. அது விசேஷமாய் மற்ற மிருகங்களைப்பார்க்கிலும் அதிக அறிவுள்ளது. பல குதிரைகள் நிற்கின்ற சாலையில் அதது தன்தன் இடத்தைத் திட்டமாய் அறியும். ஒரு குதிரை தன்னோடு பழகியிருந்த மற்றொரு குதிரையை எத்தனை குதிரைகளுக்குள்ளே கண்டாலும், எளிதில் தெரிந்துகொள்ளும். குதிரைகள் ஒருமுறை தங்கிய இடத்தை ஒருபொழுதும் மறக்கிற

தில்லை. அவைகள் எத்தனை தூரத்திற்குக் கொண்டுபோகப்பட்டாலும், அங்கிருந்து திரும்பி வழி அறிந்து முன்பு நின்ற இடத்திற்குப் போய்ச்சேரக்கூடும். குதிரைமேல் ஏறிப்போகிறவர்கள் அதின் வாயில் இட்டிருக்கும் கடிவாளம், தங்கள் முழந்தாள், பாதம், கையிற் பிடித்திருக்கும் சவுக்குமுதலிய கருவிகளைக் கொண்டு சில அடயாளங்களைத் தெரிவிப்பதினால், அந்தக் குதிரைகளை அடக்கி நடத்துவார்கள்.

சில மிருகங்களின் மாமிசம் போசனத்திற்கும், கொம்பு, எலும்பு, தோல், உரோமம் முதலிய பகுதிகள் பல சாதாரண வேலைகளுக்கும் உபயோகமாயிருக்கும். குதிரை இறந்தபின்பு அதின்சரீர உறுப்புகள் அத்தனை உபயோகமுள்ளவைகளல்ல: ஆகிலும், அதின் தோல் பதமிடப்பட்டபின்பு வேலைகளுக்கு ஆகும். அதின் வால்மயிர் தெறி செய்யவும், வீட்டில் விரிக்கும்படி பாய் பின்னவும், நாற்காலிப் பீட்த்திற் போடுவதற்கு மெத்தை உண்டாக்கவும் உபயோகிக்கப்படும்;

குதிரை மிகவும் விரைவாய் ஓடத்தக்க மிருகம். அதிக திறமுடைய குதிரை நிமிஷத்திற்கு ஒரு மைல் தூரம் ஓடும். ஸ்தாபரசங்கமநூலைக்குறித்து அதிக விவரமாய் எழுதப்பட்ட ஒரு புஸ்தகத்தை இனிமேல் நாம் வாசிக்கும்பொழுது, குதிரை முதலிய பல மிருகங்களைப்பற்றி அனேக நேர்த்தியான கதைகளை அறிவோம்.

௫௧-வது. நட்சத்திரங்கள்.

நட்சத்திரமண்டலமானது மிகவும் ஆச்சரியமான தோற்றமுடையதாயிருக்கின்றது. ஓயாமற் கண்ணிமைப்பதுபோல விட்டு விட்டுப் பிரகாசிக்கின்ற நட்சத்திரங்கள் வச்சிரக்கற்களுக்குச் சமானமாய்த் தோற்றுகின்றன. அவைகள் அத்தனை சிறியவைகளாய்க் காணப்பட்டும், பார்க்குமிடத்தில் அதிக பருமையுடையவைகளாயிருக்கின்றன. அவைகள் வெகுதூரத்தில் நிற்பதினால், இவ்வளவாகச் சிறுத்துத் தோன்றும்.

நட்சத்திரங்களின் தன்மையை நுட்பமாய் விசாரித்தறிந்த வித்துவான்கள் அவைகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள். விட்டு விட்டுப் பிரகாசிக்கின்றவைகளை நட்சத்திரங்கள் என்றும், விடாமல் நின்று பிரகாசிக்கின்றவைகளைக் கிரகங்கள் என்றும் சொல்லுவார்கள். இந்தப் பூமியும் ஒரு கிரகந்தான். விட்டு விட்டுப் பிரகாசிக்கின்ற நட்சத்திரங்கள் மிகவும் பெரிய சூரியர்களாயிருக்கின்றன. அவைகள் வெகுதூரத்தில் நிற்கின்றன. அந்தத் தூரத்தை அளவிட்டுச் சொல்வது அருமை. நாம் பட்சிகளைப்போலப் பறக்கத்தக்க சக்தியுள்ளவர்களாயிருப்போமானால், நட்சத்திரங்கள் இருக்கின்ற இடத்திற்குப் போவதற்குப் பலகோடி வருஷம் செல்லும்.

மற்றொரு வகையான நட்சத்திரங்கள் உண்டு. அவைகள் வால்போலத் தொடர்ச்சியான ஒளியுடையவைகளாயிருப்பதினால், வால் நட்சத்திரங்கள் என்னப்படும். அவைகள் அபூர்வமாய்க் காணப்படும்.

அளவற்ற தூரத்திலுள்ள நட்சத்திரமண்டலத்திற்கும் அப்புறம் இருப்பவரும், அங்கிருக்கின்ற அப்பொழுதே இங்கிருப்பவருமாகிய கடவுள் எத்தனை மகத்துவமுடையவர்! அவர் எல்லைக்குள் அடங்காதவர்; எவர்களாலும் அறியப்படாதவர்: அவரே நமது பிதா.

௫எ-வது. இராத்திரி.

சூரியன் மேற்கே அஸ்தமித்து, மாலை வெளிச்சம் நீங்கும்பொழுது, இருள் எங்கும் பரவும். அதுவே இராத்திரி என்னப்படும். பகல் முழுதும் கடைத்தெருவில் உண்டாயிருந்த ஜன இரைச்சல் இராத்திரியில் ஒழிந்துபோம். கருமார் இரும்பு அடிக்கிற சத்தம் அப்போது கேளாது. சிறுவர்கள் வெளியில் நின்று விளையாடுவதை நிறுத்தியிருப்பார்கள். பகல் முழுதும் அங்கங்கே நடந்த தொழில்களெல்லாம் விடப்பட்டிருக்கும். விரைந்துபாய்கின்ற குதிரையும், மெதுவாய் நடக்கின்ற எருதும் கட்டுத்தறியிற் படுத்திருக்

கும். பட்சிகள் அங்கங்கிருந்து தோப்புகளு க்கும் வீட்டுக் கூரைகளுக்கும் போய்த் தங் கும். அமைதியும் இருளும் எங்கும் மேலிட் டிருக்கும். படுத்து நித்திரைசெய்யும் காலம் வந்தது. தூக்கம் வரவே அறிவு ஒடுங்கி அ மர்ந்து படுத்திருப்போம்.

ஆகிலும் சாதாரணமாயுள்ள இயற்கையான நடக்கைகள் ஓயாமல் இரவும் பகலும் ஒரேவி தமாய் நடந்துவருகின்றன. இராத்திரியிலே பெய்கின்ற பனியின் ஈரத்தில் பயிர் பூண்டுகள் வளரும். ஊற்றுகளில் தண்ணீர் சுரக்கும். ஆறுகள் பெருகி அங்கங்கே பயிர் பூண்டு செ டிகளுக்குச் செழிப்பையும், நிலத்திற்குக் கொ ழுப்பையும் கொடுக்கும். இராத்திரிகாலத் தில் அலை அடிக்கின்ற சமுத்திரத்திற் கப்பல் ஓட்டும் மாலுமி நட்சத்திரங்களின் வெளிச்சத் தினால் தன் வழியைக் கண்டறிகிறான். காவ ற்காரன் வீதிகள்தோறும் சுற்றித்திரிகிறான். கோட்டை வாசல் காப்போன் தன் வேலையில் விழிப்பாயிருக்கிறான்.

௫௮-வது. கொடிய புலிக்கும் குற்றமற்ற ஆட்டுக்குட்டிக்கும் உண்டான முகாந்தரமில்லாத சண்டை.

மிகுந்த வெயில் உண்டாயிருந்த ஒரு நாள் மலையினின்று இறங்கி ஓடுகிற ஆற்றில் ஒரு புலி வந்து தண்ணீர் குடிக்கையில், ஒரு ஆட்டுக்குட்டியும் சற்றேதூரத்தில்நின்று குடித்துக்கொண்டிருந்தது. அப்போது அந்தப் புலி அதனோடு சண்டைபிடிக்கவேண்டுமென்கிற யோசனைகொண்டு, "பயலே, நான் குடிக்கிற தண்ணீரைக் கெடுக்க நீ சேற்றைக் கலக்கிவிடுகிறது என்னடா" என்று கோபமாய்ச் சொல்லிற்று. ஆட்டுக்குட்டியானது "ஐயா, தாங்கள் இருக்கிற இடத்தில் இருந்தல்லோ தண்ணீர் இப்படி இறங்கிவருகிறது: ஆகையால், தாங்கள் என்மேற் கோபம் பண்ணுகிறது நியாயம் அல்ல" என்று சாந்தத்தோடே உத்தரம் சொல்லிற்று. அதற்குப் புலி, "நீ இப்போது செய்தது போகட்டும்: ஆகிலும், நீ ஆறு மாசகாலமாய் என்னைகுறித்து வெகு

அவதூறு பேசிவருக்கிருய் என்று பல பெய
ராலே கேள்வியானேன்" என்றது. ஆட்டுக்
குட்டி "ஐயாவே, நான் பிறந்து இன்னம்
ஆறுமாதம் ஆகவில்லையே, இப்படி என்னைக் கு
றித்துப் பொய்சொல்லுகிறவர்களுடைய பே
ச்சை நம்பலாமா?" என்றது. புலி "அதெ
ன்னவோ எனக்குத் தெரியாது. நீயே அப்
படி அவதூறு பேசியிராவிட்டாலும், உன் அ
ப்பன் பேசியிருப்பான். அவன் சொல்லுக்கு
நீதான் உத்தரவாதி," என்று சொல்லி, ஆட்டு
க்குட்டிமேலே பாய்ந்து, அதைக் கடித்துக்
கொன்றுபோட்டது. இவ்விதமாய்ச் சண்
டைசெய்யும் குணமுள்ளவர்கள் முகாந்தர
மில்லாமற் சண்டைபிடிப்பார்கள்.

கிழட்டுக் கோழியும் இளஞ்சேவலும்.

ஒரு நாள் கிழட்டுக் கோழி ஒரு இளஞ் சே
வலைக் கண்டு, அது தான் வளர்த்த குஞ்செ
ன்று அறிந்து, "என் பிள்ளையே; தாயைப்பார்
க்கிலும் உனக்குப் புத்தி அதிகமென்று நீ எண்

ணிப் பெருமையடைந்திருப்பாய்: ஆனாலும், உனக்கு நான் புத்தி சொல்லுகிறேன், கேள்; இன்ன இடத்திற் கிணறுண்டே, அதிலே நீ எட்டிப்பார்க்கவேண்டாம்; பார்த்தாயானால், உனக்கு மோசம் வரும்" என்றது. பிற்பாடு அது யோசனைபண்ணி, "இது என்ன பைத்தியமான காரியம்? கிணற்றில் எட்டிப்பார்க்கிறதினாலே மோசம் என்ன" என்று சொல்லிக் கிணற்றுக்கு அருகே போய், கழுத்தைநீட்டி எட்டிப்பார்க்க, இதன் நிழல் மற்றொரு சேவல்போற் காணப்பட்டது. உடனே இதற்கு உரோசம் உண்டாய், கழுத்தின் உரோமங்களைச் சிலிர்க்க, அதுவும் அப்படியே செய்தது. பின்னும் இது சினம் பொறுக்கமாட்டாமல் அத்தோடே சண்டைபோடக் கிணற்றிற் பாய்ந்து தட்டழிகிறபொழுது, "ஐயோ, என்தாயின் பேச்சைக் கேளாமற்போனேனே, அவளைப்பார்க்கிலும் எனக்குப் புத்தி அதிகமென்று எண்ணித் துணிந்தபடியினாலே, நான் இப்போது கெட்டுப்போகிறேனே", என்று புலம்பி இ

றந்துபோயிற்று: ஆகையால், பிள்ளைகள் தங்களைப் பெற்றோர்களாவது, அதிக வயதும் புத்தியுமுடையவர்களாவது சொல்லுகிறதை அற்பமென்று எண்ணக்கூடாது.

தந்தை தாய் பேண்.

பணக்காரன் ஒருவன் தன் தகப்பனுக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்துக்கொண்டுவந்தான். அவன் பிள்ளை அதைப் பார்த்து, அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப்போட்டான். பின்பு அந்தப் பணக்காரன் தன்னுடைய தகப்பனைப் பார்த்து, ஓடு எங்கேயென்று கேட்டு, அடித்தான். அந்தப் பையன் "அப்பா, என் பாட்டனை அடியாதே, நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்துவைத்தேன்; ஏனென்றால் நான் பெரியவனானபின்பு உனக்கு வேறே ஓடு சம்பாதிக்கமாட்டேன்" என்றான். அதைக்கேட்டுப் பணக்காரன் வெட்கப்பட்டு, அன்றுமுதல் தன் தகப்பனை மெத்தச் சௌக்கியமாக நடத்திவந்தான்.

௫௯-வது. நித்திரை.

சகல பிராணிகளும் நித்திரைகொள்வது உண்டு. நித்திரையென்பது ஒரு வகை இளைப்பாறுதலாம். நாம் தூங்கும்பொழுது அந்தக் கரணங்களும் சரீரத்தின் அவையவங்களும் இளைப்பாறுகின்றன.

நாம் எப்பொழுதும் பகற்காலத்தில் அவரவர் தொழிலை அதிக சாகிரதையாகச் செய்துமுடிக்கும்படியாக, இராக்காலத்திலே படுத்துத் தூங்கிக் களைதீர்ந்து பலமடைகிறோம். நித்திரைசெய்யப் போகும்பொழுது இளைப்புள்ளவர்களாயிருக்கிறோம்; நித்திரையினின்று எழுந்திருக்கும்பொழுதோ, இளைப்புநீங்கிப் பலமடைகிறோம்.

கடவுள் நாம் இளைப்பாறும்பொருட்டாக இராக்காலத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இராக்காலத்தில் மேலிட்டிருக்கின்ற அமைதியும் இருளும் இளைப்பாறுவதற்கு ஏற்றவைகளாம்.

கடவுளுடைய நியமத்தின்படி இருள் அகன்று பகலின் ஒளி வரும்பொழுது, நாம் தூக்க

த்தினின்று எழுந்து, காலையின் சிறப்புகளைக கண்டு, அவரவர் கடமைகளைச் செய்கிறோம்.

நாம் விழித்திருக்கும்பொழுது, முதல் முதல் கடவுளைக்குறித்து நினைக்கவேண்டும். நாம் படுத்து உறங்கி, நம்மை மோசத்தினின்று விலக்கிக் காக்கத் தகுதியற்றவர்களாயிருக்கையில், ஒருபொழுதும் உறங்காதவராகிய கடவுள் நம்மைக் காப்பாற்றுகிறார்: ஆனதுகொண்டு, நாம் உதயத்தில் எப்பொழுதும் அவருக்கே துதிசொல்லி, அவரையே பிரார்த்திக்கவேண்டும். நமது நடக்கையையும் படுக்கையையும் பரிசோதிக்கிறவர் கடவுள். நமது வழிகள் எல்லாம் அவருக்கே வழக்கமாய்த் தெரியும்.

கூ௰-வது. கடவுள் சிஷ்டித்த பொருள்.

க-ம். பிரிவு.

பொன்னையா, இங்கே வா; நாம் இருவரும் வெளியே போய், கடவுளுடைய படைப்பு

களைக்குறித்துச் சம்பாஷிப்போம். ஒரு பிடி மணல் அள்ளு, அதில் எத்தனை மணல் இருக்கின்றதென்று எண்ணிச்சொல்லு. உன்னுற் கூடுமானல் இந்த மைதானத்தில் இருக்கின்ற புல் இத்தனை என்றும், அடுத்த தோப்பில் இருக்கின்ற மரங்களின் இலைகள் இத்தனை என்றும் எண்ணிச்சொல்லு.

அவைகளை எண்ணிச் சொல்வது கூடாது. கடவுளால் சிஷ்டிக்கப்பட்ட வஸ்துகள் எத்தனை திரளாய் இருக்கின்றன.

உயர்ந்த மலைகளில் தேக்கமரம் உண்டாகின்றது. தாழ்ந்த மடுக்களின் கரையில் வேலமரம் அடர்ந்திருக்கின்றது.

இலந்தை மரத்திற் கூர்மையான முட்கள் நிறைந்திருக்கின்றன. முருக்கம் புஷ்பங்கள் மிகவும் சிறந்து தோன்றுகின்றன.

அவரைக்கொடி தன் கூந்தல்களால் இலந்தைக் கொம்புகளைச் சுற்றிப் படருகின்றது. ஆலமரம் நிலத்தில் ஆழமாய் வேரூன்றி விழுது விடுகின்று.

பசுமையான அறுகு இந்த வெளியில் எங்கும் படர்ந்து காலுக்கு மிருதுவான மெத்

தைபோல் இருக்கின்றது. நீர்ச் செறிவான நிலங்களில் அரசமரம் செழிப்பாய் வளருகின்றது. அதின் இலைகள் காற்றில் அசைந்து சலசலக்கின்றன.

சதுப்பு நிலத்தில் நீர்க்கடம்பு திரளாய் உண்டாகின்றது. உபயோகமான பயிர் ஒன்றும் இல்லாத நிலத்தில் கொன்றைமரம் வளருகின்றது.

இந்தச் சிறு மடுவில் ஆம்பல் மிகுதி. அதின் இலைகள் தண்ணீரின்மேல் விரிந்து படுத்திருக்கின்றன. இடிந்த கல்மதில்களில் கல்லால் முளைத்து வேரூன்றி வளருகின்றது.

அந்தந்தச் சாதியான மரம், செடி, பூண்டு, புல் இவைகளின் இலைகள் வெவ்வேறு வர்ணமுள்ளவ்வைகளாய் இருக்கின்றன. அவைகளில் வெவ்வேறு ஜெந்துகள் சஞ்சரிக்கின்றன.

வெண்மையான புஷ்பங்கள் நிறைந்திருக்கின்ற முட்பூண்டுகளையும், வயல் வெளியிற் சிறந்த புஷ்பங்களையும் கதிர்களையுமுடைய கோழிச்சூடன், கோரைமுதலிய புற்களையும், பசுமையான மைதானத்திற் காலின்கீழ் மி

திக்கப்படுகின்ற பலவகைப் பூண்டுகளையும் பாருங்கள். பயிரிடுங்குடியானவன் அவைகளைத் தன் கையினால் நட்டானா? அவைகள் யாராவது விதைத்து முளைத்தனவா? தோட்டக்காரன் அவைகளுக்காக நிலத்தைக் கொத்திப் பாரையினால் கல்லிப் பண்படுத்தினானா? இல்லை இல்லை, அவைகள் தாமாக முளைத்தன.

ஐந்தாம் மாதம்.

கூக-வது. கடவுள் சிஷ்டித்த பொருள்.

உ-ம். பிரிவு.

சில மரங்களும், செடிகளும், பூண்டுகளும், மனுஷன் ஏறிப்போவதற்கு அருமையான உயர்ந்த மலைகள், கால் புதையத்தக்க சதுப்பு நிலங்கள், அடர்ந்த வனங்கள், தீவுகள் முதலிய சகல இடங்களிலும் உண்டாகின்றன.

அவைகளெல்லாம் வளரவும், அவைகளின் விதைகள் காற்றினால் அள்ளுண்டு அங்கங்கே பறந்து விழுந்து நிலத்திற் புதைந்து

பனியின் ஈரத்தில் முளைக்கவும் செய்கிறவர் யார்? புஷ்பங்களின்மேற் குளிர்ந்த காற்று வீசும்படி பண்ணி, அவைகளுக்கு வர்ணத்தையும் பரிமளத்தையும் கொடுத்து, அவைகளின் இதழ்கள் கண்ணாடிபோலத் தெளிவாகத் தோன்றும்படி செய்கிறவர் யார்? கருமையான தரையினின்று முளைக்கிற சீமைப்பன்னீர்ப்பூவுக்கு வெண்செவப்பு வர்ணத்தையும், ஆம்பற்புஷ்பத்துக்கு வெண்மையையும் கொடுத்தவர் யார்? ஒரு சிறு விதைக்குள்ளே பெருமரம் அடங்கியிருப்பது எப்படி? அந்தந்தச் சாதியான மரங்கள், பூண்டுகள், செடிகள் எல்லாம் தகுதியான காலங்களில் தவறுமற் புஷ்பிக்கும்படி செய்கிறவர் யார்?

ஒருசாதியான செடியிலிருந்து மற்றொரு சாதியான செடி தோன்றுகிறதில்லை. அந்தந்தச் சாதி தன் தன் இனத்தைத் தோன்றுவிக்கின்றது.

குளிர்மை அதிகரித்திருக்கின்ற மாரிகாலத்திலும் பனிக்காலத்திலும் பயிர்வகைகள் அழியாதபடி அவைகளைக் காப்பாற்றுகிறவர்

யார்? பூமியில் இடப்பட்ட வித்து நெடுங்கால மளவும் அதற்குள்ளே புதைந்திருந்து சாய்ந் துபோனபின்பு, ஈரத்தைக் கண்டவுடனே அது முளைக்கவும், சாரம் உண்டாகவும் பண்ணுகிறவர் யார்?

ஒரு இலையாவது இல்லாமல் எல்லாம் உலர்ந்து உதிர்ந்து விறகுதடிபோல இருக்கிற மரங்கள், வசந்த காலம் வரும்பொழுது துளிர்த்துத் தழைக்கும்படி செய்கிறவர் யார்? இப்படியெல்லாம் செய்பவர் கடவுள் ஒருவரேயொழிய மற்றொருவருமல்ல. இது எத்தனை ஆச்சரியம்! கடவுளாற் செய்யப்படுகிற ஆச்சரியமான செய்கைகள் எண்ணிறந்தவைகள்.

கடவுளுடைய ஒப்பற்ற வல்லமைக்கு அவர் சிஷ்டித்த படைப்புகள் யாவும் சாட்சியிடுகின்றன. நமது கண்ணுக்கு எதிர்ப்படுகிற வெளிகள் எல்லாம் திறக்கப்பட்டிருக்கின்ற புஸ்தகங்களுக்குச் சமானமாய் இருக்கின்றன. சிறந்த வர்ணத்தையுடைய புஷ்பங்களின் இதழ்களின்மேல் மிகுந்த அறிவைக்

கொடுக்கத்தக்க பாடங்கள் எழுதப்பட்டிரு க்கின்றன.

சலசலப்பான ஓசையையுடைய ஏரிகள் சாதுரியமாய்ப் பேசுகின்றன. கிசுகிசென்று வீசுகின்ற காற்று நற்போதனை கொடுக்கின்றது. சிஷ்டிகள்யாவும் சிஷ்டிகருடைய நன்மையைக் கூறுகின்றன.

நாம் கடவுளைக் காணக்கூடாது. அவர் கண்ணுக்குத் தோன்றாதவர்: ஆயினும், நாம் அவருடைய படைப்புகளைக் கண்டு, பசுமையான புல்லுள்ள தரையில் அவருடைய அடிச்சுவடுகளைப் பார்த்து வணங்கலாம். அறிவில் முதிர்ந்தவர்கள் கடவுளுக்குத் திர்ப்திகரமான ஆராதனைசெய்யும் வகையைத் தெரிந்துகொள்வார்கள்: எப்படியும், அவருடைய படைப்புகளில் ஒரு பாதியையாவது கணக்கிடத்தக்க சக்தியுள்ளவர்கள் எங்குமில்லை.

சுஉ—வது. கழுதை.

கழுதைக்கும் குதிரைக்கும் மிகுந்த பேதம் உண்டு. குதிரை அதிக வேகமாய் ஓடத்

தக்க சிறந்த மிருகம்; கழுதையோ, தாமத மும், அமைதியும், கீழ்மையுமான மிருகம். பொதுவாய், அதை ஒருவரும் கவலையாய்ப் பராமரிக்கிறதில்லை. அது சாலைப் புறங்களிற் புல்லுள்ள இடங்களைத் தானாகத் தேடிப் புல் மேய்ந்துவரும்படி விடுவார்கள். அது அடிக்கடி குரூரமாய் நடத்தப்படுகின்றது. இத் தேசத்திலே கழுதைகள் அதிக பாரமான சுமைகளை எடுத்துக்கொண்டு வருத்தத்தோடு அடிக்குமேல் அடிவைத்துப் போவதைப் பலமுறையும் பார்த்திருக்கிறோம்.

ஸ்பானியா, எகிப்து முதலிய சில தேசங்களிலுள்ள கழுதைகள் இந்தியாவிலுள்ளவைகளைப்பார்க்கிலும் அதிக சிறந்தவைகள். அத்தேசங்களில் வசிக்கின்ற ஜனங்கள் தங்கள் கழுதைகளிடத்தில் மிகவும் பட்சமாயிருப்பார்கள்.

காட்டுத்தன்மை நீங்காதிருக்கின்ற கழுதைகள் அதிக விரைவாய் ஓடும்; அவைகளுக்குச் சற்றே விசேஷம் உண்டு; சுயாதீனம் பெற்றிருப்பது அவைகளுக்கு மிகுந்த இஷ்டம்.

கூகூ-வது. பொருமை.

ஒருவனுடைய செல்வத்தைப் பார்த்து வி சனப்படுகிறவன் தன் துன்பத்துக்குத் தானே காரணமாய் இருக்கிருனென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. தீயினுலே பதரானது எரிவதுபோலப் பொருமையினுலே மனமானது எரிகின்றது. பொருமையுடையவனது மனம் ஒருபோதும் சந்தோஷமும் அமைவுமுள்ளதாயிராது. இந்தத் துர்க்குணம் மனிதனுக்கு இயல்பாம். அது தோன்றும்போதே அறிவாகிய கருவியினுல் அதைக் களைந்துபோட்டால், துயரத்தின் கொடுமை அறியமாட்டோம். சந்தோஷம் தானுகவே உண்டாகும். இதற்குத் திஷ்டாந்தம் வருமாறு.---

ஒருவன் தன் அயலானுடைய சம்பத்தைப் பார்த்து, பொருமையடைந்து மனம் பதைத்து, வனத்தில் வாசம்பண்ணப்போனுன். இந்தப் பொருமைக்காரனை ஒரு சன்னியாசி கண்டு, இரங்கி, மந்திரிக்கப்பட்ட ஒரு பாச்சிகையை அவனுக்குக் கொடுத்து, நீ இதை உரு

ட்டினால் விரும்பின யாவும் சித்திக்கும். இது
வே இதன் விசேஷமாம்: ஆகிலும், மூன்று
தரத்துக்குமேல் இதை உருட்டினால், காரி
யம் சித்தியாகாது. உனக்கு உண்டாகும் ப
யன் எவ்வளவோ, உன் அண்டை வீட்டுக்கா
ரனுக்கு அதற்கு இரட்டிப்பாய் உண்டாகு
மென்றான். அவன் வீட்டுக்குப்போய், தன
க்கு மெத்தை வீடுகளும், தானியமும், வெள்
ளியும், பொன்னும், ஆபரணங்களும் மிகுதி
யாக உண்டாகக்கடவனவென்று நினைத்துப்
பாச்சிகையை உருட்டினான். அந்தப்படியே
ஆயிற்று. அவன் அயலவனுக்கும் அதற்கு
இரட்டிப்பங்கு உண்டாயிற்று. அப்போது
சன்னியாசி சொன்ன வார்த்தைகள் அவனு
டைய ஞாபகத்தில் வந்தன. அவன் தன் அ
ண்டை வீட்டுக்காரனைக் கெடுக்க விரும்பி,
எனக்கு ஒரு கண் இல்லாமற் போகக்கடவ
தென்று இரண்டாந்தரமும் அந்தப் பாச்சிகை
யை உருட்டினான். அதனால் அவன் அண்
டை வீட்டுக்காரன் இரண்டு கண்களையும் இ
ழந்தான். பின்பு அவன் என் வீட்டிற் பாதி
பூமிக்குள் அமிழ்ந்திப்போககடவதென்று பா

ச்சிகையை உருட்டினுன். அப்போது அவன் அண்டை வீட்டுக்காரனுடைய வீடு முழுமையும் பூமிக்குள்ளே அமிழ்ந்திற்று. கடைசியில் அவனுடைய வேலைக்காரர் அவன் தனிமையான இடத்தில் இருக்கிறதைக் கண்டு, ஒருமைப்பட்டு, அவனை அதிகமாக அடித்து, அவன் திரவியத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு படகில் ஏறி ஓடிப்பொனுர்கள். அப்போது அவன் கூக்குரலைக் கேட்க ஒருவரும் இல்லாதிருந்ததினுல், அவன், "பொறுமையின் பலன் இதுவோ? பொறுமையினுலே என் அண்டைவீட்டுக்காரனை நான் கெடாதிருந்தேனுகில், சந்தேகம் இல்லாமல் இந்த வேதனையின் காலத்தில் அவர்கள் எனக்கு உதவுவார்களே. இல்லாவிட்டாலும் அவர்களுக்குப் பயந்தாவது ஒருவரும் இப்படி எனக்குப் பொல்லாங்கு செய்யத்துணியார்களே" என்று கூக்குரலிட்டான்.

கூச–வது. பசுமாடு.

பசுமாட்டிற்கு நாலு காலும் நாலு பாதமும் உண்டு. அதின் பாதம் இரண்டு பாகங்களா

கப் பிரிந்திருக்கும். அதின் மேற்புறம் மரம் போலக் கடினமாயிருக்கும். பசுவின் பாதத்திற்குக் குளம்பு என்று பெயராம். பசுவின் வால் மெல்லிதாயிருக்கும். வால்நுனியில் மயிர் செறிந்து வளர்ந்திருக்கும்.

பசு விசேஷமாய்ப் புல் மேயும், வைக்கோலும் தின்னும்; அது விரைவாய் மேய்வது வழக்கம். அது ஓய்ந்து நிற்கும்பொழுது, அல்லது படுத்திருக்கும்பொழுது, முன்பு ஒருவாறுக மென்று விழுங்கின இரையை மீண்டும் வாய்க்குள் வரும்படி செய்து, நன்றாகச் சப்பித்தின்னும்: அப்படித் தின்பதற்கு அசைபோடல் என்று பெயராம்.

பசுமாடு மனுஷருக்கு அதிக உபயோகமுள்ள மிருகம். அதின் கொம்பினால் சிமிழ், சீப்பு, கத்திப்பிடி, பானபாத்திரங்கள் செய்யப்படும். அதின் குளம்பினால் ஒருவகைப் பிசின் உண்டாக்கப்படும். மாட்டெலும்பு அனேக வேலைகளில் யானைத்தந்தத்திற்குப் ப்திலாகப் பிரயோகிக்கப்படும். எலும்புத்தூள் வயலுக்கு நல்ல எருவாகும். மாட்டுத்தோல் நன்றாகப் பதப்படும். அது பாதரட்சை தைக்க, குதி

ணாகளின் பண்டியுடுப்புச் செய்ய, புஸ்தகம் கட்ட உபயோகமாகும். மாட்டுக்கொழுப்பு விளக்கு எரிக்கும்படி வர்த்திசெய்யவும், வேறு அனேக வேலைகளுக்கும் உதவியாகும். அரைசாந்தின் பசைத்தன்மையை அதிகரிக்கச் செய்யும்படியாக அதில் மாட்டு மயிர் கலந்து பிசையப்படும்.

பசுமாடு மனுஷருடைய சுகசெல்வத்துக்கு அதிக உதவியுள்ளதாயிருக்கின்றது. அது நமக்குப் பால் தருகின்றது. அந்தப்பாலை நாம் வேண்டிய அளவிற்குக் குடித்து, மிச்சமானதில் ஆடை எடுக்கிறோம், வெண்ணெய்கடைகிறோம், தயிராகும்படி வைக்கிறோம், பாற்கட்டி செய்கிறோம், மோர் எடுக்கிறோம்.

மேலும் பசுமாடு சில இடங்களில் நிலம் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும், சுமை எடுப்பதற்கும் உபயோகிக்கப்படும்.

எருமையென்பது மற்றொரு வகையான மாடு. இத் தேசத்தில் எருமைகள் மிகுதி. மனுஷருக்குக் கைவசப்பட்டுச் சாதுவாகாமற் காட்டிலே சஞ்சரிக்கின்ற எருமைகள்

மிகவும் துஷ்ட மிருகங்கள். அவைகளால் அபாயம் நேரிடுகிறதுண்டு.

கருரு-வது. உதார குணமும் நன்றியறிதலும்.

மிலன் என்னும் பட்டணத்தில் ஒருகூலிக்காரன் இருந்தான். அவன் இருநூறு வராகன் அடங்கிய பணப்பை ஒன்றைக் கண்டெடுத்து, அது இன்னருடையதென்று அறியும்படிக்குப் பிரசித்தம்பண்ணினன். அந்தப் பணத்தை இழந்த மனிதன் அந்தச் செய்தி கேட்டு, கூலிக்காரனுடைய வீட்டுக்குப்போய், அந்தப்பொருள் தன்னுடையதென்று மெய்ப்பித்தவுடனே கூலிக்காரன் அதை அவனுக்குக் கொடுத்துவிட்டான். அதை வாங்கிக்கொண்டபின்பு, அவன் தன்னுடைய சந்தோஷத்தினலும் நன்றியறிதலினலும் கூலிக்காரனுக்கு இருபது வராகன் கொடுக்க விரும்பினன். கூலிக்காரன் அதை வாங்க மனதில்லாதிருந்தான். பின்பு பத்து வராகன் கொடு

டுக்கப்பார்த்தான். அதையும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பின்பு ஐந்து வராகன் கொடுக்கப்போனான். அதையும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதினால் அந்த மனிதன் கோபமூண்டு, வராகன் பையைத் தரையில் எறிந்துபோட்டு, "இந்த உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் செய்வதற்கு எனக்கு இடங்கொடாயேயாகில், நான் ஒன்றும் இழந்ததில்லை" என்றான். அப்பொழுது அந்தக் கூலிக்காரன் ஐந்துவராகன் வாங்கிக்கொள்ளச் சம்மதித்து, அதை வாங்கி, எளியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான்.

இப்படி நீங்கள் பெற்றுக்கொண்ட உபகாரத்தை உணர்ந்து, பின்பு கூடியமட்டும் அதற்குப் பிரதியுபகாரம் செய்வது உதாரகுணத்திற்கு அடையாளமாய் இருக்கிறது.

௬௬-வது. ஆடு.

ஆட்டைப்பார்க்கிலும் மனுஷருக்கு அதிக உபயோகமான மிருகம் மற்றொன்று இல்லை. சில தேசங்களிலே ஆட்டுப்பாலில் வெண்

ணெய் எடுப்பார்கள்; பாலடைகட்டி செய்வார்கள். அதின் உரோமத்தால் புடைவை நெய்யப்படுகின்றது. சில குழிர்ந்த தேசங்களில் வாசமாயிருக்கும் ஜனங்கள் உரோமம் கத்திரிக்காமல் ஆட்டுத்தோலை ஆடையாகத் தரிப்பார்கள். அது அவர்களுக்கு நல்ல அனலான வஸ்திரமாயிருக்கும். வெப்பமான தேசங்களிலுள்ள ஆடுகளின் உரோமம் தலைமயிர்போலக் குறுகியிருக்கும். ஆட்டுக்கொழுப்பினால் விளக்கு எரிப்பதும் உண்டு. ஆட்டுமாமிசம் அதிக சௌக்கியமான போஜனம். அதின் தோல் பலவேலைகள் செய்வதற்குப் பதமாக்கப்படும். ஆட்டின் ஆணுக்குக் கடாவென்றும், பெண்ணுக்கு மறியென்றும், இளம் பருவத்தாட்டுக்குக் குட்டியென்றும் பெயராம்.

௬எ—வது. வானம்பாடியும் குஞ்சுகளும்.

ஒரு வானம்பாடி ஒரு வயலிற் கூடு கட்டிக் குஞ்சு பொரித்திருந்தது. அதின் குஞ்

சுகள் பறக்கத்தக்க பருவமாதற்கு முன்பு, அந்த வயலில் விதைக்கப்பட்டிருந்த தானியம் விளைந்துபோயிற்று. ஒரு நாள் அந்த வானம்பாடி தன் குஞ்சுகளுக்கு இரை தேடப் புறப்பட்டது. அது புறப்படுமுன், வயலில் விளைவு அறுக்கப்படும்பொழுது குஞ்சுகள் நாசமாக்கப்படுமென்று எண்ணி, விளைச்சல் அறுப்பதைப்பற்றி யாராவது ஏதும் பேசினால், அதைக் கருத்தாய்க் கேட்டிருங்களென்று தன் குஞ்சுகளுக்குச் சொல்லிப் போய்விட்டது. பின்பு வயற்காரனும், அவன் மகனும் அந்த வயலுக்குப் போய், பயிர் நன்றாய் விளைந்திருப்பதைக் கண்டு, அதை அறுக்கத் தங்களுக்கு உதவி செய்யும்படியாக அயலாரிடத்திற் கேட்கவேண்டுமென்று பேசிக்கொண்டு திரும்பினார்கள். அவர்கள் பேசினதையெல்லாம் அந்தக் குஞ்சுகள் உற்றுக்கேட்டு, தாய்க்குருவி திரும்பிவந்தபொழுது, அதற்குச் சொல்லின. அப்போது தாய் "அயலாரைக் கேட்கவேண்டுமென்று போகிறார்கள்? பின்னை நாளைக்கு யாதொருமோசம் உண்டாகுமென்.ு அஞ்சவேண்டியதில்லை: ஆகிலும்,

பேசுகிறதைக் கேட்டு எனக்கு அறிவியுங்கள்" என்று சொல்லி மறு நாளும் இரை தேடப்போய்விட்டது. அது போனபின்பு, அந்த வயற்காரனும் மகனும் வந்து, அயலவர்கள் தங்களுக்கு உதவிசெய்யும்படி வராததினால் அன்றைத்தினம் விளைச்சல் அறுக்கத் தொடங்காமல், தங்கள் பந்துசனங்களுக்கு அறிவித்து, அவர்கள் வரும்பொழுது தொடங்கலாமென்று பேசிப் போனார்கள் - அதையும் அந்தக் குஞ்சுகள் கேட்டிருந்து, தாய் திரும்பி வந்தபொழுது அதற்குச் சொல்லின. அப்பொழுது அது "என் குஞ்சுகளே, அவர்கள் தங்கள் வேலையைப் பிறரைக்கொண்டு செய்விக்க நினைத்திருப்பதினால், நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை: ஆகிலும், நான் இங்கு இல்லாதிருக்கும்பொழுது, நடக்கிற காரியங்களை எனக்கு அறிவியுங்கள்" என்று சொல்லி மறு நாளும் போயிற்று. அப்போது வயற்காரனும் மகனும் வந்து "இனி என்ன செய்வோம்? நாம் கேட்டுக்கொண்டபடியே நமக்கு உதவிசெய்ய அயலவர்களும் வரவில்லை, பந்துசனங்களும் வரவில்லை. நாளைக்

காலமே நாம் இருவரும் வந்து விளைச்சல் அறுப்போம்" என்று சொல்லிப் போனார்கள். அதைக் குஞ்சுகள் கேட்டிருந்து, தாய் வந்த பொழுது அதற்கு அறிவித்தன. அப்பொழுது தாய் "நல்லது, இனி இங்கிருந்தால் அபாயம் உண்டாகும், அவர்கள் தங்கள் வேலையைத் தாங்களே செய்யத் தீர்மானித்திருப்பதினால், தடையில்லாமற் செய்வார்கள்" என்று சொல்லித் தன்குஞ்சுகளைக் கூட்டிலிருந்து எடுத்து மறுநாள் உதயத்திற்குமுன் ஒரு வேலிக்குள்ளே கொண்டுபோய்ச் சேர்த்தது.

கூஅ-வது. நாய்.

நாய் அதிக கூர்மையுள்ள மிருகம். அது விழிப்பும், உண்மையுமுள்ள மிருகமாயிருப்பதினால், அதை வளர்க்கிறவர்களுடைய பொருளை அது பத்திரமாய்க் காவல் செய்யும். நாயானது ஒரு பிராண சினேகிதனுக்குச் சமானம். அது தன் எசமானுடைய ஒலிக் குறிப்புகளைக் கேட்பதினாலும் பார்வைக் குறிப்புகளைக் காண்பதினாலும் அவருடைய

கருத்தை இன்னதென்று தெரிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்பட்டு நடக்கும். அது வீட்டுச் சாமான்களைக் காத்துக்கொள்வதுமாத்திரமல்ல, ஆட்டிடையனுடன் கூடப்போய், ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவைகள் சிதறிப்போகாமல் ஓர் இடத்திற் சேரும்படிபண்ணி, சாயங்காலத்தில் அவைகளைப்பட்டியிற்கொண்டுவந்து சேர்க்கும்.

நாயானது சோறு, ரொட்டி, மாமிசம் இவைகள் எல்லாம் தின்னும். எலும்பைக் கடித்துத்தின்பது அதற்கு மிகவும் கொண்டாட்டம். நாய்கள் தங்களை வளர்த்தவர்களிடத்தில் அதிக சார்பாய் நடக்கின்றன· அவர்களுக்கு அபாயம் நேரிடும் காலத்தில் தங்கள் பிராணனைக் கொடுத்தும் அவர்களை இரட்சிக்கப் பார்க்கும். நாய்களுக்கு மணம்பிடிக்கும் புலன அதிகரித்திருக்கின்றது.

௯௯—வது. பேராசையின் தீமை.

இனிவரும் பயனைக்குறித்து இப்போது இருக்கின்றதைச் சோர விடுகிறவன் புத்தியீ

னனும் நிர்ப்பாக்கியனுமாயிருக்கிறான். பே
ராசையானது கிலேசத்தை உண்டாக்குகிற
தென்றும், பேராசைக்காரருடைய இச்சை
ஒருபொழுதும் அடங்காதென்றும் நாம் ந
ன்றாக அறிந்திருக்கவேண்டும். இதற்குத்
திருஷ்டாந்தம் – ஒரு இரசவாதி ஒரு குடியா
னவன் வீட்டுக்கு வந்து, அவனுடனே நான்
வெள்ளியைப் பொன்னாக்குவேன் என்றான்.
அவன் சொல்லியதைச் சோதிக்கும்படிக்கு
அந்தக் குடியானவன் ஒரு வெள்ளிப்பண
த்தைப் பொன்னாக்கும்படி அவனிடத்திற்
கொடுத்தான். அந்த இரசவாதி நான் என்
மந்திரங்களைச் செபிக்கவேண்டுமென்று சொ
ல்லிக், குடியில்லாத ஒரு இடத்திற்குப் போ
ய், தான் வாங்கின வெள்ளிப்பணத்தை ம
றைத்துச் சற்று நேரத்திற்குப்பின் வெளியி
ல்வந்து, தன்னிடத்தில் இருந்த பொன்காசை
அந்தக் குடியானவனுக்குக் கொடுத்தான்.
குடியானவன் மிகவும் ஆச்சரியப்பட்டு, இரச
வாதியுடைய மந்திரங்கள் மெய்யென்று ந
ம்பி, அதிக ஆவலோடே தன் குடும்பத்தா
ருடன் அவனைப் பூசிக்கத்தொடங்கி, "ஐயா
என் வெள்ளி நாணயம், வெள்ளி ஆபரணங்

கள் எல்லாவற்றையும் பொன்னுக்கித் தர வேண்டுமென்று பிரார்த்தித்தான். அந்த இரச வாதி இராத்திரிமுழுதும் விழித்திருந்து மந் திரஞ்செபிக்கும்படி குடியில்லாத ஒரு வீடு வேண்டுமென்ருன். குடியானவன், ஐயா, உமது சொற்படியே ஆகட்டும் என்று சொ ல்லி, இரசவாதியைக் குடியில்லாத ஒரு வீ ட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோய், தன் னுடைய வெள்ளி ஆபரணங்கள் முதலான யாவற்றையும், பூசைக்கு வேண்டியவைகளை யும் அவனுக்குக் கொடுத்து, வெளியிலே வந்துவிட்டான். இரசவாதி அவனை மோ சம்பண்ணும்படி நிமிஷந்தோறும் கோஷா, கூஷா என்கிற மந்திரத்தையும் உச்சரித்து மணியையும் அடித்தான். அதனுல் அவ னும் மற்றெல்லாரும் நம்பிக்கை அடைந்து நித்திரைசெய்யப் போனுர்கள். அந்த இரச வாதி இராத்திரி மூன்ரும் சாமத்தில் அந்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஓடிப்போனுன. காலையிலே அவ ர்கள் இரசவாதி தங்கள் பொருள்களை எல் லாம் எடுத்துக்கொண்டுபோய்விட்டானென் று கண்டு, ஏங்கித் திகைத்தார்கள்.

இதினால் பேராசைகொண்டு துராலோசனையை நம்புகிறவர்கள் நிச்சயமாக மோசம் போவார்களென்றும், ஒருவன் பேராசைகொள்வதை அடையாமற்போவதுமன்றி, அதினாலே தான் வைத்திருக்கின்றதையும் இழந்துபோவானென்றும் அறியலாம்.

எ௰-வது. பூனை.

பூனைக்குக் கூர்மையான நகங்கள் உண்டு. யாராவது அதினுடன் சீராடப்பண்ணும் பொழுது, அது தன் நகங்களை உள்ளே இழுத்துக்கொள்வது வழக்கம். அவ்வேளையில் அதின் பாதம் பட்டுப்போல மிருதுவாயிருக்கும். பூனை குட்டிபோட்டதின்மேற் சில நாளளவும் அதின் குட்டிகள் கண்திறவாதிருக்கும். பூனை தன் குட்டிகளுக்குச் சில காலம் பால்கொடுத்து, பின்பு சுண்டெலி, குருவிக்குஞ்சு முதலிய இரைகளைத் தேடிக் கொடுக்கும்.

பூனை வீடுகளில் மனிதருடன் சஞ்சரிக்கின்ற மிருகங்களுக்குள் ஒன்றும். அவர்களுக்கு

அது மிகவும் பிரியமாயிருப்பது. மனிதரு க்குச் சிநேகிதனுக்கும் தோழனுக்கும் சமா னமாய் அவர்களைச் சார்ந்து நடக்கிற நாய் இ ருக்கின்றதே, அதைப்போலப் பூனை அத்த னை அறிவும் படிவுமுள்ளதல்ல: ஆகிலும், அது அதிக சாந்தமும், அமைதியும், பட்ச முமுடைய மிருகம்: ஆதலால், அது வீட்டுக் காரரைப்பார்க்கிலும் வீட்டையே அதிகமாய் விரும்புகிற குணமுடையதென்று அதைக் குறித்துப் பெரும்பாலும் சொல்வது தகுதி யல்ல. தன் எசமான் தூரத்தில் வரும் பொழுது பூனை அவனை உபசரிக்கும்படி, அ வனிடத்திற்கு ஓடி, அதிக பட்சம் காண்பித் து நடப்பதை நாம் பல முறையும் பார்த்த தில்லையா? அது பிள்ளைகளிடத்தில் எவ்வள வாகச் சேர்ந்து, அவர்கள் தனக்கு என்ன தீ ங்கு செய்தாலும், தன் பயங்கரமான நகத்தா ல் அவர்களைப் பிருண்டநினைக்காமற் சகித்து க்கொள்ளுகின்றது. நகமானது கடவுள் பூ னைக்குக் காவலாகக் கொடுத்திருக்கிற கருவி யாம். தங்கள் குட்டி, கன்று, குஞ்சு இவைக ளைப் பூனையைப்போல் அத்தனை கருத்தாய்ப்

பராமரிக்கிற மிருகங்கள் வேறில்லை. பூனை தன் குட்டிகளை இழந்துபோனல், அவைகளுக்குப் பதிலாக அது யாதாவது மற்றொரு மிருகத்தின் குட்டியைப் பலமுறையும் எடுத்துப் பால் கொடுத்து வளர்ப்பது நமக்குத் தெரியும். சுபாபமாய் நாயும் பூனையும் ஒன்றுக்கொன்று பகையாயிருந்தும், அவைகள் அப்போதப்போது கூடி விளையாடி ஓரிடத்திற் படுத்துக்கொள்ளும். பூனை குதிரைச்சாலையிற் சஞ்சரித்து, குதிரையுடன் தோழமையாயிருப்பதும் உண்டு.

எக-வது. நற்குணம்.

ஒருநாட்காலமே மீனாட்சியென்னும் சிறுபெண்பிள்ளை தெருத்திண்ணையில் உட்காந்து தோசை சாப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, நடக்கிறதற்குச் சக்தியில்லாமல் மிகவும் தொய்ந்து மெலிந்துபோன ஒரு பையன், அடிமேல் அடிவைத்து அவளுக்குக் கிட்டப்போய்ச் சுவரிற் சார்ந்துகொண்டுநின்றான். அவன் க

ண்ணே மீனாட்சி கையிலுள்ள தோசைமேல் இருந்தது.

அப்பொழுது மீனாட்சி அவனைப் பார்த்து, "பையா, உனக்கு ஏதென்கிலும் வியாதியா?" என்று கேட்டதற்கு, அவன், "எனக்கு ஒரு வியாதியும் இல்லை; மெத்தப் பசிக்கிறது; நேற்றுக்காலமே சாப்பட்டபின் இதுவரையிற் பட்டினியாய் இருக்கிறேன்: காது அடைக்கின்றது; கால் வலிக்கின்றது; இனி நடக்கிறதற்கு என்னால் ஆகாது" என்றான்.

மீனாட்சி ஏழைகள்மேல் அதிக இரக்கமுள்ளவளானதினால், பையனைப் பார்த்து, "இந்தா, இநதத் தோசையைச் சாப்பட்டு இளைப்பாறு, எனக்கு உன்னைப்போல் அத்தனை பசியில்லை" என்று சொல்லி, தன் கையில் இருந்த தோசையை அவனுக்குக் கொடுக்கப்பார்த்தாள். அப்பொழுது அவன் "உன் தோசையை எனக்குக் கொடுத்துவிட்டு நீ என்ன செய்வாய்?" என்ன, மீனாட்சி என்பவள் "எனக்கு அவசியமில்லை, நீ சாப்படு" என்று சொல்லிக் கொடுத்தாள். அவன் அதை வாங்கி ஆவ

லுடன் சாப்படுகிறதைப் பார்த்து மீனாட்சி சந்தோஷப்பட்டாள்.

அந்தப் பையன் மீனாட்சி கொடுத்த தோசையைச் சாப்பட்டு, பசிக்களை தெளிந்து பலங்கொண்டு அங்கிருந்து போகும்படி எத்தினப்பட்டான்

அப்பொழுது மீனாட்சி "நல்லது, நீ எங்கே போகிறாய்? உனக்குத் தந்தை தாய் இல்லையா?" என்று அவனிடத்திலே விசாரித்தாள். அதற்குப் பையன், "நான் யாரும் இல்லாத ஒரு ஏழை, எனக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை, வீடும் இல்லை. எங்காவது ஒரு அலுவலில் ஏற்படுவதற்கு ஆசையாயிருக்கிறேன். நேற்று முழுவதும் அலுவல் விசாரித்துக்கொண்டு திரிந்தேன். ஒன்றும் அகப்படவில்லை. இராத்திரி ஒரு மாட்டுத்தொழுவத்திற் படுத்து உறங்கி, இன்றுகாலமே எழுந்தபொழுது அப்புறம் நடப்பதற்கு என்னால் ஆகவில்லை. இப்பொழுது நீ செய்த உபகாரத்தினால் என் பசி நீங்கிற்று: இனி நன்றாய் நடப்பேன்." என்றான்.

பின்பு பையன் மீனாட்சிக்கு வந்தனம் சொல்

வீக்கொண்டு போய்விட்டான். கொஞ்சக்காலம் சென்றதின்மேல், மீனுட்சியென்பவள் தாயார் சொன்ன சமாசாரத்தை யாருக்கோ அறிவிக்கப் போனபோழுது, ஒருவன் அவளைக் கூவி அழைத்த சத்தத்தைக் கேட்டாள். அது ஆறென்று அவள் திரும்பிப் பார்த்தபொழுது, பலமான சரீரமுடைய ஒரு சிறுவன் சில பன்றிகளைக் கடைத்தெருவிற்கு ஓட்டிக்கொண்டுபோவதைக் கண்டாள்.

அவன் கொஞ்சக் காலத்திற்குமுன்பு அவளிடத்திலே தோசைவாங்கிச் சாப்பட்டுப் போன சிறுவனும். அவன் பெயர் பொன்னப்பன். அவன் சாயல் மீனுட்சிக்குத் தெரியவில்லை. அவன் மீனுட்சியைப் பார்த்து, "அம்மா, நான் உன்னைக் கண்டுபோன அன்றைக்கே ஒரு பட்சமுள்ள குடித்தனக்காரன் தன் வயலில் ஒரு சிறுவேலை செய்யும்படி சொன்னுர். நான் அதைச் செய்தபொழுது என் நடக்கை அவருக்குத் திர்ப்திகரமாயிருந்ததினுல் அவர் தன் வேலையில் என்னை வைத்துக்கொண்டு, என்னை நம்பி இந்தப் பன்றிகளைக் கடைத்தெருவிற்கு ஓட்டிப்போகச் சொன்னுர். எ

னக்கு இப்பொழுது யாதொரு குறைச்சலு மில்லை. சௌக்கியமாய் வாசம்பண்ணுவதற் குத் தகுதியான வீடும், அன்னம் கொடுப்பத ற்கு அன்பான எசமானும் உண்டு. இந்த நன்மைக்கெல்லாம் நிமித்தமாயிருந்தது உன் உபகாரகுணம்தான். நீ அன்றைக்குத் தோ சை கொடுத்து என் பசியைத் தீர்க்காதிருந் தால், நான் அப்பொழுதே பட்டினியால் இற ந்துபோவேன்" என்றான்.

எஉ—வது காக்கை.

காகப்பட்சியை நாம் பலமுறை பார்த்தி ருக்கிறோம். அதின் நிறம் கறுப்பு. அதின் உதடு நீண்டு பலத்திருக்கும். அது தன் உ தட்டினால் நிலத்தைக் கிழறிப் பூச்சி புழுவை ப் பிடித்து நறுக்கித்தின்னும். காக்கைக்குக் கால் ஒன்றுக்கு நாலு விரல் உண்டு. அது மாமிசம், பூச்சி புழு, தானியம் இவைகளையும், வேறு அனேக பதார்த்தங்களையும் தின்னும்.

காக்கை அதிக துணிவும் சாக்கிரதையுமுள் ள பட்சி. அது மடைப்பள்ளியைச் சுற்றி வட்

டம்போட்டுக்கொண்டு திரியும். அது சில வேளை நாய் கடித்துக்கொண்டிருக்கிற எலும்பைப் பறித்துக்கொண்டு பறந்தோடும். சில வேளை சிறுவர்கள் வைத்து உண்கிற போசனத்தைத் தட்டிப்பறித்துக் கொண்டுபோவதும் உண்டு. காக்கை மிகவும் கபடமுள்ளது.

காக்கைகள் மரங்களிற் கூடுகட்டியிருக்கும். அவைகள் பெரும்பாலும் சாயந்தர வேளையில் தங்கள் தங்கள் கூடுகளுக்குப் போவதற்குமுன் ஓரிடத்திலே கூட்டம் கூடுவது வழக்கம். அவைகள் விடியற்காலத்தில் வெள்ளென எழுந்து "கா கா," என்று கத்தும்.

இந்தியாவிலும் மற்றுள்ள கிழக்குத் தேசங்களிலும் வீடுவாசலில் கொட்டுண்டிருக்கிற உச்சிட்டத்தைக் காக்கைகள் பொறுக்கித் தின்னும். அந்த உச்சிட்டத்தை அங்கங்கே இருக்கும்படி விட்டால், அது நாற்றம் எடுத்துச் சனங்களுக்கு வியாதியை உண்டுபண்ணும்: ஆதலால், இங்குள்ளவர்களுக்குக் காக்கை மிகவும் உபயோகமுள்ளது.

௭௩-வது. சில சிறுவர்களும் தவளைகளும்.

சில சிறுவர்கள் ஒரு நாள் விளையாடும்படி ஒரு குளக்கரைக்குப் போய், அங்கே நின்று கல் எடுத்துக் குளத்தில் எறிந்து விளையாடினார்கள். அந்தக் குளத்திலே தவளைகள் திரளாகச் சஞ்சரித்ததினால், அவர்கள் எறிந்த கற்களிற் சில அந்தத் தவளைகள்மேல் விழுந்தன. அப்போது அங்கிருந்த தவளைகளில் ஒன்று ஜலத்திற்குமேல் தன் தலையை உயர்த்தி, "அப்பா, இப்படி எங்களுக்கு எறியாதிருங்கள்" என்றது.

அதுகேட்டு, அந்தச் சிறுவரில் ஒருவன் தவளையைப் பார்த்து, "நாங்கள் விளையாட்டுக்கு எறிந்தோம், நீ விசனப்படவேண்டாம்" என்றான். தவளை, "அது மெய்தான், நீங்கள் விளையாட்டுக்கு எறிந்தாலென்ன, வெற்றிக்கு எறிந்தாலென்ன, எங்களுக்கு வேதனை சரிதான். உங்களுக்கு விளையாட்டு எங்களுக்குப் பிராணாபாயம்" என்றது.

நாம் விளையாடும்பொழுது பிறருக்குத் து

ன்பம் உண்டாவதற்கு ஏதுவான ஒன்றையும் பகிடிக்குச் செய்யாதபடி பார்க்கவேண்டும்.

வேம்பும்; நாணலும்.

அந்த ஆற்றங்கரையில் அடுத்து நிற்கின்ற வேப்பமரத்தையும் நாணலையும் பாருங்கள்; இத்தனை பலத்த காற்று அடிக்கும்பொழுது, வேம்பானது சற்றும் அசையாமல், நிமிர்ந்து ஆகாயத்தை அளாவி நிற்கின்றது. அற்ப நாணற்புல்லோ துவண்டு தரைமட்டமாய் வசைகின்றது.

ஒரு நாள் வேம்பானது நாணலைப் பார்த்து, "அடா அற்ப நாணற்பயலே, நீ இப்படித் துவண்டு நிலத்திற் படுத்திருக்கிறாயே, நீயா இந்தக் காற்றுக்குத் தப்பி உயிர் பிழைத்திருக்கப்போகிறாய்?" என்றது. அப்பொழுது முன்னிலும் அதிக பலத்த காற்று அடித்ததினால், வேப்பமரம் வேர் பாறித் தத்தளித்துக் கீழே விழுந்து சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. நாணற்புல்லோ, காற்று அமர்ந்தவுடனே எழுந்து தலைநிமிர்ந்து என்றும்போல உறுதியாக நின்றது.

எச-வது. குரங்கு.
க-ம். பந்த.

குரங்கு மனுஷருக்கு விநோதத்திற்கு ஏற்ற படைப்பு. கூத்தாடுதல், குதித்தல் முதலிய பல நுட்பமான சேட்டைகளை அதற்கு எளிதிற் பழக்கலாம். குரங்கின் கால்கள் கைகளுக்கு ஒப்பாயிருக்கும். கற்றோர் குரங்குகளை நான்கு கையுடைய மிருகங்கள் என்பார்கள்.

குரங்குகள் எல்லாம் ஒரே விதமானவைகளல்ல, வெவ்வேறு விதமானவைகளாய் இருக்கின்றன. ஒருவகுப்பான குரங்குகளுக்கு வால் இல்லை. அவைகள் ஏப்ஸ் என்னப்படும். மற்றொரு வகுப்பான குரங்குகளுக்குக் குறுகிய வால் உண்டு· அவைகள் பாபூன்ஸ் என்னப்படும். சாதாரணமாய் இங்குள்ள குரங்குகளோ நீண்ட வாலுடையவைகளாய் இருக்கின்றன. அவைகளையே வானரம் என்பது. பெரும்பாலும் வாலில்லாக் குரங்குகள் அதிகம் பருத்தவைகள். அவைகளிற் சில ஒரு மனுஷனுடைய உயரத்திற்கு வளரும். குறுகிய வாலையுடைய குரங்குகள் ஆ

பிரிக்காதேசத்திலே திரளாய் உண்டு. அவைகளுடைய தலை நாய்த்தலைபோல் இருக்கும். அவைகள் அங்கங்கே கல்லின்கீழ் இருக்கிறதேள்களைப் பிடித்துத் தின்னும்படியாகக் கற்களைப் புரட்டிப் பெயர்க்கும். அவைகள் அதிக பலமும் துஷ்டகுணமுமுடையவைகள். சிலவேளை அவைகள் மனுஷர்மேற் பாய்ந்து விழுவதும் உண்டு. அமெரிக்கா தேசத்திலுள்ள குரங்குகளின் வால் அதிக பலமுடையது. அவைகள் தங்கள் வாலைமரக்கொம்புகளில் இறுகும்படி சுற்றிக்கொண்டு, கைவிட்டுத் தொங்கி ஊஞ்சலாடுவது வழக்கம்.

குரங்குகள் அதிக துஷ்டகுணமுடையவைகள். அவைகள் எதிர்ப்பட்ட யாவையும் முறித்துச் சின்னபின்னமாய்க் கிழித்துச் சேதப்படுத்துவது வழக்கம். அவைகள் பொதுவாகக் காய்கறி, கீரை முதலிய பதார்த்தங்களைத்தின்னும். சில இடங்களிலுள்ள குரங்குகள் கடற்கரைக்குப் போய் வெகுதந்திர உபாயங்கள் செய்து மட்டிகளைப் பிடித்துத் தின்னும்.

எரு-வது. குரங்கு.

உ-ம். பங்த.

குரங்குகளைக் குறித்து அனேக கதைகள் உண்டு. அவைகள் சில விஷயங்களில் மனுஷர் செய்வதைக் கருத்தாகப் பார்த்திருந்து, தாமும் அவ்வாறே செய்யும். அதற்குத் திருஷ்டாந்தம் இதின் அடியில் வரும் கதையிற் காண்க.

ஓர் இடத்திலே சில குரங்குகள் அடைக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பார்க்கும்படி ஒரு துரைமகன் அப்போதப்போது அவ்விடத்திற்குப் போய் வருவதுண்டு. அவர் ஒரு நாள் அந்தக் குரங்குகளுக்குத் தலைக்கு ஒரு மாம்பழம் கொடுத்தார். அந்தக் குரங்குகளில் ஒன்று மிகவும் பலவீனமுள்ளதாயிருந்தது.

அப்பொழுது அந்தப் பலவீனமுள்ள குரங்குக்குக் கிடைத்த பழத்தைப் பலமுள்ள மற்றக் குரங்குகள் அடித்துப் பறித்துத் தின்றுவிட்டன. அப்புறம் மற்றொரு குரங்கு வைத்திருந்த பழத்தைச் சமீபத்தில் நின்ற பையன் ஒருவன் பறித்துக்கொண்டு போவதை

அந்தத் துரைமகன் கண்டு, அவனுக்குத் தன் கையில் இருந்த ஊன்றுகோலால் ஒரு அடி கொடுத்தார். அதைப் பார்த்திருந்த மேற் சொல்லிய பலவீனமுள்ள குரங்கு உடனே துரைமகன் கையில் இருந்த கோலைப் பிடுங்கி, அளவிற்கு அதிகமான ஆசையுள்ள அந்தக் குரங்குகள் இனி ஒருபொழுதும் தன்பொருளைப் பறிக்காதபடிக்கு அவைகளுக்கு உறைக்கத்தக்கதாக உரத்த அடி கொடுத்தது. பின்பு அந்தத் துரை மாம்பழம் கொடுக்க வருகிறபொழுதெல்லாம் அந்தச் சமர்த்துள்ள குரங்கு ஒரு கையாற் பழத்தையும் மறுகையாற் கோலையும் வாங்கிக்கொள்ளும். அதின் பழத்தை மற்றக் குரங்குகள் பறிக்கும்படி பின் ஒருபொழுதும் துணியவேயில்லை.

ஆறும் மாதம்.

௭௯-வது. பொய்.

பொய்யாவது ஒருவன் தான் உண்மையல்லவென்று அறிந்த ஒரு காரியத்தை உண்மையாகச் சொல்வதாம். ஒருவன் அறியாத காரியம் உண்மையாய் இருக்கவும் கூடும். அது

உண்மையாய் இருந்தாலும், அவன் அது உண்மையென்று அறியாதிருக்கும்பொழுது, பிறருக்கு உண்மை போலச் சொன்னால், அது பொய்யென்பதற்குச் சாட்சி வேண்டுவதில்லை.

ஒரு ஊரிலே பயிரிடுங்குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இரண்டு பெயர். அவர்களில் ஒருவன் பெயர் நாகன், மற்றவன் பெயர் இரத்தினம். ஒரு நாள் அந்தத் தகப்பன் தோட்டத்தில் இருந்த வைக்கோற் போரில் ஏறி விளையாடுவதற்குத் தன் பிள்ளைகளுக்கு உத்தரவு கொடுத்து, நீங்கள் தொட்டிக்குட்போனபின்பு கதவைச் சார்த்திக்கொள்ளுங்கள், திறந்துவிட்டால் அங்கே நிற்கிற கன்று வெளியே போய்விடுமென்று சொல்லியனுப்பினான். அவர்கள் தகப்பன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடனே மிகவும் சந்தோஷப்பட்டு, சீக்கிரமாய் ஓடி, வைக்கோற் போரின்மேல் ஏறி விளையாடினார்கள். விளையாட்டில் அதிக சிந்தையுள்ளவர்களாய் இருந்ததினால், தொட்டியின் கதவைச் சார்த்த மறந்துபோனார்கள். அவர்கள் விளையாட்டை முடித்து இறங்கிவந்தபின்பு, கதவு திற

ந்திருக்கக் கண்டு, கன்று வெளியே போய்வி ட்டதென்று அறிந்து தகப்பனுக்குப் பயந்து நின்றார்கள். அப்பொழுது மூத்தவனாகிய நா கன், "நாம் இப்போ கதவைச் சார்த்திப்போ டுவோம். கன்றை வேறாரோ வெளியேபோ கவிட்டார்களென்று தகப்பன் நினைப்பார்" எ ன்றான். அது கேட்டு, அவன் தம்பி இரத்தி னம் என்பவன், "அப்படியல்ல, தகப்பனுக்கு உள்ளபடி தவறாமற் சொல்வோம்" என்றான்.

ஒரு மணி நேரமளவு சென்றபின்பு, நாகன் வீட்டுக்குத் திரும்பித் தகப்பன் இருந்த இட த்துக்குப் போனான். அப்பொழுது தகப்பன் "மகனே நாகப்பா, கன்று வெளியே போய்வி டாமல் தொட்டியில் நிற்கிறதல்லவா?" என்று கேட்டதற்கு, நாகப்பன் "ஆம்" என்றான். ச ற்றுவேளை சென்றதின்மேல் இரத்தினம் வீட் டுக்குள் வந்தபொழுது, தகப்பன் "அடா அ ப்பா இரத்தினம், இங்கே வா, இன்றைக்கு வைக்கோற்போரின்மேல் ஏறிச் சந்தோஷமா ய் விளையாடினீர்களா? கன்று வெளியே போய் விடாமற் பத்திரமாய் நிற்கிறதல்லவோ?" என் று கேட்டான். உடனே இரத்தினம் முகம்

வாடித் தலை குனிந்து "அய்யா, கதவைச் சார்த்த மறந்துபோனேம். கன்று வெளியே ஓடிவிட்டது" என்றான்.

நல்லது, இந்த இரண்டு பிள்ளைகளில் எவன் சொன்னது பொய்யென்பது இதை வாசிக்கிறவர்களுக்கு எளிதாகத் தோன்றும். அந்தக் கன்று வெளியே போய்விடவில்லை. தகப்பன் வைக்கோல் தொட்டிக்குப் போய்ப் பார்த்தபொழுது, அது அங்கே ஒரு மூலையில் இருந்த வைக்கோலிற் கால் சிக்கிக்கொண்டதினால் ஒரு நிலையாய் நின்றது.

ஆகிலும் கன்று வெளியே ஓடாமல் நின்றதினால் நாகப்பன் சொன்ன பொய் மெய்யாகாது; ஆதலால், அந்தத் தகப்பன் நாகப்பன் பொய் சொன்னதற்காக அவனைத் தண்டித்து, இரத்தினம் மெய்சொன்னதற்காக அவனை மெச்சினான்.

எஎ-வது. நரி.

நரியென்பது ஒருவகை நாய். அது இந்து தேசத்திலே பல இடங்களிற் சாதாரணமாய் உண்டு. அது இராத்திரிகாலத்தில் ஊளை

யிடுவதைப் பலரும் கேட்டிருப்பார்கள். நரி சற்றேறக்குறைய இரண்டு அடி நீளமும் ஒன்றேகால் அடி உயரமுமுள்ளது. அதற்கு ஒடுங்கிய மூஞ்சியும், கூர்மையானசெவியும், சடைத்த வாலும் உண்டு.

நரிகள் இராத்திரிதோறும் இரைதேடித் திரிவது வழக்கம். அவைகளுக்கு முக்கியமான இரை பிணம். கூடுமானல் கோழிகளையும் ஆட்டுக்குட்டிகளையும் பிடித்துப் பட்சிப்பதும் உண்டு. அவைகள் கனிகளையும் தின்னும். பலஸ்தீனு நாட்டிலே நரிகள் திரளாய்ச் சஞ்சரிக்கின்றன. அவைகள் அங்குள்ள திராட்சத்தோட்டங்களை அடிக்கடி அதிக சேதப்படுத்தும்.

நரிகள் குகைகளிலும், மலை வெடிப்புகளிலும் தங்கும்; குகைகளும் மலை வெடிப்புகளும் இல்லாதிருக்கிற இடங்களில் நிலத்திற் குழி தோண்டி, அந்தக் குழிகளில் வாசம்பண்ணும். இடிந்து பாழாய்க் கிடக்கின்ற பட்டணங்களில் வாசம்பண்ணுவது அவைகளுக்கு மிகவும் பிரியம்.

வெப்பமான தேசங்களில் அங்கங்கே கா

ற்றம் எடுக்கத்தக்கதாய்க் கிடக்கின்ற பிணங்களை நரி பட்சியாதிருக்குமானால், அவைகளின் துர்நாற்றத்தால் காற்று அசுத்தமாகும்; அதினிமித்தம் மனுஷருக்குச் சுகநஷ்டம் உண்டாகும்: ஆதலால், நரிகள் வெப்பமான தேசங்களில் இருக்கவேண்டுவது அவசியம்தான்.

எஅ-வது. நன்னடக்கை, உண்மை, நன்றிமறவாமை.

நல்லொழுக்கமே உயர்வுதருவது. செம்மையாய் நட. நினைத்துப்பேசு. சொல்வதைக் கேள். உன் கடமையைச் சாக்கிரதையாகச் செய். உன் பாடத்தை நன்றாய்ப் படித்து ஒப்புவி. கல்வியிலே தேறும்படி. பிரயாசப்படு. நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருப்பதை நமது சினேகிதர் கண்டு சந்தோஷப்படுவார்கள்.

உனக்குள்ளது போதுமென்று எண்ணி, ரம்மியப்பட்டிரு. பேச்சினாலாவது, செய்கையினாலாவது ஒருவரையும் வஞ்சிக்காதே. நீ தீங்குசெய்தால் அதை அறிக்கைபண்ணு. ஒ

ருபொழுதும் பொய்சொல்லாதிரு. பேச்சிலாவது, செய்கையிலாவது உண்மைக்குத் தவருய் நடவாதே.

உனக்கு எவர்களாவது செய்த நன்றியை மறவாதே. சகல சீவபிராணிகளிடத்திலும் பட்சமுள்ளவனுயிரு. உன் தந்தை தாயர்களுக்கும், உனக்கு மேலானவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் நீசெய்யவேண்டிய கடமைகளைச் செய். உனது நன்னடக்கை கடவுளுக்குப் பிரியமாயிருக்கும். துர்நடக்கையோ வெறுப்பாயிருக்கும். இதை ஒருபொழுதும் மறவாதே.

எகூ–வது. எறும்பு.

இந்த எறும்புகள் எத்தனை சிறியவைகளாக நமக்குத் தோற்றுகின்றன.

நாம் மிதிக்கும்பொழுது நமது அடியின் கீழ் திரளான எறும்புகள் நசுங்கிச் சாகின்றன: செத்தும், நாம் அவைகளைக்குறித்துப் பரிதபிக்கிறதில்லை.

மனிதர் எத்தனை விவேகிகளாயிருந்தும்,

சோம்புத்தன்மையுள்ளவர்களும் மூட்டரும் எறும்புகளின் நடக்கையைப் பார்த்தால், மிகுந்த அறிவைப் பெறுவார்கள்.

எறும்புகள் தூக்கத்திலும் விளையாட்டிலும் தங்கள் நேரத்தை வீணாய்க் கழிக்கிறதில்லை: அவைகள் மப்பு மந்தாரமில்லாமல் நன்றாய் வெயில் எறிக்கின்ற கோடைகாலத்திலே தானியங்களைச் சேர்த்து, மாரிகாலத்தில் போசனம்பண்ணுவதற்காகப் பத்திரப்படுத்திவைக்கும்.

அவைகள் தங்கள் காரியங்களை ஒழுங்குபடுத்தி நிருவாகம் பண்ணுகிறதைப் பார்த்தால், மூடுபனி எப்பொழுது பெய்யும், புயல் எப்பொழுது அடிக்குமென்று முன்னமே கண்டு, தங்களுக்கு வேண்டிய இரைகளைச் சேர்த்துவைக்கிறதுபோலத் தோன்றும்.

மனிதராகிய நாம் நமக்கு வேண்டிய காரியங்களைக்குறித்துக் கவலையில்லாதிருப்போமானால், அபாயம் நேரிடுமுன் தகுதியான சமயம்பார்த்து அதை விலக்காதிருப்போமானால், ஊருகிற ஏழைச் செந்துவாகிய எறும்பைப்பார்க்க நாம் அறிவிற் குறைந்தவர்களாவோமே.

நமது வாலிப வயதில் கவலையற்றவர்களா யிருப்போமானால், கடைசியில் விர்த்தாப்பிய மும் மரணமும் நமக்கு முற்படும்பொழுது எத்தனை நிர்ப்பாக்கியராவோம்.

நாம் இப்பொழுது சிறுவரும் பலசாலிகளு மாய் இருக்கிறோம்: ஆதலால், வியாதி உண் டாகும்போது நமக்கு வேண்டிய உதவிகளை எத்தினம் பண்ணிவைப்பதற்கும், நாம் செய் திருக்கிற பாவங்களை மன்னிக்கும்படி கட வுளை நோக்கி வேண்டுதல் செய்வதற்கும் இ துவே தகுதியான சமயம்.

மண்ணால் உருவாக்கப்பட்ட இந்த உடம்பி லிருந்து என் ஆத்துமா மரணகாலத்தில் பி ரிந்துபோகும்பொழுது, நான் மோட்ச அரம னையிற் சேர்ந்து வாசம்பண்ணும்படியாக, ந ல்லொழுக்கத்தைக்குறித்து மேலான புஸ்தக ங்களிற் சொல்லிய முறைமைகளை வாசித்து, அவைகளை நம்பி நடப்பேனாக.

அஙு-வது. முயற்சியின் நலம்.

தனத்திற்கு மூலம் முயர்ச்சி. இந்தப் புத்தி

யைக் கவனித்து, உன் நன்மைக்காக அதை நினைத்துக்கொண்டிருப்பாயாக.

ஒரு குடியானவன் இறந்துபோகும்போது, தன் திராட்சத் தோட்டத்தில் புதையல் இருக்கிறதென்று தன்குமாரருக்குச் சொன்னான். அவன் இறந்துபோனபிறகு, அவன் குமாரர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து, அந்தப் புதையல் எவ்விடத்தில் இருக்கின்றதென்று அவர்களுக்குத் தகப்பன் திட்டமாய்ச் சொல்லாததினால், அதைக் காணும்படிக்கு அந்தத் திராட்சத் தோட்ட மெங்கும் ஆழமாக வெட்டிக் கொத்திப் பார்த்தும், புதையலைக் காணமல், அந்தப் பள்ளங்களைத் தூர்த்துத் திராட்சக்கொடிகளை நட்டார்கள். அந்த வருஷம் அவைகள் இருபது பங்கு அதிக பலன் கொடுத்தன: ஆதலால், பழங்களை விற்றுச் சென்ற செலவெல்லாங் கொடுத்துவிட்டபின்பும், அதிக லாபம் உண்டாயிருந்தது: அப்போது "திராட்சத் தோட்டத்திலே தனம் புதைத்திருக்கின்றது. தோண்டினல் அதைக் காணுவீர்கள்" என்று தங்கள் தகப்பன் தங்களுடனே சொன்னதின் கருத்து, தனத்துக்கு மூலம் முயற்சி ஆத

லால், முயற்சி செய்யுங்கள்; தனவான்களாவீர்கள் என்பதே என்று அறிந்துகொண்டார்கள்.

அக-வது. பல்லி.

இத்தேசத்திலே பல்லிகள் திரளாகவும் விதம் விதமாகவும் உண்டு. அவைகளைச் சாயந்தரவேளைகளில் சுவரிலும் வீட்டின் முகட்டுச்சார்பிலும் காணலாம். அவைகள் மிகவும் ஜாக்கிரதையாகத் தங்களுக்கு இரை தேடுவது வழக்கம். பூச்சிகள் எட்டத்தக்க சமீபத்தில் இருக்கும்பொழுது, பல்லிகள் அவைகள்மேல் விரைவாகப்பாய்ந்து அமர்த்திக்கொள்ளும். சிலவிதப் பல்லிகளைச் சாதுவாக்கி, கையிலே சோறு அள்ளி நீட்டினால், அதை எடுத்துத் தின்னத்தக்கதாக வழக்கப்படுத்துகிறார்கள். பல்லிகள் மறைவான இடங்களில் முட்டையிடும். அந்த முட்டைகள் வெப்பத்தினால் குஞ்சு பொரிக்கும்.

காடுகளில் ஒருவிதப் பருத்த பல்லிகள் உ

ண்டு. அவைகள் மான் நிறமாயிருக்கும். அவைகளைச் சில திருத்தமில்லாத மிலேச்ச சாதியார்கள் கொன்றுதின்பது வழக்கம். காட்டுப்பல்லி மிகவும் சிறந்து சாதுவாயிருக்கின்ற ஜெந்து.

பல்லிச்சாதியைச் சேர்ந்த இன்னும் ஒரு பருத்த ஜெந்து உண்டு. அதின் நீளம் மூன்று முழம். அதற்கு உடும்பு என்று பெயர். அது முட்டைகளையும், பூச்சிகளையும், கனிகளையும் தின்று வளரும்.

அஉ-வது. என் தாய்.

தன் மிருதுவான முலையினால் எனக்குப் பால் ஊட்டி, தன் கைகளில் நான் நித்திரை செய்யும்படி, என் கன்னத்தில் இனிமையான முத்தங்கொடுத்தவள் எவள்? என் தாய்.

நித்திரையானது என் கண்ணைவிட்டு நீங்கிப்போனபொழுது, நான் உறக்கம்கொள்ளும்படி இனிமையான கீர்த்தனைகளைப் பாடி, நான் அழாதபடிக்குத் தாலாட்டினவள் எவள்? என் நற்றாய்.

நான் தொட்டிலில் நித்திரை செய்யும்பொழுது, என்னுடன்கூட இருந்து என் மிருதுவான தலையைக்குறித்துக் கவனமுள்ளவளாய், எனக்காக அன்பின் கண்ணீர்விட்டவள் எவள்? என் அன்னை.

நான் வருத்தத்தினாலும், துன்பத்தினாலும் அழுதபொழுது, துக்கக்குறியையுடைய என் கண்ணைப்பார்த்து, நான் இறந்துபோவேனோ வென்று பயந்து அழுதவள் எவள்? என் மாதா.

நான் விழுந்தபொழுது எனக்கு உதவி செய்யும்படி ஓடிவந்து, இனிமையான கதைகளைச்சொல்லி, என் காயத்தைச் சவுக்கியப்படுத்த என்க்கு முத்தங்கொடுத்தவள் எவள்? என் அருமைத்தாய்.

நான் செபம்பண்ணும்படிக்கும், கர்த்தருடைய பரிசுத்த வாக்கையும், பரிசுத்த நாளையும் நேசிப்பதற்கும், ஞானத்தின் இன்பமான வழியில் நடப்பதற்கும் எனக்குப் போதித்தவள் எவள்? என்னைப் பெற்ற தாய்.

என்னிடத்தில் இவ்வளவு அதிக பட்சமாயிருக்கின்ற உன்னிடத்தில் நான் எப்பொழு

தாவது உருக்கமும், பட்சமும் இல்லாதவனுக நடப்பேனே, என் அன்பான தாயே.

ஆ! இந்த எண்ணத்தை என்னுலே சகிக்கக் கூடாது. கடவுள் நான் சீவனேடிருக்க விருப்பமுள்ளவராயிருந்தால், நீ பட்ட பிரயாசத்திற்கு நான் பிரதிபலன் அளிக்கும்படி விரும்பிக்காத்திருப்பேன், என் மாதாவே.

அங-வது. தேள்.

தேள் என்கிற ஜெந்தை சற்று ஏறக்குறைய நாம் எல்லாரும் பார்த்திருப்போம். சில விதத் தேள்கள் சிறுத்து மான் நிறமுள்ளவைகளாயிருக்கும்; மற்றவைகளோ, பருத்துக் கறுத்திருக்கும். தேளுக்குக் கால் எட்டு, கவைக்கால் இரண்டு, வால் ஒன்று. வால்நுனியில் இருக்கின்ற சிறு முளையில் அதின் விஷம் இருக்கின்றது. தேள்கள் இருண்டு குளிர்ந்திருக்கின்ற இடங்களிற் பதுங்கிக்கிடக்கும். அவைகள் அதிக விரைவாய் ஓடும். ஓடும்பொழுது, வாலை மடக்கி முதுகில் வை

த்துக்கொள்ளும். தங்கள் கவைக்காலினுல் பூச்சிகளைப் பிடித்துத்தின்னும். அகப்பட்ட ஜெந்துகளை வாலாற் கொட்டிக் கொல்லும். சிலவேளை மனுஷரைத் தேள் கொட்டுவதும், புலி முகச்சிலந்தி கடிப்பதுமுண்டு.

அச—வது. "பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதாவே."

பரலோக, பூலோக, பாதாளலோகமாகிய இம் மூன்றுக்கும் கர்த்தத்துவமுடைய மாட்சிமைபொருந்திய கடவுளே, தேவரீர் ஏழைப் பிள்ளையாகிய என்மேல் இரங்கி, எனக்குப் பிதாவாகவும் பிராணநேசராகவும் இருப்பீரா?

நீர் என் பிதாவாயிருக்கிறீரா? அப்படியானுல், அடியேன் உமக்குப் பணிந்து சாந்தகுணமுள்ளவனுயிருக்கவும், மனம், வாக்கு, காயம் இம்மூன்றினுலும் உமக்குத் தொண்டுசெய்து, உமது சித்தத்திற்கு ஏற்க நடக்கவும் அனுக்கிரகம்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

நீரா என்பிதாவாயிருக்கிறீ? அதுமெய்யா

ஞல், நான் என் வாழ்நாட்களின் முடிவிலே உமது சமுகத்திற் சேர்ந்து, என்றைக்கும் உத்தம சற்குணஞயிருக்கும்படியாக என்னை ஏற்றுக்கொள்ளும்.

அரு-வது. வாழை.

வழை யென்பது ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா கண்டங்களின் வெப்பமான தேசங்களிற் சாதாரணமாய் உண்டாகின்றது. அது காற்றினுல் அடிக்கப்படுவதற்குமுன் சிறு கன்ருயிருக்கும்பொழுது மிகவும் சிறந்திருக்கும். அது மினுமினுப்பான நிறமுடையது. வாழையிலை பட்டுப்போல மிருதுவாயிருக்கும். பெரும்பாலும் வாழையின் உயரம் பத்துப் பன்னிரண்டு அடிக்கு அதிகமாயிருக்கும். அதின் உச்சியில் பத்து எட்டு இலைகள் அடர்ந்திருக்கும். அடியிலைகள் சிறந்த மாலைகளைப்போலக் கீழே தொங்கும் நாம் அறிந்த அளவில் வாழை யிலையைப்போல் அத்தனை சிறந்த இலை மற்றொன்றில்லை. சிறு குடிசைக்கு நான்கு புறத்திலும் வா

ழைமரங்களை நட்டிருந்தால், அங்கே வெப்பம் தணிவாயிருக்கும். வாழையிலைகளின் பசுமையான நிறம் கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கும்.

வாழைக்குலைகள் பெரும்பாலும் பருத்திருக்கும். சில குலைகளில் இருநூறு காய் வரையில் உண்டு. ஒரு வாழை வைத்துக் குலை வெட்டுகிற காலத்திற்குள்ளாக, அதைப்போல அத்தனை அதிகமாய்ப் பலன் கொடுக்கிற பயிர் வேறில்லை.

இத்தேசத்திலே வாழைக்காயிற் கறிசெய்து உண்பார்கள். அமெரிகாதேசத்திற் சில இடங்களில் வாசமாயிருக்கிற ஜனங்களுக்கு வாழைப்பழமே முக்கியமான உணவுப்பொருளாம். அது நீர்வற்றி இறுகுமளவும் அவர்கள் அதை அடுப்பிலே சுடவைத்துப் பின்பு தமக்கு வேண்டிய அளவு எடுத்துக் கூழ் காய்ச்சுவார்கள். சில வேளை வாழைப்பழத்தை வெயிலிற் காயவைத்து மா இடிப்பதும் உண்டு. வாழைப்பூவிற் கறிசமைப்பதும் வழக்கம்.

வங்காளத்துப் பாடசாலைகளில் காகிதத்திற்

குப் பதிலாக வாழையிலையில் எழுதுவார்கள். இத்தேசத்தில் எங்கும் வாழயிலை உண்கலமாய் உபயோகிக்கப்படும். வாழை நாறினலும் இலை நரம்பினலும் வடக்கயிறுகளும், சிறு புரிக்கயிறுகளும் திரிக்கப்படும். அவைகளிற் காகிதமும் செய்யலாம்.

அசு—வது. தென்னமரம்.

தெங்கு என்பது அதிகசிறப்பாய் உயர்ந்திருக்கின்ற மரமாம். அதின் உச்சியில் பட்சிகளின் இறகுக்கு ஒப்பான ஓலை மட்டைகள் அடுக்கடுக்காய் இருக்கும். நன்ருய்க் காய்க்கிற மரத்தில் மாசம் ஒன்றிற்குப் பத்துத் தேங்காய் பறிக்கலாம். இளந்தேங்காய் மிகவும் பசுமையாகத் தோன்றும். அதற்குள் இருக்கின்ற இளநீர் அதிக தித்திப்பான பானமாயிருக்கின்றது. வழி நடந்து தாகமா யிருக்கின்றவர்கள் இளநீர்குடித்து இளைப்பாறுவார்கள். முற்றினதேங்காய் நன்ருய் இறுகிப் பழுப்பு ஏறி மிருதுவாயிருக்கின்றது. தேங்காயை மூடியிருக்கின்ற மட்டை தும்பும் நாரும் சேர்ந்ததாயிருக்கின்றது. அந்த நாரி

ஹற் கயிறு திரிப்பார்கள்; பாய் பின்னி அறை வீடுகளில் விரிப்பார்கள்; துடைப்பம் கட்டித் தூசி பெருக்குவார்கள். தேங்காய்ச் சிரட்டைக்குள் வெண்ணிறமான பருப்பு இருக்கின்றது. அந்தப் பருப்பு கறி சமைப்பதற்கும் வேறு உணவுகளைச் செய்வதற்கும் உபயோகமாவதுந்தவிர, அதினுல் எண்ணெயும் ஊற்றப்படும். எண்ணெய்யால் விளக்குத் திரியும் சவர்க்காரமும் செய்யப்படும். தேங்காய்ப் பிண்ணுக்கு மாடுகளுக்கும் கோழிகளுக்கும் தீனுகும்.

தென்னேலையினுல் பருக்கன்பாய் இழைக்கப்படும்; வீடு மூடப்படும்; வேலி அடைக்கப்படும்; தென்னீர்க்கினுலே துடைப்பம் உண்டாக்குவதும் கரப்புக் கட்டுவதும்முண்டு. பாளைவழியாகக் காய்களுக்குச் செல்லும் சாரமானது பானைகளில் இறக்கப்படும். அதற்குக் கள் என்றுபெயர். கள்ளினுற் சாராயம் செய்யப்படும். அப்பம் பொங்குவதற்காக மாவிலே கள்ளுவிட்டுப் பிசைவார்கள். தென்னந் தோட்டத்திற்கு தென்னந்தோப்பென்று பெயர்.

தேங்காய் எண்ணெய் இங்கிருந்து அங்கிலோதேசத்திற்குத் திரளாய் ஏற்றப்படும்.

அஎ-வது. கடவுளின் குடும்பம்.

க-ம். பிரிவு.

வருத்தத்தோடு வேலைசெய்து சீவனம்பண்ணுகின்ற அந்த ஏழைக்குடியானவனுடைய குடிசையைப் பார்த்து வருவோம் வாருங்கள். அதில் வாசமாயிருக்கின்ற மனுஷி வாசலில் உட்காந்து, பஞ்சுநூற்கிறாள். அவளுடைய சிறு பிள்ளைகள் அவளுக்குமுன் இருக்கின்ற புல் நிலத்தில் ஓடி விளையாடுகிறார்கள். பருவமான பிள்ளைகள் தாய் தந்தையருக்குக் கீழமைந்து, அந்தந்தத் தொழிலைப் பழகுவார்கள். அவர்கள் தகப்பன் அந்தக் குடும்பத்தினுள்ள யாவருக்கும் அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரிக்கும்படியாக நாள்தோறும் வேலை செய்வான். அவன் சில வேளை நிலத்தை உழுது பண்படுத்துவான்; சில வேளை விளைந்த தானியத்தை அறுப்பான்; சில வேளை கனிந்த அத்திப்பழங்களை உதிர்த்துவான். வேலை மு

டிந்தபின் வீட்டுக்கு வரும்போது, அவன் பிள்ளைகள் அவனுக்கு எதிர்கொண்டு ஓடுவார்கள். அவன் மனைவி சௌக்கியமான போசனத்தை ஆயத்தம்பண்ணுவாள்.

தாய், தந்தை, பிள்ளைகள் இவர்கள் எல்லாரும் சேர்ந்திருப்பது குடும்பமாம். குடும்பத்தின் தலைவன் தந்தை. பல பெயர் சேர்ந்த குடும்பங்களில் பயிர்ச்செய்கையும், மற்றுள்ள வேலைகளும் அதிகம் வழக்கமாயிருப்பதினால், அந்த வேலைகளைச் செய்யும்படியாக வேலைக்காரர் ஏற்படுத்தப்படுவார்கள். குடும்பத்திலுள்ளவர்கள், வேலைக்காரர் ஆகிய யாவரும் சிலவேளை ஒரே வீட்டில் வாசம்பண்ணுவார்கள். அவர்கள் நாள்தோறும் காலைமாலையில் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்யவேண்டும். அவர்கள் அதிக சம்பந்தமுள்ளவர்களாயிருப்பதினால், பிறரைப்பார்க்கிலும் தமக்குள் ஒருவரையொருவர் அதிகமாய் நேசிக்கவேண்டும். ஒருவன் வியாதியாயிருந்தால், அவனுக்காக எல்லாரும் துக்கிக்கவேண்டும். ஒருவன் சந்தோஷப்பட்டால், அவனுடன் எல்லாரும் கொண்டாடவேண்டும்.

அனேக வீடுகள் ஒன்றோடொன்று தொடுத்துக் கட்டப்பட்டிருக்கும். அனேக குடும்பத்தார்கள் ஒருவருக்கொருவர் சமீபத்திற் குடியிருப்பார்கள். ஒரு ஊரிற் குடியிருக்கும் ஜனங்கள் உல்லாசமாய் உலாவும்பொழுதும், மைதானங்களிலும், கொள்வன விற்பன செய்யப்படுகின்ற கடைத்தெருக்களிலும், நீதி விசாரணை செய்யப்படுகிற ஸ்தலங்களிலும், உற்சவங்களிலும் திரளாய்க் கூடுவார்கள். ஒருவன் உதவியற்ற ஏழையாயிருந்தால், அயலிலுள்ளவர்கள் அவனுக்கு உதவிபண்ணுவார்கள்; துக்கம் கொண்டாடினால், அவன் துக்கத்தை ஆற்றுவார்கள்.

அதோ ஒரு கிராமம். அதைச் சூழ்ந்திருக்கின்ற தோப்புகள் மிகவும்பசுமையாகத் தோற்றுகின்றன. அங்குள்ள கோவிலின் கோபுரம் மரங்களுக்குமேல் உயர்ந்து தெரிகின்றது. குடிச்சனங்கள் மிகுந்திருக்கிற கிராமங்கள் நகரங்கள் என்னப்படும். நகரங்களில் குற்ற விசாரணைசெய்யும் உத்தியோகஸ்தர் இருப்பது வழக்கம்.

பல நகரங்களும் நெடுந்தூரம் பரவியிருக்

கின்ற தேசமும் சேர்ந்தது இராச்சியம் என் னப்படும். இராச்சியமானது பெரும்பாலும் மலைகளாற் சூழப்பட்டிருக்கும். அதில் அங் கங்கே ஆறுகள் ஓடும்; அது கடலை அடுத்தி ருக்கும். அங்கே வாசமாயிருக்கும் குடிகள் ஓரே பாஷைக்காரர் என்னப்படுவார்கள். சத் துருக்களுடன் யுத்தம் நேரிடும்காலத்தில், அ வர்கள் ஒரு கட்சியாய் நின்று சண்டைபண் ணுவார்கள். சமாதானம்பண்ணுவதும் அவ் வாறே நடக்கும். அவர்களை ஆள்கின்றவன் அரசன்.

அஅ-வது. கடவுளின் குடும்பம்.

உம்-பிரிவு.

இந்தப் பூமியில் குடிச்சனம் மிகுந்த பல இராச்சியங்களும், தேசங்களும், தீவுகளும், பரந்த கண்டங்களும், அங்கங்கே வெவ்வேறு அளவான வெப்பம், குளிர்ச்சி இவற்றின் நிலை மையும் உண்டு. இத்தன்மையான பூலோக முழுவதும் கடவுளின் அரசாட்சிக்குட்பட்டி ருக்கின்றது. மேட்டின்மேல் நெருங்கி மொய்

க்கின்ற சிற்றெறும்புகள்போல் பூமியின்மேல் மனுஷர் நெருங்கி வாசமாயிருக்கிறார்கள். வெப்பம் அதிகரித்ததேசங்களில் வாசம் செய்கிறவர்கள் வெயிலினாற் கறுத்திருப்பார்கள். குளிர்ச்சி மிகுந்த இடங்களிற் குடியிருப்பவர்கள் குளிரால் வருத்தம் உண்டாகாதபடி, மிருகத்தின் மயிருடையால் தங்கள் சரீரங்களை மூடிக்கொள்வார்கள். தாகம் உண்டாகும்பொழுது சில தேசத்தார் திராட்சரசத்தைப் பானம் பண்ணுவார்கள்; மறுதேசத்தார் தித்திப்பான இளநீரைக் குடிப்பார்கள். வேறுதேசத்தார்களோ எவர்களுக்கும் பொதுவாய் ஓடுகின்ற ஆற்றுநீரைப் பருகுவார்கள்.

இப்படி வெவ்வேறு தேசங்களிற் குடியிருக்கின்ற மனுஷர் யாவரும் கடவுளின் குடும்பத்தாராயிருக்கிறார்கள். ஒரு இடையனானவன் தன் மந்தையின் ஆடுகளை ஒவ்வொன்றாய் அறிந்திருப்பதுபோல, கடவுளும் தமது குடும்பத்திற் சேர்ந்த மனுஷர்களை ஒவ்வொருவராய் அறிந்திருக்கிறார். அவர்கள் கடவுளை நோக்கி வெவ்வேறு பாஷைகளில் பிரார்த்தனை செய்தாலும், அவர் அவர்கள் செய்யும்

பிரார்த்தனைகளைக் கேட்டு, அவற்றின் பொருளை அறிந்து, அவர்களைக் காப்பாற்றுவார். எத்தனை நீசராயினும் அவர் ஒருவனையும் காப்பாற்ருமல் விடுகிறதில்லை.

காப்பிரிப்பெண்ணே, நீ அடிமைத்தொழில் செய்து வருந்தும்பொழுது, வியாதியினுல் உபத்திரப்படுகின்ற உன் குழந்தைக்காகப் பரிதபித்து அழுகிருய். உன்பரிதாபத்தை யார் பாராமற்போயினும், கடவுள் பார்க்கிருர். உனக்கு யார் இரங்காதிருந்தும், கடவுள் இரங்குகிருர். திக்கற்றுத் தியங்குகின்ற பெண்ணே, ஏன் துன்பப்படுகிருய்! கடவுள் உன்னை அடிமையென்று தள்ளிவிடாமல் உன்பிரார்த்தனைகளைக் கருத்தாய்க் கேட்பார். தாமதிக்காமல் பிரார்த்தனை செய்.

திரளான சேனைகளால் சத்துருக்கள் அஞ்சும்படி செய்து, பெருமையிற் சிறந்து, பல தேசங்களைக் கட்டி ஆளுகின்ற வேந்தனே, உனக்குமேல் ஒருவரும் இல்லையென்று எண்ணி வீம்புபேசுகிருயா? உனக்குமேல் கடவுள் இருக்கிருர். அவருடைய பலத்த கரமானது எப்பொழுதும் உனக்கு நேரே இருக்கி

ன்றது. நீ தீங்குசெய்வாயானால், சந்தேகமின்றி அவர் உன்னைத் தண்டிப்பார்.

இந்தப் பூமியில் வாசம் செய்கின்ற பலசாதிக்காரரே, கடவுளுக்குப் பயந்து நடவுங்கள். மனுஷகுடும்பத்தார்களே, உங்கள் கடவுளின் நாமத்தைச் சொல்லி அவருக்குப் பிரார்த்தனை செய்யுங்கள்.

கடவுள் வேந்தர்க்கு வேந்தனாயிருக்கிறார். வெளிச்சத்தின் கிரணங்களே அவர் கிரீடமாம். அவர் சிம்மாசனம் மோட்சத்தில் இருக்கின்றது. அவர் இராசாதிராசனும் கர்த்தாதிகர்த்தனுமாயிருக்கிறார்; அவரே சர்வ அதிகாரி; அவர் சொற்படி யாவும் நடக்கும். நாம் பிழைப்பதும் இறப்பதும் அவர் சித்தம்போலாகும். அகிலாண்டங்களையும் அவரே அரசாளுகிறார். அவர் முகத்தின் ஒளி அவர் சிஷ்டிகள் மேற் காலுகின்றது.

அகூ—வது. நற்புத்தி.

துன்மார்க்கருடைய பாதையிற் பிரவேசியாதே. தீயருடைய வழியில் நடவாதே.

அதற்கு விலகிவிடு, அதை அணுகாதே, அதற்கு விலகிப் போய்விடு.

என் வாக்குகளைச் சிந்தித்துக்கொள். என் வாக்கியங்களுக்குச் செவியைச் சாய். அவைகள் உன் பார்வைக்கு விலகவிடாதே; உன் இருதயத்திற்குள் அவைகளைக் காத்துக் கொள்.

அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் சீவனும், அவர்களுடைய சருவாங்கத்திற்கும் சொஸ்தமுமாகும்.

சீவன் தோன்றுகிற உன் இருதயத்தை மிகவும் சாக்கிரதையோடே காத்துக்கொள். வாயின் தாறுமாறுகளை உன்னைவிட்டு அகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.

உன்கண்கள் நேராய் நோக்கக்கடவன, உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே பார்க்கக் கடவன.

உன் கால்நடக்கும் வழியை உற்றுப்பார், அப்பொழுது உன் நடைகள் யாவும் ஸ்திரப்படும். வலப்புறமாவது, இடப்புறமாவது சாயாதே. தீமைக்கு உன்காலை விலக்கிவிடு.

அனுபந்தம்.

நிருபம் எழுதுகிற விதம்.

மகன் தகப்பனுக்கு எழுதல்.

மகா கனம்பொருந்திய ஐயா அவர்களுக்கு வந்தனம். தங்கள் உத்தரவின்படி தமிழ்ப் பாடங்களைச் சாக்கிரதையாய்ப் படித்துவருகிறேன். ஆதாரப்புஸ்தகம் முடித்து, இலக்கண இலக்கியங்களைத் தொடங்கப்போகிறேன். எனக்கு நன்னூலும், குறளுநூலையும் வாங்கியனுப்பவேண்டும்.

உபாத்தியாரும், மாணாக்கரும், நானும் சுகமேயிருக்கிறோம். தங்கள் சித்தம் என்பாக்கியம்.

இப்படித் தங்கள் அன்புள்ள குமாரன்.

சென்னப்பட்டணம்.
சனவரி மீ - கஉ.
௲அ௱சு௰௫ } மாசிலாமணி.

தாயாருக்கு மகன் எழுதல்.

அன்புள்ள தாயார் அவர்களுக்குத் தங்கள் பிரியமுள்ள குமாரன் சுந்தரம் வந்தனஞ்செ

ய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பமாவது-வீடுவிட்டு வந்தநாள்முதல் கடவுளுடைய கிருபையினாலும் தங்கள் பட்சமுள்ள வேண்டுதலினாலும் சுகமேயிருக்கிறேன். தாங்கள் எனக்குச் சொன்ன புத்திமதிகளைநினைத்து, தங்களுக்கு விசனம் உண்டாகாதபடிக்கு நடந்து கொள்ளுகிறேன். தாங்கள் என்னைப் பெற்றெடுத்து வளர்த்துப் பட்ட பாடுகளுக்காக என்ன செய்யப்போகிறேன் ? சீக்கிரமாக நல்ல உத்தியோகம் சம்பாதித்து தங்களுக்குச் சவுக்கியத்தாழ்ச்சியில்லாமல் அன்னவஸ்திரங்கொடுத்துக் காப்பாற்றும்படிக்கு விரும்புகிறேன். எனக்கு உண்டாயிருக்கிற இந்தக் கோரிக்கை நிறைவேறும்படி ஆண்டவர் அனுக்கிரகஞ்செய்யவேண்டும்.

இப்படிக்கு

(தேதி.) **சுந்தரம்.**

தமயனுக்குத் தம்பி எழுதல்.

பிரியமுள்ள அண்ணா அவர்களுக்குத் தம்பி அமிர்தம் வந்தனஞ்செய்து எழுதிக்கொள்

ளுகிற தென்னவென்றால்—தங்கள் கட்டளைப் படியே பயிர்வேலை தவக்கமில்லாமல் நடந்து வருகிறது. இதை அடியேன் விசாரணை செய் துவருகிறதுமல்லாமல், தங்கை மாணிக்கத்து க்கும் பாடஞ்சொல்லிக்கொண்டுவருகிறேன். தாங்கள் கொடுத்தனுப்பின புஸ்தகத்தை மு ழுதிலும் வாசித்து அநேக நூதனமான கா ரியங்களை அறிந்துகொண்டேன். பூகோளசா ஸ்திரம் ஒன்று வேண்டியிருக்கிறது. இவ்வி டத்தில் அனைவரும் க்ஷேமம்.

இப்படிக்குத் தங்களுக்குப் பிரியமாய்

(தேதி.) நடந்துகொள்ளும் தம்பி.

அமிர்தம்.

தம்பிக்குத் தமயன் எழுதல்.

தம்பி அமிர்தத்துக்குத் தேவ ஆசீர்வாதம் உண்டாவதாக, நீ அனுப்பின காகிதம் வந்து சேர்ந்து சகல செய்தியும் அறியலானேன். எ ன் மனதிற்குச் சந்தோஷமும் ஆறுதலும் உ ண்டாயின. வீட்டின் சுகசெய்திகளை அடிக் கடிகேட்க விரும்புகிறேன். பூகோளசாஸ்தி

ரம்ஒன்று முத்தையன் வசமாய் அனுப்பியி ருக்கிறேன்.

சாஸ்திர விஷயங்களை அறியவேண்டியதும ல்லாமல், பரம நன்மைகளை அளிக்கும் ஞா ன விஷயங்களையும் முக்கிய ஆராய்ச்சி செ ய்து, காரணகுருவை வழிபட்டு, திருவுளத் தை அறிந்து இன்பம் பெறுவாயாக.

இப்படிக்கு உன்வாழ்வை விரும்புகிற

(தேதி.) தமயன்.

முத்துசாமி.

சினேகிதனுக்கு எழுதல்.

என் பிராண சினேகிதராகிய பரஞ்சோதி பிள்ளையவர்களுக்கு கனகசபை எழுதிக்கொ ள்ளுகிறதென்னவென்றால் — நான் சென்னப ட்டணம் விட்டுத் தஞ்சாவூருக்கு வந்தபிற் பாடு அனேகந்தரம் உமக்கு நிருபம் எழுத வேண்டுமென்று நினைத்தும், சந்தர்ப்பமில்லா மற்போயிற்று. நாம் பள்ளிக்கூடத்தில் இ ருந்தபோது வாசித்த பாடங்களையும், கே ட்ட கேள்விகளையும், ஆராய்ந்த நூல்களையும்,

நாம் செய்த சம்பாஷணைகளையும் அடிக்கடி நினைத்துச் சந்தோஷிக்கிறேன். பள்ளிக்கூடத்தில் தொடங்கின நம்முடைய சினேகம் என்றும் நிலை நிற்கவேண்டுமென்று விரும்புகிறேன். இவ்விடத்தில் உத்தியோகமாயிருக்கிறேன். தகுந்த சம்பளமுமுண்டு. நீர்வாசித்துக் கேட்டறியும் நூதனமான விஷயங்களை அடிக்கடி எனக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கிலீஷிலுள்ள பற்பல தேச சரித்திரங்களை வாசித்து வருகிறேன். நம்முடைய தேசசரித்திரத்தை நன்றாய் விரும்புகிறேன். நம்முடைய தேசத்தாருக்கு உபயோகமாக ஏதாவது ஒரு நல்ல நூலை எழுதவேண்டுமென்றும் விரும்புகிறேன்.

(தேதி)

இப்படிக்கு
கனகசபை.

சினேகிதனுக்கு உத்தரவு எழுதல்.

பிரியமுள்ள கனகசபை எழுதியனுப்பின நிருபம் வந்துசேர்ந்தது. அது தீந்துபோகிற பயிர்மேல் பெய்த மழைபோலிருந்தது.

உம்முடைய கையெழுத்தை நான் கண்டவுடனே உம்மைக் கண்டது போலாயிற்று. நீர் போனபிற்பாடு உம்மை அடிக்கடி நினைத்ததுமன்றி, உம்மைக் கனவிற் கண்டதுமுண்டு. நீர் தஞ்சாவூருக்குப் போனபின் என் கொள்கையிலும் நிலைமையிலும் நேரிட்ட மாறுதலினால் நீர் எனக்கு எழுதமாட்டீரென்று நினைத்தேன். "இருதயத்தின் பரிபூரணத்தினால் வாய் பேசுமென்பதும்," "பூரண அன்பு பயத்தை நீக்கும்" என்பதும் முதனூல் மொழிகள். அவைகளின்படியே உம்முடைய அன்பு பூரணமுள்ளதென்று விளங்குகிறது. பற்பல தேசசரித்திரங்களை வாசிக்கிறதினால், பற்பல ஆசாரங்களும், கொள்கைகளும், வழக்கங்களும் விளங்கும் சகல சரித்திரங்களிலும் யூதருடைய சரித்திரம் சிறந்ததென்றும், மனிதர் பேசாதவண்ணமாய்ப் பேசினவருடைய மொழியினால் ஒழிய, வேறொன்றாலும் மனதுக்குத் திர்ப்தி இல்லையென்றும் நான் உமக்குச் சொல்லவேண்டியதில்லை.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்."

நீர் போனபின்பு எனக்குக் கலியாணம் நட

ந்தது. என் மனதுக்கேற்ற மனைவியை விவாகம்பண்ணினேன். தேவ கடாட்சத்தால் புத்திரபாக்கியமுமுண்டு.


சென்னபட்டணத்தில் நடக்கிற காரியங்களைத் தினவர்த்தமானி முதலான பத்திரிகைகளினால் நீர் அறிந்துகொள்ளலாம். சாஸ்திரப் பள்ளிக்கூடங்களும், புகைவண்டியோடும் இருப்புவழியும், மின்னல் தபாலும், யாவரும் பார்க்கத்தக்க பல பதார்த்தங்களுள்ள மூசியம் என்ற இடமும் இவ்விடத்து நூதன விசேஷங்கள். இவைகளைக்குறித்து இப்பொழுது எழுதமுடியாது. இவைகளை நீர் வந்து கண்ணாலே பார்க்கிறதுமல்லாமல், உம்மைக் காண ஆவலாயிருக்கிற என்னையும் நீர் வந்து பார்க்கும்படி விரும்புகிறேன்.

இப்படிக்கு சகல ஆசீர்வாதங்களும் உமக்கு உண்டாகும்படி வாழ்த்துகிற உமது பிரியமுள்ள நேசன்,

தேதி பரஞ்சோதி.

பலநிறங்களும், அளவுசாஸ்திரத்திற்குரிய வடிவங்களும்.

கோடு—உம்.




கோணம்.



நேர்கோணம்.




முக்கோணம்.




சிவப்பு, மாதுளம் பூச்சிவப்பு.

சதுரம்.



மஞ்சள், பூசனிப்பழமஞ்சள்.

சக்கரம்.



நீலம், வானநீலம்.



பொன்மை

சக்கரார்த்தம்
விட்டம்.

பச்சை, புல் பச்சை.



அண்டம்

இந்திரநீலம், ஊதா

வான வில்லீல் தோன்றும் பலவகைப்பட்ட நிறங்களெல்லாம் சூரிய கிரணங்கள் மழைத் துளிகளில் பட உண்டாகும். அவை சிவப்பு பிங்களம், மஞ்சள், பச்சை, நீலம், இந்திரநீலம், ஊதா, என்னும் ஏழு வகையாம்.

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ரு	கஎ	கூடுக்கு	கூட்டிற்கு.
உஅ	கச	உங்களுக்கு	உமக்கு.
ங0	கங	அதிகப்	அதிக.
ஙஉ	சாக	கரி எறும்பு	கரியெறும்பு.
ஙங	கசா	கபிலை	கபில.
சஅ	ரு	வேலைகார ரோடும்	வேலைக்காரரோடும்.
ருஅ	கசா	,	
சாசா	கரு	.	;
எஉ	கஉ	இமையமலை	இமயமலை.
எங	சா	ஒருதுறை	ஒரு துறை.
எரு	கக	பெறுச்கி	பொறுக்கி.
அ0	ங	கண்டத்தில் இருக்கின்றது	கண்டத்தைச் சேர்ந்தது.
அக	உ	ஐஸ்பரியமு	ஐசுவரியமு.
கூங	உஉ	யோசித்துத்	யோசித்து,
கூஅ	கூ	தலையைந சுக்கும்படி	தலையை நசுக் கும்படி.
ககசா	கரு	செல்லிற்று	சொல்லிற்று.
கஉ0	சா	அவையவங் களும்	அவயவங்களும்.
கஉக	க	சிறப்புகளைக	சிறப்புகளைக்.
கஉரு	அ	வெண்செவப்பு	வெண்சிவப்பு.
கஙக	உக	மானம்	சமானம்.
கச0	கூ	ரெட்டி	ரொட்டி.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௪௮	௪	போழுது	பொழுது.
௧௫௪	௧0	வாலைமரக்	வாலை மரக்.
௧௬௪	௨௨	முயர்ச்சி	முயற்சி.
௧௬௮	௧௪	என்க்கு	எனக்கு.
௧௬௯	௧௧	ஜெந்தை	ஜெந்துவை.
௧௭0	௧0	பாதாள லொக	பாதாளலோக.
௧௭௧	௮	வழை	வாழை.
௧௭௨	௧௨	அமெரிகா	அமெரிக்கா.
௧௭௩	௨	வாழயிலை	வாழையிலை.
,,	௩	நாறினாலும்	நாரினாலும்.
௧௭௪	௧௨	இளைக்க	முடைய.
,,	௧௫	கட்டவதும்	கட்டுவது.
௧௭௫	௨௨	உதிர்த்து வான்	உதிர்ப்பான்.
௧௮0	௧௨	கட்வுள்	கடவுள்.

1922 G 9992

2.70

SECOND BOOK

OF

LESSONS

FOR THE USE OF SCHOOLS.

TAMIL SERIES.

PUBLISHED BY ORDER OF

THE DIRECTOR OF PUBLIC INSTRUCTI

இரண்டாம் பாடப் புஸ்தகம்.

இ௸

துரைத்தனத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட

பாடசாலைகளில் கற்கிற மாணுக்கருக்க

செய்யப்பட்டது.

MADRAS.